மறுபடியும் மல்கியா



வால்டேர் A லிக்லி

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

மறுபடியும் மல்கியா

(MALACHI - LESSONS FOR TODAY)

வால்டர் எ. லிக்லி
புதிய தலைமுறை விசுவாசிகளுக்காக
ரோஜர் பி. டேனியல் அவர்களால் தொகுக்கப்பட்டது
மொழியாக்கம்: டேனியல் ஜெயராமன்

~~₹40.00~~

WORDS OF LIFE
BOX 26744, KHAR, MUMBAI - 400 052.

பொருளடக்கம் பக்கம்

முன்னுரை	1
அத்தியாயம் 1	5
அத்தியாயம் 2	11
அத்தியாயம் 3	38
அத்தியாயம் 4 (இரகசிய வருகையும் கர்த்தரின் பிரசன்னமாகுதலும்)	94
சபையானது கொடிய உபத்திரவத்தின் வழியாகக் கடந்து செல்லாது	109
ஆயிரம் வருட அரசாட்சி	116
இறுதியாகச் சில வார்த்தைகள்	124
நாம் கற்றுக்கொள்ள வேண்டியவை	126

முன்னுரை

மல்கியா தீர்க்கதரிசி பழைய ஏற்பாட்டை ஒரு இறுதிக்குக் கொண்டு வருகிறார். கி.பி.400-ல் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த இஸ்ரவேலருக்கு அவர் 'தேவதூதை' தருகிறார். இடைவிடாமல் பாவஞ்செய்து, விக்கிரக ஆராதனை செய்ததன் நிமித்தம் இஸ்ரவேலர் பாபிலோனிய சிறையிருப்புக்கு தேவனால் அனுப்பப்பட்டிருந்தனர். சிறையிருப்புக்குப் பின் தீர்க்கதரிசனம் உரைத்த மூன்று தீர்க்கதரிசிகளுக்குள் இவரும் ஒருவர். இவரது தீர்க்கதரிசனம் பழைய ஏற்பாட்டின் இறுதிப் பகுதியிலுள்ளது. ஆகாய், சகரியா தீர்க்கதரிசிகள் வாழ்ந்த காலத்தில் இவரும் வாழ்ந்து கொண்டிருந்தார். இதை எஸ்றா 5:1 ; 6:14 - வசனங்களி லிருந்து அறிந்து கொள்ளலாம். பழைய ஏற்பாட்டின் கடைசித் தீர்க்கதரிசி இவர்தான்!

இஸ்ரவேலர் எகிப்திலிருந்து கானானுக்குப் போகும் போது, வனாந்தர யாத்திரையில் நடந்த நிகழ்ச்சிகளை ஆதாரமாக்கி, 1கொரிந்தியர் 10:11 ; ரோமர் 15:4 வசனங்களின்படி விசுவாசிகளின் பிரயோஜனத்திற்காகவும்,எச்சரிப்புக்காகவும் அநேகர் செய்திகளைக் கொடுப்பதுண்டு, எழுதுவதுண்டு. சிறையிருப்பிலிருந்து இஸ்ரவேலர் திரும்பி வந்த பிறகு எஸ்றா, நெகேமியாவின் நாட்களில் நடந்த நிகழ்ச்சிகளைக் குறித்தும் பிரசங்கிப்போர் அநேகருண்டு. சபையை விசுவாசிகள் கட்டவும், பாதுகாக்கவும் தூண்டும்படி, நெகேமியா எருசலேமின் மதிலைத் திரும்பக் கட்டின நிகழ்ச்சியைக் குறித்து அவர்கள் பேசுவதும், எழுதுவதும் உண்டு.

ஆனால் மல்கியா தீர்க்கதரிசியின் புத்தகத்தில் உள்ளவைகளைக் குறித்து அநேகமாக யாரும் அதிகமாகப் பிரங்கிப்பதில்லை.எஸ்றா, நெகேமியாவின் நாட்களில் இஸ்ரவேலில் ஒரு பெரிய எழுப்புதல் உண்டாயிற்று. ஆனால் அவர்கள் வெகு விரைவில் ஆவிக்குரிய வாழ்வில் தரம் தாழ்ந்து நல்லொழுக்கம் அற்றவர்கள் ஆனார்கள். மல்கியாவின் காலத்தில் இஸ்ரவேல் இருந்த நிலைமைக்கும், இன்று திருச்சபை இருக்கும் நிலைமைக்கும் இடையே பெரிய வேறுபாடில்லை. எனவே ஜெபத்துடனும், மிகுந்த கவனத்துடனும் மல்கியாவின் புத்தகத்தைத் தியானிப்பது நல்லது.

வேத வசனத்தைக் கவனமாகப் படித்து தியானிக்கும் அனைவரும் மல்கியாவின் காலத்தில் இஸ்ரவேல் எப்படி இருந்ததோ, அப்படியேதான், அநேக விசுவாசிகளின் தனிப்பட்ட வாழ்வும், உள்ளூர் சபையும், இருப்பதை அறிந்து கொள்ளலாம்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் கூடி, அவருடைய நாமத்தை மறுதலியாமல் கைக்கொள்ளும் விசுவாசிகளும் உண்டு. அவர்கள் மனிதனுடைய கற்பனைகளையும், பரம்பரை பரம்பரையாகக் கைக்கொள்ளப்படும் சடங்காச்சாரங்களையும் வெறுத்து ஒதுக்கினவர்கள். (2 தெசலோனிக்கேயர் 2:15 ; வெளிப்படுத்தின விசேஷம் 3:8). வேறு விதமாகக் கூறினால், *"மீந்திருக்கிறவர்களுக்குள் மீந்திருக்கிறவர்கள்"* அவர்களே!

மல்கியாவின் தீர்க்கதரிசனத்தைத் தியானிக்கும் முன்பு இஸ்ரவேலின் சரித்திரத்தையும், அவர்கள் அடைந்த விடுதலையையும், அதைத் தொடர்ந்து நடந்த நிகழ்ச்சிகளையும் குறித்துச் சுருக்கமாகக் காண்போமா? அத்துடன் அதற்கு இணையாக விசுவாசியின் வாழ்வில் நடந்த, நடக்கும் நிகழ்ச்சிகளையும் குறித்துத் தியானிப்போமா?

இஸ்ரவேல் "ஆபிரகாமுக்குள்" அழைக்கப்பட்டது. விசுவாசி "கிறிஸ்துவுக்குள்" தெரிந்தெடுக்கப்பட்டவன். (எபேசியர் 1:4) பார்வோனின் அடிமைத்தனத்திலிருந்து பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தத்தின் மூலம், கர்த்தருடைய வல்லமையுள்ள புயத்தால் இஸ்ரவேல் மீட்கப்பட்டது போல, விசுவாசியும் கிறிஸ்துவின் இரத்தத்தால் மீட்கப்பட்டவன். தேவனுடைய நேரடிப் பார்வையின் கீழ் இஸ்ரவேல் வழி நடத்தப்பட்டது, போஷிக்கப்பட்டது, பாதுகாக்கப்பட்டது. வனாந்தர வழியாக தேவன் அவர்களைக் கானானுக்குள் கொண்டு வந்தார். அவர்களுடைய சத்துருக்களைத் தாழ்த்தி அவர்களை உயர்த்தினார். தங்கள் சுதந்தர வீதத்தைத் தெரிந்து கொண்டு அவர்களும் செழிப்படைந்தனர். (யாத்திராகமம் முதல் யோசுவா வரை)

ஆனால் அவர்களோ அவரைக் கைவிட்டனர். அவருடைய பிரமாணங்களை உதறித் தள்ளிவிட்டு, விக்கிரகங்களை ஆராதித்தனர். துன்பமும், துயரமும் அவர்களைத் தொடர்ந்தன. மாறி, மாறிச் சத்துருக்களின் கையில் அவர்கள் அகப்படுவதும், தேவன் அவர்களை விடுவிப்பதுமாகச் சரித்திரம் தொடர்ந்தது. ஆவிக்குரிய வாழ்வில் அவர்கள் வீழ்ந்து போனபடியால், எதிரிகள் அவர்களைத் தாழ்த்துவது எளிதாக இருந்தது. வறுமையும், துயரமும் தொடர்ந்து அவர்களைப் பிடித்துக் கொண்டன. அவர்கள் தேவனை நோக்கிக் கூப்பிடும் போதெல்லாம், அவர் ஒரு இரட்சகனை அவர்களிடம் அனுப்பினார். நியாயாதிபதிகளின் புத்தகத்தில் இதைக் காணலாம்.

சிறையிருப்புக்குப் போகும்வரை ராஜாக்களின் நாட்களிலும் இந்நிகழ்ச்சி தொடர்ந்தது. 2 ராஜாக்களின் புத்தகத்தில் நாம் காண்கிறபடி, பிரிந்து போன இரு ராஜ்யங்களும் சிறையிருப்புக்கு உள்ளாயின. எஸ்றா, நெகேமியாவின் காலத்தில் அவர்கள் தாய்நாட்டிற்குத் திரும்பி வந்தார்கள். ஓர் ஆவிக்குரிய எழுப்புதலும், ஆதிநிலைக்கு ஏகும் ஆவலும் அவர்களிடையே காணப்பட்டது.

இத்தகைய நிகழ்ச்சிகள் விசுவாசியின் தனிப்பட்ட வாழ்விலும், கூட்டாகச் சபையிலும் காணப்படுகின்றன. இஸ்ரவேலரின் வாழ்க்கைக்கு ஒப்பாகச் சபையின் சரித்திரத்தில் *"ஓர் இருண்ட காலம்"* இருந்தது. சத்தியத்தின் ஒளி முற்றிலுமாக மறைக்கப்பட்டிருந்த நாட்கள் அவை! இடைக்கிடையே சில நல்ல ராஜாக்கள் ஆவிக்குரிய நிலைமையை இஸ்ரவேலில் சீர்படுத்தியது போல, சபையின் சரித்திரத்திலும் அவ்வப்பொழுது சில மறுமலர்ச்சிகளும் எழுப்புதல்களும் நிகழ்ந்ததுண்டு. எசேக்கியா, யோசியா போன்றோர் செய்த சேவைக்கொப்பாகச் சில ஊழியர்கள் சபைக்குச் சேவை செய்தனர்.

ராஜாக்களின் நாட்களிலேயே "சிறையிருப்பு" நடந்தது. இஸ்ரவேல் தேசத்தின் மேல் மௌனம் இறங்கியது. சிறையிருப்பின் காலத்தில் என்ன நடந்தது என்பதைக் குறித்து வேதாகமம் அதிகமாகக் கூறவில்லை.அப்போது சில தீர்க்கதரி சிகள் உரைத்த தீர்க்கதரிசனங்களிலிருந்து ஒரு சில விவரங்களை மட்டுமே நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது.

சிறையிருப்பிலிருந்து திரும்பி, ஆலயத்தைக் கட்டி தேவனை ஆராதித்த இஸ்ரவேலர் எவ்வளவு விரைவாக விழுந்து போனார்கள் என்பதை மல்கியாவின் புத்தகத்திலிருந்து நாம் தெரிந்து கொள்ளலாம். எஸ்றா, நெகேமியாவின் நாட்களில் உண்டான எழுப்புதலுக்கு ஆயுள் குறைவாகவே இருந்தது.

சபையின் சரித்திரத்திற்கு இதுவும் மாதிரியாக அமைந்துள்ளது. கடந்த 170 வருடங்களில் நடந்த சரித்திர நிகழ்வுகள் இதற்குச் சான்றாகும். சபையின் மீது ரோமக் கத்தோலிக்கர்கள் செலுத்திய ஆதிக்கம் சபையின் "இருண்ட காலமாகும்". எஸ்றா, நெகேமியாவின் காலத்தில் நடந்ததைப் போல, சபையில் பிராட்டஸ்டன்டு மறுமலர்ச்சி உண்டாயிற்று. ஆனால் அதிதுரிதமாக அது தன் "பெயரை" இழந்தது. மறந்தும் போயிற்று. (பிராட்டஸ்டன்ட் என்பது 'Protest'

எனும் வார்த்தையை மூலமாகக் கொண்டது. அவர்கள் எதை, யாரை இன்று எதிர்க்கிறார்கள்? - பாவத்தையோ, துர்உபதேசத்தையோ, விக்கிரக ஆராதனைக்கு வக்காலத்து வாங்குபவர்களையோ இவர்கள் எதிர்ப்பதோ, மறுப்பதோ உண்டா? (வெளிப்படுத்தின விசேஷம் 3:1-2).ஆவிக்குரிய வீழ்ச்சி அங்கும் தொடர்ந்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டு உதயமான போது ஓர் எழுப்புதல் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. சபைக்குரிய சத்தியங்கள், பரிசுத்த ஆவியானவர், கிறிஸ்துவின் தலைமைத்துவம், அனைத்து விசுவாசிகளும் ஆசாரியர்கள் எனும் உண்மை, வேதவசனத்தின் ஆத்தும உணர்ச்சி, கர்த்தருடைய இரண்டாம் வருகை, தீர்க்கதரிசனங்களின் சரியான விளக்கம் போன்றவை அநேக நாடுகளில் மடை திறந்த வெள்ளம் போல் விசுவாசிகளைச் சென்றடைந்தன.இச்சத்தியங்களால் உண்டான எழுப்புதல் ஆயிரக்கணக்கானோரை புதிய ஓர் விடுதலைக்குள்ளும், வேதவசனத்தில் மகிழ்ந்து களிகூருவதற்குள்ளும் கொண்டு சென்றது. கர்த்தருடைய நாமத்திற்கான சாட்சி எங்கும் பரவிற்று. விசுவாசிகள் வேத வசனத்திற்கு முதலிடம் அளித்து, அதன்படி வாழ முற்பட்டனர்.

ஆனால் இந்த உந்துதலும் அநேக வருடங்கள் நீடிக்கவில்லை. வல்லமையோடு இயங்கிய உள்ளூர் சபைகள் பலவீனப்பட்டன. வேத வசனத்தை வல்லமையோடு வியாக்கியானம் செய்பவர்களைக் காண்பது அத்தி பூத்தாற்போல் ஆயிற்று. ஏன் இந்த நிலைமை ஏற்பட்டது?அதற்கான காரணங்களை மல்கியாவில் காணப்படும் இணையான காரணங்கள் மூலம் அறிந்து கொள்ளலாம். மல்கியாவின் நாட்களில் “ மீந்திருக்கிறவர்கள் ” சிலர் இருந்ததைப் போல, இன்றும் மறுபடியும் பிறந்தவர்களுக்குள், “நாம் ஒரு சிலராவது மீந்திருக்கிறவர்களாய் இருக்க வேண்டுமே” என வாஞ்சிப்போர் சிலர் நமக்குள்ளும் உண்டு.

அத்தியாயம் - 1

என் கனம் எங்கே? (மல்கியா 1:1-6)

இஸ்ரவேலின் சரித்திரத்தோடு இன்றைய தேவஜனங்களின் நிலைமையை ஒப்பிட்டு, இவ்விரண்டும் ஒரே போல இருப்பதைக் கண்டோமல்லவா? "சிறையிருப்பு" சபையின் "இருண்ட காலத்திற்கு" ஒப்பாயிருக்கிறது. எஸ்றா,நெகேமியாவின் காலத்தில் இஸ்ரவேலில் உண்டான எழுப்புதல், தேவனுடைய மனுஷர்கள் சிலர் மறைக்கப்பட்ட சத்தியங்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்து தேவனுடைய பிள்ளைகளை ஒளியேற்றியதற்கு ஒப்பாக இருக்கிறது. சத்தியத்தை வாழ்வில் கடைப்பிடிக்கும்படி தேவ ஜனங்களுக்கு அன்று உற்சாகம் ஊட்டப்பட்டது. இஸ்ரவேல் மறுபடியும் விழுந்து போனது போல, தேவனுடைய பிள்ளைகளும் மறுபடியும் விழுந்து அனலுமின்றிக், குளிருமின்றி ஆகிவிட்டனர். வைராக்கியத்தோடு, முகத்தை நோக்காமல் வல்லமையோடு வியாக்கியானம் செய்வோரை விரல்விட்டு எண்ணிவிடலாம். பரிசுத்தவான்களின் ஆத்துமாக்களில் இன்று ஆவிக்குரிய வறுமை தலை விரித்தாடுகிறது. ஏனிந்த நிலைமை? ஏன்? ஏன்? இதற்கான விடையை "மல்கியா"வில் காணலாம். " பூர்வ நாட்களிலும், முந்தின வருஷங்களிலும் " (மல்கியா 3:4) யூதா இருந்தது போல, சபையும் ஆதிநிலைக்கு ஏகவேண்டுமானால், அது விழுந்து போன காரணத்தைக் கண்டுபிடித்தே ஆகவேண்டும்.

ஒரு நீண்ட பகலின் மாலை வேளைக்கு "மல்கியாவை" ஒப்பிடுவதுண்டு. மகிமையான ஓர் காலைப் பொழுது வரப் போவதற்கும் அதை ஒப்பிடுவதுண்டு. மல்கியாவின் நான்கு அதிகாரங்களில் இதனைக் காணலாம்.

மல்கியா தீர்க்கதரிசியைப் பற்றிய விவரங்களோ, இந்நூல், எழுதப்பட்ட தேதியோ எங்கும் குறிப்பிடப்படவில்லை. எனினும் எஸ்றா 5:1-ல் ஆகாய், சகரியாவைக் குறித்து எழுதப்பட்டுள்ளதால், மல்கியா அவர்களைத் தொடர்ந்து தீர்க்கதரிசனம் உரைத்திருக்கக்கூடும். அந்த யுகத்திலிருந்த தீர்க்கதரிசிகளின் வரிசையில் இவர் கடைசித் தீர்க்கதரிசி ஆவார். தானியேலின் " எழுபது வாரங்களில் " முதல் வாரம் மல்கியாவோடு முற்றுப் பெற்றது என்பது சில வேதபண்டிதர்களின் கருத்து (தானியேல் 9). மறைமுகமாக மல்கியா கடந்த காலத்தையும், நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் எடுத்தாள்கிறார்.

கர்த்தருடைய பாரம்

"கர்த்தர் இஸ்ரவேலுக்குச் சொன்ன வார்த்தையின் பாரம்" (1:1).என்ன ஓர் அதிரடியான ஆரம்பம்! கலகமும், கவனக்குறைவும், கர்த்தரைக் கனம் பண்ணாத தன்மையும் உள்ள தேவனுடைய

ஜனங்கள் கர்த்தருக்குப் பாரம்தானே? அன்று அவர்கள் எப்படியோ, இன்றும் தேவனுடைய பிள்ளைகள் அப்படியே!

இஸ்ரவேலரின் நிலைமையை அவர்களுடைய பின்னணியிலிருந்து அறிந்து கொள்ளலாம். வருடக் கணக்காகப் பாவத்தின் மேல் பாவத்தைச் செய்தபடியால், எழுபது வருடங்கள் அவர்கள் சிறையிருப்புக்குள்ளாக வேண்டியிருந்தது (2ராஜாக்கள்25; எரேமியா 16:11-13; 25:12; 29:10; 27:22). தேவன் அவர்களுடைய பிதாக்களோடு கெஞ்சிப் பார்த்தார். உதாரணமாக எரேமியா 6:16 ; 7:23-24 வசனங்களைப் பாருங்கள். "வழிகளிலே நின்று, பூர்வ பாதைகள் எவை என்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து அதிலே நடவுங்கள்...... அவர்களோ நாங்கள் அதிலே நடக்க மாட்டோம் என்கிறார்கள் ..... என் வாக்குக்குச் செவிகொடுங்கள். அப்பொழுது நான் உங்கள் தேவனாயிருப்பேன். நான் உங்களுக்குக் கற்பிக்கும் எல்லா வழியிலும்...... நடவுங்கள்...... அவர்களோ அதைக் கேளாமலும், தங்கள் செவியைச் சாயாமலும் போய்.......... முன்னிட்டல்ல பின்னிட்டே போனார்கள்".

நாடு கடத்தப்பட்ட நிலையிலேயே அவர்களுடைய பிதாக்களில் அநேகர் மரித்துப் போனார்கள். புதிய தலைமுறையினரும் அவர்களுடைய வழியையே பின்பற்றி நடந்ததில் வியப்பொன்றும் இல்லை. எஸ்றா, நெகேமியாவின் காலத்தில் எழுப்புதல் ஏற்பட்டும் பின்மாறிப் போனார்கள். அந்த எழுப்புதல் அற்ப ஆயுள் உள்ளதாயிருந்தது.

எனினும் கர்த்தர் அவர்களை நேசித்தார்

தேவன் தமது அன்பை உறுதியளிப்பதிலிருந்து மல்கியா தனது தீர்க்கதரிசனத்தைத் தொடங்குகிறார். "நான் உங்களைச் சிநேகித்தேன்" (1:2) கர்த்தர் இப்படிக்கூறிய போது அவர்களுடைய மறுமொழி என்ன? " எங்களை எப்படிச் சிநேகித்தீர்? " கடந்த காலச் சரித்திரமும், நிகழ்காலத் தரித்திரமும் அவர்களை இப்படிக் கேட்கச் செய்தன. செழிப்பு மிகுந்த பாபிலோனில் சிறையிருப்பின் போது அவர்கள் பிறந்தனர்.இப்போது இடிக்கப்பட்ட தேவாலயமும், பாழாய்க் கிடக்கும் தெருக்களும் உள்ள எருசலேமிற்குத் திரும்ப வந்திருக்கிறார்கள். தேவன் தங்களை நேசிக்கிறார் என்பதற்கான ஒரு சான்றும் அவர்கள் கண்களில் தென்படவில்லை. ஆனால் அவரோ தாம் இன்றும் அங்கிருப்பதாக உறுதிபடக் கூறுகிறார். அவர்களுடைய பாவமோ, பிதாக்களுடைய பாவமோ தேவன் அவர்களை நேசிப்பதைத் தடை செய்ய முடியவில்லை. அவர்களைக் குறித்தும், அவர்களுடைய எதிர்காலத்தைக் குறித்தும் அவருக்கு ஓர் நோக்கம் உண்டு! ஆனால் அவர்களுடைய முரட்டாட்டமும்,மரியாதையற்ற தன்மையும் 1- ஆம் அதிகாரத்தில் வெளிப்படையாகத் தெரிகிறது.

6-ஆம் வசனத்தில், "என் கனம் எங்கே"? என்று தேவன் கேட்கிறார். தமது நாமத்தை அசட்டை பண்ணும் ஆசாரியர்களிடம் அவர், "எனக்குப் பயப்படும் பயம் எங்கே?................. நீங்கள் கண் ஊனமானதைப் பலியிடக் கொண்டு வந்தாலும் அது பொல்லாப்பல்ல; நீங்கள் கால் ஊனமானதையும், நசல் பிடித்ததையும் கொண்டு வந்தாலும் அது பொல்லாப்பல்ல என்கிறீர்களே. அதை நீ உன் அதிபதிக்குச் செலுத்து; அவன் உன் மேல் பிரியமாய் இருப்பானோ? உன் முகத்தைப் பார்ப்பானோ" என்று கேட்கிறார் (1:7-8). தங்களுக்கு வேண்டாததை அவர்கள் தேவனுக்குப் படைத்தார்கள். சற்றேனும் கவனமின்றி, எதையாவது செய்தால் போதும் எனும் மனநிலையோடு தேவனுக்கு அசுத்தமான அப்பத்தைப் படைத்தார்கள். அது தேவனை அவமரியாதை செய்வதாகும். அதை அவர் சொல்லவும் செய்கிறார். ஒரு அதிபதியிடம் அவர்கள் இப்படி நடந்து கொள்ள மாட்டார்கள். அப்படிச் செய்வது அதிபதிக்குப் பொருந்தாது. ஆனால் தேவனுக்கு ஒவ்வாத செயல்களைத் துணிகரமாக அவர்கள் செய்தார்கள்.

6-ஆம் வசனத்தில் கர்த்தருடைய நாமம் அசட்டை பண்ணப்படுவதைக் குறித்து வாசிக்கிறோம். அசட்டை பண்ணுவது என்றால் ஒன்றின் விலையைக் குறைத்து மதிப்பிட்டு, அப்படிச் செய்வதால் உண்டாகும் பின் விளைவுகளைக் குறித்துக் கவலையற்று இருப்பதாகும். கர்த்தருடைய நாமம் நமது கண்களுக்கு முன் அவரது ஆள்த்தன்மையையும், பரிசுத்தத்தையும், நீதியையும், பண்பு நலன்களையும் தெய்வீகத்தையும், மாட்சிமையையும் கொண்டு வருகிறது. நாம் இரட்சிக்கப்பட்டதே அவருடைய நாமத்தை நோக்கிக் கூப்பிட்டபடியால்தான்! (ரோமர் 10:13). மூல மொழியில் "நாமத்தை நோக்கிக் கூப்பிடுகிற" எனும் சொற்றொடர் தமிழில் "தொழுது கொள்ளுகிற" என மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. நாம் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டதும் அவருடைய நாமத்தில்தான்! (அப்போஸ்தலர் 8:6). நாம் அப்பம் பிட்கக் கூடிவருவதும் அவருடைய நாமத்தில்தான்! (மத்தேயு 18:20) நம் வாழ்வின் ஒவ்வொரு செயலும் அவருடைய நாமத்திற்கு ஏற்றதாய் இருக்க வேண்டும். உள்ளூர் சபையில் நாம் கூடிவரும் போது இதை நினைவில் கொள்ள வேண்டும். உலகத்தார் நம்முடைய சாட்சியையும், நடத்தையையும், தோற்றத்தையும் பண்பையும் அங்குதான் கண்டு, மற்றவர்களிடமும் கூறுவார்கள்.

இஸ்ரவேலரோடு தேவன் இப்படிப் பேச வேண்டிய அவசியத்தை அவர்கள்தாமே உண்டாக்கி விட்டார்கள். அறிவு பெருத்திருக்கும் இந்நாட்களில் நாம் ஆராதனைக்காகக் கூடி வரும்போது நமது நடை, உடை, பாவனைகள், பண்புகள் தேவனுடைய நாமத்திற்கு ஏற்றதாக இருக்க வேண்டும் என்பதை நாமும் மறக்கக் கூடாது. "நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடத்தையும், தேவபக்தியும், உள்ளவர்களாய் இருக்க வேண்டும்"? என 2

பேதுரு 3:13-ல் எழுதப்பட்டிருப்பதை நினைவில் கொள்ள வேண்டும். நாம் வேலை செய்யும்படிக்கும், சுற்றிப் பார்க்கும்படி போகும் இடங்களுக்கும், ஆராதிக்கும் இடத்திற்கும் இடையே மிகப்பெரிய வேறுபாடு உண்டு. மேலதிகாரிகளுக்கு முன்பாக நாம் கவனமற்றவர்களாக, அஜாக்கிரதையாக, அவமரியாதையாக நடந்து கொள்வோமா?

கர்த்தருடைய நாமத்தை அசட்டை பண்ணுதல் (வசனம் 6-13)

இத்தீர்க்கதரிசனத்தை "இக்காலத்திற்கேற்ற சத்தியம்" என்றழைக்கலாம். ஆகாய் 1:2-ல் இஸ்ரவேலர் தேவனுடைய ஆலயத்தைத் திரும்பக் கட்டுவதை அசட்டை பண்ணினார்கள்."மல்கியா"வில் தேவனுடைய வீட்டில் என்ன நடக்கிறது என்பதைக் குறித்தும், அங்கு எப்படி நடந்து கொள்கிறார்கள், எதைப் பலியிடுகிறார்கள் என்பதைக் குறித்தும் அசட்டையாக இருந்தனர். இந்நிலையில் பவுலும் தீமோத்தேயுவிற்கு எழுதின வார்த்தைகளை எண்ணிப் பார்ப்பது நலம்."தேவனுடைய வீட்டிலே நடக்க வேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்" (1தீமோத்தேயு 3:15). இக்கருத்தை மனதில் கொண்டே அந்நிருபம் எழுதப்பட்டுள்ளது. ஆவிக்குரிய வீழ்ச்சியும், அசட்டையும் அதிகரித்து வரும் இந்நாட்களில் அந்த நிருபமும் மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது.

மல்கியா 1:6-13ல் காணப்படுவது மிகப்பெரிய குற்றச்சாட்டு. தேவனைக் குறித்து அவர்கள் அப்படிப் பேசினார்கள். அவ்வளவு மோசமாக செயல்பட்டார்கள். "உமது நாமத்தை எதினாலே அசட்டை பண்ணினோம்", என்றவர்கள் கேட்ட போது, தேவன், "என் பீடத்தின் மேல் அசுத்தமான அப்பத்தைப் படைக்கிறதி னாலேயே...... கர்த்தருடைய பந்தி எண்ணமற்றுப் போயிற்று. கண் ஊனமானதை, கால் ஊனமானதை, நசல் கொண்டதைப் பலியிடுகிறீர்கள். பீறுண்டதையும் காணிக்கையாகச் செலுத்து கிறீர்கள்.கர்த்தருடைய பந்தி அசுத்தமானது என்கிறீர்கள். இதோ, இது எவ்வளவு வருத்தமானது என்று சொல்கிறீர்கள்" எனப் பதிலளிக்கிறார். (வசனம் 7,8,13).

அவர்கள் சொல்வதையும், செய்வதையும் கர்த்தர் அறிந்திருந்தார். அவை அவரைச் சிறுமைப்படுத்துபவையாக இருந்தன. சிறையிருப்பிலிருந்து விடுபட்ட உடனே எழுப்புதல் உண்டாகியும் அவர்கள் இப்படி நடந்து கொண்டது வருத்தமளிப்பதாக இருந்தது. நெகேமியாவின் நாட்களில் சரியான இடத்தில், சரியான விதத்தில் கர்த்தருக்குப் பலி செலுத்தப்பட்டது. நாட்கள் அதிகம் நகரும் முன்பே நிலைமை தலை கீழாயிற்று.

இன்று நடப்பதென்ன? மிகுந்த பாடுகளுக்கிடையே ஆவிக்குரிய தலைவர்கள் பரிசுத்த ஆவியானவர் மூலம் கண்டுபிடித்து வெளியிட்ட சத்தியங்களைக் கைக்கொள்வதில் நாம் எவ்வளவு கவலையற்றவர்களாக,கவனமற்றவர்களாக இருக்கிறோம்.

இஸ்ரவேலர் மீது தேவன் சுமத்திய குற்றச்சாட்டுகளை நிதானமாய்ச் சிந்தியுங்கள். அவர்களுடைய வார்த்தைகள் உரக்கக் கேட்கப்பட்டன. செயல்கள் அதைவிட உரக்க எதிரொலித்தன. நமது சொற்களும், செயல்களும் அவ்வாறுதானே உள்ளன!

கர்த்தருடைய நாமத்துக்குப் பயப்படும் பயம் அவர்களிடம் இல்லை. அவருடைய நாமத்திற்கு உரிய இடத்தை அவர்கள் அளிக்கவில்லை. தேவாலயத்திற்கு வருவதற்கு முன் அவர்கள் எவ்வித ஆயத்தமும் செய்யவில்லை. தாங்கள் காணிக்கையாகக் கொண்டு வருபவை தரமானவைதானா, அதைச் செலுத்தினால் தேவன் பிரியப்படுவாரா என்று கூட அவர்கள் எண்ணிப் பார்க்கவில்லை. தரமற்றவைகளைப் பலி செலுத்தினார்கள். இன்று தேவனுக்கு நம்மையே ஜீவபலியாக ஒப்புக் கொடுக்கும் நாம் தரமானவர்களாய் இருக்கிறோமா?

வசனம் 8-ல் தேவன் அவர்களை கேலியாகப் பேசுகிறார். ஒரு அதிபதிக்கு தரமற்ற வெகுமதிகளைத் தந்தால், அவன் அவற்றை ஏற்றுக் கொள்வானா? அவன் இவர்கள் மேல் பிரியமாய் இருப்பானா?

இன்றைய நாகரீக உலகில் சில லாட்ஜ்கள், ஹோட்டல்களுக்குள் போக வேண்டுமென்றால்,மிகவும் கௌரவமாக உடை உடுத்தியிருக்க வேண்டிய கட்டாயம் உண்டு. சரியான தோற்றம் இல்லாவிட்டால், உள்ளே நுழைய முடியாது. காலம் மாறினாலும் சில கட்டுப்பாடுகள் மாறுவதில்லை.

தேவனுடைய நாமம் விளங்கும் இடத்தில் எவ்விதக் கட்டுப்பாடுமின்றி இருப்பது எவ்வளவு மோசமான செயல்! இவ்வுலகில் சில இடங்களுக்குப் போவதற்கே அந்தஸ்து தேவைப்படுகிறது. கர்த்தருடைய நாமத்தில் கூடி வரும் நாம் தேவனுடைய பிள்ளைகள், ராஜரீகமான ஆசாரியக் கூட்டத்தார் எனும் அந்தஸ்தைக் காப்பாற்றிக் கொள்கிறோமா? இக்காரியத்தில் நாம் மிகவும் கவனத்தோடு இருப்பது அவசியம்.

தங்களுக்கு வேண்டாததைப், பயனற்றதை இஸ்ரவேலர் தேவனுக்குப் படைத்தார்கள். இதைப் போலவே இன்றைய விசுவாசிகளில் பலர் தங்களுக்கு வேண்டாததையும், பயனற்ற தையும் தேவனுக்கு அளிக்கின்றனர். தங்களுக்கு வேறு வேலை எதுவும் இல்லையென்றால், சபைக்குப் போகின்றனர். முக்கியமான வேலைகள் இருந்தால் அன்று ஆராதனைக்குக் கூடப் போவதில்லை. தேவனுக்கு முதலிடமோ, முக்கியத்துவமோ தருவதில்லை.

வசனம் 10-ல் அவர்கள் கூலியில்லாமல் தேவனுடைய வேலை எதையும் செய்யமாட்டார்கள் என்று கூறப்படுகிறது. "உங்களில் எவன் கூலியில்லாமல் கதவுகளைப் பூட்டுவான்? என் பலி பீடத்தின் மேல் அக்கினியைக் கூலியில்லாமல் கொளுத்தவும் மாட்டீர்கள்" என்று தேவன் கூறுகிறார். ஒரு சிறிய காரணம் கிடைத்தால் போதும், கதவைப் பூட்டிவிட்டு தேவாலயத்தை விட்டு வெளியேறி விடுவார்கள்.

"இதோ, இது எவ்வளவு வருத்தமானது" (வசனம் 10) இந்த மனநிலை எல்லாரிடமும் சர்வ சாதாரணமாக் காணப் படுகிறது. இளைஞர்கள் கல்வி பயிலவும், பணம் சம்பாதிக்கவும், மன மகிழ்ச்சியாயிருக்கவும், நேரத்தையும், பணத்தையும், சக்தியையும் செலவிட வருந்துவதில்லை, வாடுவதுமில்லை.ஆனால் ஆவிக்குரிய காரியங்களைக் குறித்து, "இதோ, இது எவ்வளவு வருத்தமானது" என்கிறார்கள். சபையைக் கட்டுவதில் அவர்களுக்குப் பெரும் பங்குண்டு என்பதை மறந்தும், மறுத்தும் விடுகிறார்கள். விசுவாசிகள் தொலைக்காட்சிப் பெட்டிக்கு முன்னால் மணிக்கணக்காக உட்கார்ந்திருப்பார்கள். ஆனால் சபையில் ஒரு மணி நேரம் அதிகமாக உட்கார்ந்திருப்பது அவர்களுக்கு வருத்தமாயிருக்கிறது. பிரசங்க நேரங்களில் நிமிடத்திற்கொரு முறை கைக்கடிகாரத்தைப் பார்த்துச் சலிப்புடன் முகத்தை மூஞ்சூறு போல வைத்துக் கொண்டிருப்பார்கள். அலுவலகக் கூட்டங்களில் அப்படி நடந்து கொள்ள முடியுமா?

வாகனங்களை பாகம் பாகமாகப் பிரித்து மறுபடியும் அவைகளைக் கூட்டிச் சேர்க்க எத்தனை மணி நேரமானாலும் அவர்களுக்குக் கவலையில்லை. ஆனால் வேதபாட வகுப்புகளில் வசனத்தைப் பகுத்து அறிந்து உணர்ந்து கொள்வது அவர்களுக்கு வருத்தமாயிருக்கிறது.

அன்று தேவன் இஸ்ரவேலரிடம் எதை எதிர்பார்த்தாரோ, அதையே அவர் இன்று நம்மிடம் எதிர்பார்க்கிறார். உலகப் பிரகாரமான காரியங்களுக்குத் தருவதை விட அதிக நேரத்தையும், சக்தியையும் தமக்காகச் செலவிட வேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார். விசுவாசிகள் அவருக்கு முதலிடத்தையும், முக்கியத்துவத்தையும் தரவேண்டுமென்பதே அவரது வாஞ்சை!

அத்தியாயம் - 2

தரம் தாழ்ந்த அன்றைய ஆசாரியத்துவம் (வசனம் 1-7)

ஆசாரியர்களுக்கு ஒரு கட்டளை கொடுக்கப்படுவதோடு இரண்டாம் அதிகாரம் தொடங்குகிறது. தேவனோடு நெருக்க மாயிருந்து, சத்திய வேதத்தைக் கைக்கொண்டு, அதை மற்றவர்களுக்கும் அறிவிக்க வேண்டிய ஆசாரியர்களின் விழுந்து போன நிலைமையை இவ்வசனங்கள் எடுத்துரைக்கின்றன.

மல்கியாவின் நாட்களிள் வாழ்ந்த யூதர்களுக்கு ஏழுவிதமான குறைபாடுகள் இருந்தன.

* *அன்பைச் சந்தேகித்தல் (1:2)*
* *அவமரியாதை (1:6)*
* *வெறுக்கப்பட்ட பந்தி (1:7)*
* *தரம் தாழ்ந்த ஆசாரியத்துவம் (2:8-9)*
* *தரம் குறைந்த தார்மீக நிலை (2:17)*
* *கையிருப்பு இல்லாத பண்டசாலை (3:8-10)*
* *திருப்பதியற்ற ஊழியம் (3:14)*

எனவே இங்கே நாம் தரம் தாழ்ந்த ஆசாரியத்துவத்தைக் காண்கிறோம். வாசிக்கவே வருத்தமாயிருக்கிறது. ஆண்டுகளுக்கு முன்பு ஆரோனைத் தேவன் தம்முடைய பிரதிநிதியாகத் தெரிந்து கொண்டார். அதே நேரத்தில் தேவனுக்கு அவன் ஜனங்களுடைய பிரதிநிதியாகவும் இருந்தான். ஜனங்களுக்கிடையே அவன் ஓர் உயர்ந்த, பொறுப்புள்ள பதவியை உடையவனாயிருந்தான். அவனுடைய குமாரர்களும், அவர்களுடைய பிள்ளைகளும் அப்பதவியைத் தொடர்ந்து வகித்தனர். பொன் கன்றுக்குட்டியை இஸ்ரவேலர் ஆராதித்த போது, லேவி கோத்திரத்தார் கர்த்தருடைய காரியத்தில் வைராக்கியம் காட்டியபடியால, தேவன் அவர்களை விசேஷமாகத் தம்முடைய சேவைக்கென்று தெரிந்து கொண்டார்(யாத்திராகமம் 32:26). ஆசரிப்புக்கூடாரத்தின் பரிசுத்த ஸ்தலத்திற்கு ஆரோன் எப்பொழுது வேண்டுமானாலும் போகலாம். வருடத்திற்கு ஒரு முறை மகா பரிசுத்த ஸ்தலத்தில் தேவனுடைய பிரசன்னத்திற்குள் பிரவேசிக்கும் சிலாக்கியமும் அவனுக்கு இருந்தது. உடன்படிக்கைப் பெட்டியை நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கும் கேருபீன்கள் மத்தியில் வாசம் பண்ணி, இஸ்ரவேலரின் நடுவிலும் வாசம் பண்ணிக் கொண்டிருந்த தேவனுடைய பிரசன்னத்திற்குள் பிரவேசிப்பது என்றால் அது என்ன சாதாரணமான காரியமா?

ஆசாரியத்துவம், சிறப்பான ஒரு கோத்திரத்திற்கும், கூட்டத்திற்கும் உரியதாயிருந்தது. ஆரோனின் குமாரர்கள் மட்டுமே ஆசாரியர்களாக இருக்க முடியும்.தேவன் கட்டளையிட்டபடி சேவை செய்ய லேவி கோத்திரத்தாருக்கு மட்டுமே சிறப்புரிமை உண்டு.

தரமற்ற இன்றைய ஆசாரியத்துவம்

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து விசுவாசிகளைக் பாவமறக் கழுவினபடியால், அவர்களை ஆசாரியர்களாகத் தமக்கென்று தெரிந்து கொண்டார். "நீங்களும் ஜீவனுள்ள கற்களைப் போல, ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும் படிக்கும் பரிசுத்த ஆசாரியக் கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள்(1பேதுரு2:5)." நீங்களோ உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், 'ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும்', பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள் " (1பேதுரு2:9). இரு விதமான தன்மையுடைய ஆசாரியத்துவம் நமக்குண்டு. ஆராதிப்பதற்கு நாம் 'பரிசுத்த ஆசாரியக் கூட்டமாகவும்', சாட்சியாய் இருப்பதற்கு 'ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாகவும்' இருக்கிறோம். முதல் தன்மை தேவனுக்கு முன்பாக நிற்பதற்கு! இரண்டாவது தன்மை ஜனங்களுக்கு முன்பாக நிற்பதற்கு!

அன்று ஒரே ஒரு கோத்திரத்தாருக்கு இருந்த சிலாக்கியங்களும், பொறுப்புகளும் இன்று விசுவாசிகள் அனைவருக்கும் உண்டு. ஆனால் அன்று அவர்கள் தரம் தாழ்ந்து போனது போல, இன்றும் கிறிஸ்தவ உலகில் விசுவாசிகள் தரம் தாழ்ந்து போயிருக்கிறார்கள். இது மட்டுமன்றி, மனிதனால் உண்டாக்கப்பட்ட "கிறிஸ்தவ மதத்தில்" தேவனுடைய நினைவுகளோடு பொருத்தமற்ற, அங்கி தரித்த 'போதகர்கள்', 'பாஸ்டர்கள்', 'ரெவரெண்டுகள்' என்றழைக்கப்படும் ஒரு புதிய ஆசாரியக் கூட்டமும் எழுந்துள்ளது.

சில பிரதரன் ஊழியக்காரர்களும் மற்றவர்கள் தங்களைப் பாஸ்டர் என்று அழைப்பதில் பெருமிதம் கொள்கிறார்கள். மறுமலர்ச்சி உண்டான காலத்தில் வாழ்ந்த வல்லமையுள்ள ஊழியர்கள் தங்களை மற்றவர்கள் Brother என்று அழைக்கும் போதோ, தங்களுக்குக்

கடிதம் எழுதும் போதோ பெரிய 'B' யைப் பயன்படுத்தக் கூடாது என்றும், சிறிய 'b' யையே பயன்படுத்த வேண்டுமென்றும் அறிவுறுத்தினர். இன்று நடப்பவையெல்லாம் மனிதனுடைய பெருமைக்காக, மனிதனால் ஏற்படுத்தப்பட்டவையேயன்றி, தேவனாலோ, வேதவசனத்தாலோ உண்டானவை அல்ல!

தேவனுடைய வசனத்தின்படி அழைப்பைப் பெற்று, "பிதாவாகிய தேவனுக்கு முன்பாக ராஜாக்களும், ஆசாரியர்களும் ஆக்கப்பட்ட"(வெளிப்படுத்தினவிசேஷம் 1:6) விசுவாசிகளுக்குள்ளும் ஆசாரியர்களாக நடந்து கொள்ளாத அநேகருண்டு. ஆராதிப்பதிலும், துதிப்பதிலும் அவர்களுக்கு அக்கறையில்லை.

தேவனுடைய அதிருப்தி

தேவாலயத்தில் ஊழியம் செய்யும்படி ஆசாரியர்கள் அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள். பரிசுத்த வாழ்விற்கும், புனிதமான சேவைக்குமென்று பிரித்தெடுக்கப்பட்டவர்கள். "காணிக்கைகளையும்,பலிகளையும் செலுத்தும்படி, மனுஷருக்காகத் தேவகாரியங்களைப் பற்றி" நியமிக்கப்படுகிறவர்களே ஆசாரியர்கள். (எபிரெயர் 5:1). இச்சேவை ஆரோனுக்கும், அவன் சந்ததியாருக்கும் உரியது. ஆனால் அவர்கள் நம்பிக்கைத் துரோகம் செய்தார்கள். அவர்கள் மட்டுமல்ல, இஸ்ரவேலர் அனைவருமே அப்படிச் செய்தார்கள் (அதிகாரம் 1). ஆசாரியர்கள் தேவனால் தரப்பட்ட கட்டளையை மீறினால், தேவகோபமும், சாபமும் அவர்கள் மேல் வரும். தேவன் அவர்களையும், அவர்களுடைய சந்ததியையும் முழுமையாகத் 'தள்ளிவிடுவார்'. அவர்களுடைய பண்டிகைகளை அவர் மாசுபடுத்தி, அவர்களைத் தகுதியற்றவர்களாகவும், அசுத்தராகவும் புறம்பே தள்ளிவிடுவார். இனிமேல் அவர்கள் அவருக்கு ஊழியஞ்செய்யத் தகுதியற்றவர்கள்.

கர்த்தருடைய பட்சத்தில் இருக்கிறவர்கள் (வசனம் 5-6)

லேவியுடன் கர்த்தர் செய்த உடன்படிக்கை 5-ஆம் வசனத்தில் மறுபடியும் நினைவூட்டப்படுகிறது. லேவி கோத்திரத் தாரும், யோசுவாவும், காலேபும் மட்டுமே கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயிருந்து பொன் கன்றுக்குட்டியை ஆராதிக்காமல் இருந்தார்கள். அவர்கள் அன்று காண்பித்த விசுவாசத்தை தேவன் மறக்கவில்லை. அவர் லேவியோடே பண்ணின உடன்படிக்கை

" ஜீவனும், சமாதானமுமாக" இருந்தது. "கர்த்தருடைய பட்சத்தில் இருக்கிறவர்கள் யார்?" என்று மோசே கேட்டபோது, சற்றும் தயக்கமின்றி லேவி கோத்திரத்தார் முன்னே வந்தனர். மனிதனுடைய உபாய தந்திரங்கள் மிகுந்த கிறிஸ்தவ உலகில், ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்ளத் தீர்மானித்த விசுவாசிகளும் லேவி கோத்திரத்தாரைப் போன்றோரே! இந்த ஆசீர்வதிக்கப்பட்ட பதவியை நிலைநிறுத்திக் கொள்ள தேவன் அவர்களுக்கு ஆவிக்குரிய பலத்தையும், வல்லமையையும் அருள்வாராக! பெயர்க் கிறிஸ்தவர்கள் அவர்களை வெறுப்புடன் நோக்கிக் கேலி செய்வது புதுமையானதல்ல!

6-ஆம் வசனத்தில் கர்த்தருக்கு உண்மையாயிருப்பவர்களுக்குத் தேவையான குணங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. "சத்திய வேதம் அவன் வாயில் இருந்தது. அவனுடைய உதடுகளில் அநியாயம் காணப்படவில்லை. அவன் என்னோடே சமாதானமும், யதார்த்தமுமாய்ச் சஞ்சரித்து, அநேகரை அக்கிரமத்தினின்று திருப்பினான்". இவ்வசனத்தில் லேவியின் நான்கு அற்புதமான பண்புகள் குறிப்பிடப்பட்டுள்ளன. நம்மிலும் இந்த நான்கு பண்புகளும் காணப்பட வேண்டும். அவை நம் வாழ்வில் வெளிப்படும்படி நடந்து கொள்ள முயல்வோமாக!

ஆசாரியனின் பண்பு நலன்கள் (வசனம் 7)

ஒரு ஆசாரியனுக்குரிய குணங்கள் என்ன என்பதை 7-ஆம் வசனம் கூறுகிறது. "ஆசாரியனுடைய உதடுகள் அறிவைக் காக்க வேண்டும். வேதத்தை அவன் வாயிலே தேடுவார்களே". ராஜாவாகிய ஆசாவின் நாட்களில் "இஸ்ரவேலிலே அநேக நாளாய் மெய்யானதேவனும் இல்லை. உபதேசிக்கிற ஆசாரியனும் இல்லை. வேதமும் இல்லை" (2 நாளாகமம் 15:3). இத்தகைய இழப்பு இஸ்ரவேலருக்கு ஆவிக்குரிய பலவீனத்தைக் கொடுத்தது. நம்முடைய நாட்களிலும் இவ்வாறு சம்பவிக்க வாய்ப்புண்டு. வசனத்தை நிதானமாய்ப் பகுத்து வாசித்தால, அறிவுண்டாகும். (2தீமோத்தேயு 2:15; 1தீமோத்தேயு 4:13). ஆசாரியனின் வாசிப்பு குறையும் போது, சபைக்குள் சத்தியத்திற்குச் சாவுண்டாகிறது. அங்கு சத்தியம் முழுமையாகச் செயல்பட முடியாததால் பலவீனமும், வீழ்ச்சியும் உண்டாகிறது.

உபதேசிக்க வேண்டியதன் முக்கியத்துவம் (வசனம் 7)

இக்காலத்திற்கேற்ற, நமது கவனத்தைக் கவரும் வசனமிது. தேவஜனங்களின் பொறுப்பும் இங்கு இடம் பெறுகிறது. தேவனுடைய ஜனங்கள் ஆசாரியனுடைய வாயிலே வேதத்தைத் தேடுவதில்லை. ஆசாரியருடைய உதடுகள் அறிவைக் காப்பதுமில்லை.எனவே சத்தியம் ஒருவரையும் சென்றடைவதில்லை.

உபதேசிப்பதில் ஆசாரியனுடைய பங்கு

"அறிவைக் காக்க வேண்டும்" - இதில் '*வேண்டும்*' எனும் சொல் அதிமுக்கியமானது. விசுவாசிகள் ஒவ்வொருவரின் கடமை இது. தங்களுடைய உதடுகள் அறிவைக் காத்துக் கொள்ளும்படி அவர்கள் கவனமாயிருக்க வேண்டும். வேதப் பிரமாணங்களை வாசித்து, யோசித்து, தியானித்து அவற்றால் அவர்கள் நிறைந்திருக்க வேண்டும். சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிற வெட்கப்படாத ஊழியக்காரர்களாக அவர்கள் இருப்பது நலம் (2 தீமோத்தேயு 2:15). வசனத்திலேயே வாழ்ந்து இடைவிடாமல் உபதேசித்தாலேயன்றி இந்நிலையை அடைய முடியாது. அதிக நேரமும், கடின உழைப்பும் இதற்குத் தேவையானபடியால், இக்கனமான ஊழியத்தை அநேகர் செய்வதில்லை. தேவன் அருளிய சத்தியங்கள் சபையில் நிலைநிற்க வேண்டுமானால், அதற்கு உபதேசம்தான் (கற்றுக் கொடுபபது) ஒரே வழி! (2 தீமோத்தேயு 2:2 ; தீத்து 1:5,9).

கேட்போரின் பொறுப்பு

சத்தியங்களைக் கற்றுக் கொள்வோருக்கும் மிகப் பெரிய பொறுப்புண்டு. சகல சத்தியங்களையும் அவர்கள் கற்றுக் கொள்ள வேண்டும். இதற்காகவே பரிசுத்த ஆவியானவர் அனுப்பப்பட்டுள்ளார். அவர் சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்துவார் (யோவான் 16:13). தனியாக வேதத்தை வாசித்து வேத அறிவில் வளர வேண்டும். அத்துடன் மல்கியாவில் கூறப்பட்டுள்ள படி ஆசாரியனுடைய வாயில் வேதத்தைத் தேட வேண்டும். அதாவது ஆசாரியன் கற்றுக் கொடுப்பதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். வேதத்தை வாசித்து, ஆராய்ந்து கர்த்தரால் போதிக்கப்பட்ட ஊழியக்காரன் போதிப்பதை தேவஜனங்கள் கேட்டு கைக்கொள்ள வேண்டும். சபை வளர தேவன் உண்டாக்கிய வழி போதகமே! (விசுவாசிகள் அனைவருமே ஆசாரியர்கள்தான் என்றாலும், கர்த்தர் ஒரு சிலருக்குப் "போதக சமர்த்தனாய்" இருக்கும் வரத்தை அளித்துள்ளார். அத்தகையோர் போதிக்கக் கடமைப்பட்டவர்கள் ஆவார்கள்)

போதகத்திற்கு எதிரானது தர்க்கம்

கலந்தாலோசித்து, பல தரப்பு வாதங்களையும் கணக்கில் எடுத்துக் கற்றுக் கொள்ளும் நவீன முறை இன்று சில சபைகளில் காணப்படுகிறது. இது தேவன் சொன்ன வழியோ, முறையோ அல்ல. கற்றுக் கொள்வது, கற்பிப்பதன் மூலமாகவே அன்றித் தர்க்கத்தின் மூலமாக அல்ல. உயிர்த்தெழுந்த கிறிஸ்து சபைக்குத் தந்த வரங்களுள் ஒன்று 'போதக வரம்' (எபேசியர் 4:1,8,13). " நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும், அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத் தக்க பூரண புருஷராகும் வரைக்கும் " இவ்வரம் கிரியை செய்யும். கர்த்தருடைய இரண்டாம் வருகை வரை இது தொடரும். சர்ச்சை என்பது நாமறிந்து கொண்டவைகளை மற்றவர்களோடு பங்கிட்டுக் கொள்வதற்காகவே!

வேத வசனங்களைக் குறித்து விசுவாசிகள் தங்கள் கருத்தைக் கூறுவதும், சரியா, தவறா என நியாய வாதம் செய்வதும் தேவனுடைய திட்டமல்ல. வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. அவர் அருளியதை, அவர் மட்டுமே விளக்கமாகக் கற்றுத் தர முடியும். தமது ஊழியக்காரர்கள் மூலமாக அவர் அதை நிறைவேற்றுகிறார். ஆசாரியன், போதிக்கிற ஊழியக்காரன் சேனைகளுடைய கர்த்தரின் தூதன். (மல்கியா 2:7).

போதகத்தைக் கவனமாகக் கேட்டுக் கற்றுக் கொள்வது எவ்வளவு முக்கியமானது என்பதை இதன் மூலம் அறிந்து கொள்கிறோம். விசுவாசம் கேள்வியினால் வரும் (ரோமர் 10:17). அவ்வாறே தெய்வீக அறிவும், விசுவாசமும் கேட்பதன் மூலமாகவே வரும். போதிக்க ஆவியானவரால் தகுதிப் படுத்தப்பட்டவர்களின் போதனை மூலமாகவே ஆவிக்குரிய மனிதன் முழு வளர்ச்சியை அடையமுடியும். சபையார் இதை உணர்ந்து கொள்வது மிகவும் அவசியம்.

இதே காரியத்தைக் கொலோசெயர் 2:18-லும் காணலாம். " கணுக்களாலும், கட்டுகளாலும் உதவி பெற்று இணைக்கப்பட்டு. தேவ வளர்ச்சியாய் வளர்ந்தேருகிற சரீரம் " என்று அங்கு எழுதப்பட்டுள்ளது. கணுக்களும். கட்டுகளும் சபை வளருவதற்காகத் தலையாகிய கிறிஸ்து ஏற்படுத்தின மனித உபகரணங்கள் என்பதை நாம் அறியாமல் இருக்கலாகாது. கிறிஸ்துவைப் பற்றி அறிகிற அறிவிலும், கிருபையிலும் வளர போதகத்தைக் கேட்பதே வழி!

நாமனைவரும் சமமல்ல!

"உங்களுக்குள்ளே பிரயாசப்பட்டு,கர்த்தருக்குள் உங்களை விசாரணை செய்கிறவர்களாயிருந்து, உங்களுக்குப் புத்திசொல்லு கிறவர்களை நீங்கள் மதித்து" என்று 1 தெசலோனிக்கேயர் 5:12-ல் எழுதப்பட்டிருப்பதன் பொருள், வேத வசனத்தைப் பகுத்துப் போதிக்கிறவர்களை நாம் மதிக்க வேண்டும் என்பதே. "தேவ வசனத்தை உங்களுக்காகப் போதித்து உங்களை நடத்தி னவர்களை நீங்கள் நினைத்து...... உங்களை நடத்துகிறவர்கள் உங்கள் ஆத்துமாக்களுக்கு உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்கள் ஆனபடியால்..... அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்" எனும் வசனங்களும் இதை உறுதிப்படுத்து கின்றன(எபிரெயர்13:7,17). நன்றாய் விசாரணை செய்கிற மூப்பர்களை, விசேஷமாக திருவசனத்திலும், உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களை இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராக எண்ண வேண்டும்(1 தீமோத்தேயு 5:17).J.N.D வேதாகமம் சத்தி யத்தைக் கற்றுக் கொடுக்கிறவர்களை இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராக எண்ண வேண்டும் என்கிறது. மல்கியா 2:7-ல் காணப்படுவது போல இங்கும் "கற்றுக் கொடுக்கிறவர்கள்", "கற்றுக் கொள்கிறவர்கள்" என இரு வகுப்பினரைப் பார்க்கிறோம். 1தீமோத்தேயு 3:2- போதக சமர்த்தனாய் இருப்பதை மூப்பனுக்குரிய தகுதியாகக் கூறுகிறது.

சபையைக் கண்காணிப்பவர்களின் வேலையே ஆத்துமாக்களுக்கு உத்தரவாதம் பண்ணி விழித்திருந்து, வசனத்தைப் போதித்து, உற்சாக மனதோடு தேவனுடைய மந்தையை மேய்ப்பதுதான் (1 பேதுரு 5:2).

நாணயத்தின் மறுபக்கமாக,விசுவாசிக்கும் ஓர் பொறுப்புண்டு. "வேதத்தை அவன் (போதிக்கிறவன்) வாயிலே" தேடவேண்டும் (மல்கியா2:7). பவுல் கூறுவதைப் போல சத்திய வழியைப் போதித்து, நடத்துகிற இடத்தையே அவன் தெரிந்து கொள்ள வேண்டும். மற்றவர்களின் போதகத்தைக் கேட்டால்தான் தலையாகிய கிறிஸ்துவிடமிருந்து "போஷாக்கைப்" (ஊட்டச்சத்து) பெற்றுக் கொண்டு அவரைக் குறித்து அறிகிற அறிவிலே வளர முடியும். முழுமையாக வளர்ச்சி அடைந்து, தேறினவர்கள் மற்றவர்களுடைய போதகத்தைக் கேட்க வேண்டியதில்லை. அப்படிப்பட்ட நிலையை நாம் யாருமே அடையவில்லை. எனவே நம்மில் ஒருவரும் மற்றவர்கள் போதிப்பதைக் கேட்காமல் இருக்கலாகாது.

விசுவாசிகளே, உங்கள் முன் வைக்கப்பட்ட இந்த ஆலோசனைகளைப் புரிந்து கொள்ளும்படி தேவனைத் தேடி, அவருடைய கிருபையைப் பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் ஆவிக்குரிய வளர்ச்சிக்குத் தேவையான உணவையும், ஊட்டத்தையும் அவரே அளிப்பார்.

தலைமைத்துவத்திற்கான தகுதிகள

7-ஆம் வசனத்தில் ஆசாரியருக்கும், ஜனங்களுக்கும் உள்ள பொறுப்புகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. 5 முதல் 7 ஆம் வசனம் வரை ஒரு ஊழியனுக்குத் தேவையான தகுதிகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

* *அவன் தேவனுக்குப் பயந்தவன் (வசனம் 5)*
* *சத்திய வேதம் அவன் வாயில் இருக்கிறது*
* *அவனுடைய உதடுகளில் அநியாயம் காணப்படவில்லை.*
* *அவன் தேவனோடே சஞ்சரிக்கிறவன்.*
* *அவன் சத்தியத்தை மற்றவர்களுக்கப் போதிக்கிறான்.*
* *அநேகரை அவன் அக்கிரமத்திலிருந்து திருப்புகிறான்.*
* *அவன் சேனைகளுடைய கர்த்தரின் தூதன்*

மத்தேயு 28:19-20-ல் உள்ள கட்டளை அனைத்து விசுவாசிகளுக்கும் உரியது. தேவனுடைய ஊழியக்காரர்களாகிய நமக்கு இப்பண்பு நலன்கள் தேவை. தற்பரிசோதனை - காலத்தின் கட்டாயம்!

8-ஆம் வசனம் இந்த மகிழ்ச்சியளிக்கும் எழுத்தோ வியத்திற்கு முற்றிலும் முரணானது." நீங்களோ" என்று அவ்வசனம் தொடங்குவதால், அன்றைய ஆசாரியர்கள் இதிலிருந்து முற்றிலும் வேறுபட்டவர்களாக இருந்தார்கள் என்பது விளங்கும். "(ஆனால்) நீங்களோ வழியை விட்டு விலகி அநேகரை வேதத்தைக் குறித்து இடறப் பண்ணினீர்கள். லேவியின் உடன்படிக்கையைக் கெடுத்துப் போட்டீர்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்". கர்த்தர் தமது ஜனங்களையும், வார்த்தையையும் அவர்களை நம்பி அவர்களிடம் ஒப்படைத்திருந்தார் .எனவே அவருடைய குற்றச்சாட்டு அலட்சியம் செய்ய முடியாத ஒன்று. தேவ ஜனங்களுக்கும், இதர மக்களுக்கும் ஆசாரியர்கள் முன்மாதிரியாக இருக்க வேண்டியதன் அவசியத்தை இது வற்புறுத்திக் கூறுகிறது. ஒவ்வொரு ஊழியக்காரனும், சுவிசேஷகனும், போதகனும் இதை மனதில் கொள்ள வேண்டும்.

“ உன் கால் நடையைச் சீர்தூக்கிப் பார். உன் வழிகளெல்லாம் நிலைவரப்பட்டிருப்பதாக” (நீதிமொழிகள் 4:26). இதன் பொருள் நீங்கள் செய்வதையும், செய்ய நினைப்பதையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும் என்பதே! வசனத்திற்கு ஒவ்வாத ஒன்றையும் செய்யலாகாது. சத்திய வசனத்தின்படி, தேவனால் ஒரு செயல் அங்கீகரிக்கப்படுமானால், அவருடைய மகிமைக்காக அதைச் செய்யலாம்.

“ மந்தைக்கு மாதிரியாயிருங்கள்” (1பேதுரு 5:3). மூப்பர்களுக்குப் பேதுரு சிறப்பாகக் கூறும் அறிவுரை இது! அவர் தம்மை “மூப்பருக்கு உடன் மூப்பன்” என்று அழைத்துக் கொள்கிறார் (1 பேதுரு 5:1). பேதுரு இப்படி எழுதுவதன் கருத்து “ஒரு தலைவன் தன்னைப் பின்பற்றுகிறவர்களுக்கு மாதிரியாக நடந்து கொள்ள வேண்டும் ” என்பதே. அவன் சரியான திசையில் சஞ்சரிக்க வேண்டும். பரிசுத்த நடத்தையும், உபதேசத்தில் உறுதியும், கூட்டங்களுக்கு வருவதில் தவறாமையும் அவனிடம் காணப்பட வேண்டும்.

இளம் விசுவாசிகளோடு ஒரு வார்த்தை

இளைஞர்களோடு பகிர்ந்து கொள்ளப் பவுலுக்கு ஓர் செய்தியுண்டு. “உன் இளமையைக் குறித்து ஒருவனும் உன்னை அசட்டை பண்ணாதபடிக்கு, நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும் கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு” (1 தீமோத்தேயு 4:12). இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஆறு காரியங்கள் வாழ்வின் அனைத்துப் பகுதிகளுக்கும் பொருந்தும். நம்மைச் சுற்றிலும் இருப்பவர்களுக்கு முன் மாதிரியாக நாம் நடந்து கொள்ள வேண்டியது நமது கடமை மட்டுமல்ல, கட்டளையும் கூட! நம்மில் காணப்படும் குறைகளையும், காணப்படாத நிறைகளையும் பார்த்தே மற்றவர்கள் கிறிஸ்தவத்தை அளவிடுகின்றனர்.

“நீயே எல்லாவற்றிலும் உன்னை நற்கிரியைகளுக்கு மாதிரியாகக் காண்பித்து... உபதேசத்திலே விகற்பமில்லாதவனும், நல்லொழுக்கமுள்ளவனும், குற்றம் பிடிக்கப்படாத ஆரோக்கியமான உபதேசத்தைப் பேசுகிறவனுமாய் இருப்பாயாக” (தீத்து 2:7-8). இளம் பெண்களும், பெண்டிர் அனைவரும் தங்களுடைய ஆடை அலங்காரத்தில் ஒழுக்கத்தை வெளிப்படுத்த வேண்டும். மற்றவர் களின் இச்சசையைத் தூண்டும் விதத்தில் ஆடை அணிவதும் பாவமே! இக்காரியத்தில் உலகத்தார் தரம் தாழ்ந்து போகலாம். ஆனால் கர்த்தருடைய பிள்ளைகள் ஆடை அணிவதிலும்,

மற்றவர்களுக்கு மாதிரியாயிருப்பது தேவனை மகிமைப்படுத்தும் செயலாகும். நாணயம், நேர்மை, மரியாதை, ஒழுக்கமான பேச்சு, பரிசுத்தம், இரக்கம், அன்பு போன்ற நற்குணங்கள் வேறு யாரிடமும் இல்லாமற் போனாலும் அவை விசுவாசியின் வாழ்வில் வெளிப்பட வேண்டும்.

மற்றவர்களுக்கு மாதிரியாயிருத்தல்

மற்றவர்களுக்கு "முன் மாதிரியாயிருப்பதற்கும", மற்றவர் களுக்கு மாதிரியாயிருப்பதற்கும் இடையே பெரிய வேறுபாடு உண்டு.பவுல் தெசலோனிக்கேயருக்கு எழுதும் போது, "இவ்வித மாய் மக்கதோனியாவிலும் ஆகாயாவிலும் உள்ள விசுவாசிகள் யாவருக்கும் மாதிரிகளானீர்கள்"(1 தெசலோனிக்கேயர் 1:1) என்றெழுதுகிறார்.

தெசலோனிக்கேயாவில் இருந்த சபை புகழப்பட்டதற்குப் பல்வேறு காரணங்கள் உண்டு. முதல் அதிகாரம் மூன்றாம் வசனத்தில் மூன்று காரியங்கள் காணப்படுகின்றன. "விசுவாசத்தின் கிரியை, அன்பின் பிரயாசம், நம்பிக்கையின் பொறுமை" என்பவைதான் அவை. 5-ஆம் வசனத்தில் தேவனுடைய வார்த்தை மூன்று விதங்களில் அவர்களைச் சென்றடைந்தது என்று வாசிக்கிறோம். அது "வல்லமையோடும், பரிசுத்த ஆவியோடும், முழு நிச்சயத்தோடும் வந்தது". அவர்கள் அதை "பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே" ஏற்றுக் கொண்டார்கள். (வசனம் 6) அவர்களிடம் நற்குணங்கள் காணப்பட்டதற்குக் காரணம் இதுதான். "நீங்கள்....... எங்களையும், கர்த்தரையும் பின்பற்றுகிறவர்களாகி .... விசுவாசிகள் யாவருக்கும் மாதிரிகளானீர்கள். உங்களிடத்திலிருந்து கர்த்தருடைய வசனம் .... தொனித்தது" (வசனம் 7,8). அவர்கள் அப்போஸ்தலர்களைப் பின்பற்றி, அப்போஸ்தலர்களின் எதிரொலி ஆனார்கள். அச்சபையார் "ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கு ஊழியம் செய்வதற்கு விக்கிரகங்களை விட்டு தேவனிடத்திற்கு மனந்திரும்பி" அனைத்திலும் விசுவாசிகளுக்கு மாதிரிகளானார்கள்.

இவர்களைக் குறித்துப் படிக்கும்போதெல்லாம், "நாம் ஆராதனைக்குப் போகும் சபையும் இப்படி இருக்கக் கூடாதா" எனும் எண்ணம் எழும்புகிறதல்லவா? நமது சபை அப்படி இருக்க, நாம் ஒவ்வொருவரும் மற்றவர்களுக்கு மாதிரியாக இருக்கிறோமா என்று தற்பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். இதர விசுவாசிகள், நம்மையும்,நமது சபையையும் குறித்து, நலமானவை களைப் பேசத்தக்கதாக நமது நடக்கை அமைய வேண்டும.

ஆசாரியர்களின் தோல்வி (வசனம் 8)

"மலகியா"வை "நம் காலத்திற்கேற்ற சத்தியம்" என்றழைக்கலாம்.நெகேமியாவின் காலத்தில் உண்டான எழுப்புதல் மறைந்து கொண்டிருந்த நாட்களில், பழைய ஏற்பாட்டின் கடைசித் தீர்க்கதரிசியாகிய மல்கியா தீர்க்கதரிசனம் உரைக்கிறார். யூதர்களுக்கும், புறஜாதியாருக்கும் அதிக வேறுபாடு இல்லாதபடி,தேவனுடைய வழிகளைவிட்டு இஸ்ரவேலர் பின்மாற்ற மடைந்திருந்தனர். கர்த்தருக்கும் அவருடைய வசனத்திற்கும் சாட்சியாக அங்கு எவருமில்லை. யோவான் ஸ்நானகன் வரும்வரை அவர்களுக்குக் கர்த்தருடைய வார்த்தை "உண்டாகப் போவதில்லை". யூதர்களின் மூலமாக தேவனுடைய சாட்சி முடிந்து போய்க் கொண்டிருந்த நாட்களில் மல்கியா இந்நூலை எழுதுகிறார்.

வீழ்ச்சியின் விபரீதம்

இந்த யுகத்தின் இறுதி நாட்களில், இதற்கொப்பான நிலைமையை இன்று நாம் காண்கிறோம். கி.பி. 1800-ல் உண்டான எழுப்புதல் கொஞ்சம், கொஞ்சமாகச் செத்துக் கொண்டிருக்கிறது. சத்தியத்திற்குச் சாட்சி வகிப்பவர்களின் சத்தமும் குறைந்து கொண்டே வருகிறது.பரிசுத்த ஆவியானவரின் நடத்துதலினால் வேத வசனத்திற்கிணங்க, துர்உபதேசங்களையும், மனித முறைமை களையும் விட்டுப் பிரிந்து சபைக்குரிய சத்தியத்தின்படி ஆராதிக்கிறவர்களின் எண்ணிக்கை தேய்பிறையாகி வருகிறது. இந்த நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்ட பல சபைகளும். உலகத்தோடும், இதர பெயர் கிறிஸ்தவர்களோடும் ஒத்துப் போகத் தொடங்கி விட்டன. கர்த்தர் வரும் முன்னே இந்த இயக்கம் பலவீனப்பட்டு சாவு மணியின் சத்தத்தைக் கேட்டு விடுமோ என்ற அச்சம் அநேக பரிசுத்தவான்களின் உள்ளத்தில் எழும்பியுள்ளது. நம்மைச் சுற்றிலும் காணப்படும் ஆவிக்குரிய வீழ்ச்சியைத் தடுக்க நம்மால் முடியாதுதான். இது அப்பட்டமான உண்மை. ஆனால் பின்சந்ததியினரின் நலத்தைக் கவனத்தில் கொண்டு, சத்தியத்தை நேசிப்பவர்கள் நேர்மையோடு முயற்சித்தால் சபையின் சாட்சியைக் காத்துக் கொள்ள இயலும்.

ஒரு சபை எப்படி இருக்க வேண்டும் என்பதற்குத் தெசலோனிக்கேயாவிலுள்ள சபையார் மாதிரியாக வாழ்ந்து காட்டினார்கள்." விசுவாசிகள் யாவருக்கும் மாதிரிகளானீர்கள்" (1தெசலோனிக்கேயர்1:7).ஆனால் மல்கியாவின் நாட்களில் இஸ்ரவேலரும், ஆசாரியரும் அப்படி இருக்கவில்லை. அவர்கள் "வழியை விட்டு விலகி, அநேகரை வேதத்தைக் குறித்து இடறப் பண்ணினார்கள் லேவியின் உடன்படிக்கையைக் கெடுத்துப் போட்டார்கள்" (மல்கியா 2:8)

அவர்கள் கர்த்தருடைய வழியை விட்டு விலகினார்கள். இஸ்ரவேலினுடைய சரித்திரத்தின் ஆரம்ப நாட்களில் தேவன் அவர்களுக்கு ஒரு நல்ல வழியைக் காட்டியிருந்தார். உன்னதமான நிலைமைக்கு தேவன் அவர்களை அழைத்திருந்தார் என்பதை உபாகமத்திலிருந்து அறிந்து கொள்ளலாம் (உபாகமம் 4,6,7 அதிகாரங்கள்). உபாகமம் 4:6, 11-12 வசனங்கள் அவர்களுக்குத் தேவன் அருளிய உன்னதமான பதவியை வெளிப்படுத்துகின்றன. ஆனால் அவர்கள் அவருடைய வழியைக் கைவிட்டு, மாற்று வழிகளைத் தெரிந்து கொண்டார்கள். மிகவும் வருத்தத்திற்குரிய காரியம் என்னவெனில், ஆசாரியர்கள் தாங்கள் கெட்டதுமல்லாமல், மற்றவர்களையும் கெடுத்து விட்டார்கள். கிறிஸ்தவ வாழ்விலும் தலைவர்களும். விசுவாசிகளும் கெட்டுப் போகும் போது, மற்றவர்களையும் கெடுக்கின்றனர். வசனத்தை விட்டு வழிவிலகினால் அழிவே முடிவாகும்!

தவறான வழியில் போவதில் நாமென்ன அவர்களுக்குச் சளைத்தவர்களா? யோவான் 21:3-ல் சீமோன் பேதுரு மற்றவர்களை நோக்கி,“ மீன்பிடிக்கப் போகிறேன்” என்றதும் அவர்கள்,“ நாங்களும் உம் கூட வருகிறோம்” என்கிறார்கள்.மத்தேயு 4:19-ல் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அவர்களை அழைத்தபோது,“என் பின்னே வாருங்கள். உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்கள் ஆக்குவேன் ” என்றுரைத்திருந்தார். பேதுருவால் காத்திருக்க முடியவில்லை. பழைய தொழிலுக்கே திரும்புகிறான். அந்த இராத்திரியிலே அவர்கள் ஒன்றும் பிடிக்கவில்லை என்றெழுதியிருப்பதைக் காணும் போது நமக்கு வியப்பேற்படவில்லை. பரிசுத்தவான்களுக்குக் கர்த்தர் விடுத்த அழைப்பு அவருடைய வழியில் போக வேண்டும் என்பதே. அது இடுங்கிய வழி, பிரபலமற்ற வழி, இதர வழிகளை விட்டுப் பிரிந்திருக்கும் வழி. அது ஒரு தனித்தன்மையுள்ள வழி. கட்டுப்பாடுடன், கீழ்ப்படிந்து நடக்க வேண்டிய ஆசீர்வாதமான வழி. நமக்காக அவர் தெரிந்தெடுக்கும் இடமே ஆசீர்வாதமான இடம். அதை விட்டு வழி விலகி, மற்றவர்களையும் வழிவிலகச் செய்வது பரிதாபகரமான செயல்.

ஆசாரியர்கள் அநேகரை வேதத்தைக் குறித்து இடறப் பண்ணினார்கள்.மற்றவர்களுக்குப் போதித்து, வழிகாட்டி, மாதிரியாக வாழந்து காட்ட வேண்டியவர்கள் வீழ்ந்து போனார்கள். வேதத்தை அறியாதவர்கள் இவர்களுடைய செயல்களால் இடறல் அடைந்தார்கள். வேதத்தை சரியாகப் போதிக்க அவர்களுக்கு யாருமில்லை.

"ஆசாரியர்கள் வேதத்தைக் குறித்துப் பட்சபாதம் பண்ணினார்கள்" (வசனம் 9). இதன் பொருள் வேதவசனங்களைச் சரியாக வியாக்கியானம் செய்யாமல், ஜனங்களைப் பிரியப்படுத்தும் வகையில் வியாக்கியானம் செய்தார்கள் என்பதுதான்."கர்த்தருடைய தூதர்கள்" எனும் நிலையில் ஆசாரியர்களுக்குப் பெரும் பொறுப்புண்டு. சிலாக்கியங்களும் உண்டு. அதே நேரத்தில் கர்த்தருக்குக் கூடுதலாகக் கணக்கொப்புவிக்க வேண்டியவர்களும் அவர்களே!

வேதத்தைப் போதிக்கும் இன்றைய தலைவர்களும், கற்றுக் கொடுப்பவர்களும், பிரசங்கிகளும் இதை ஒருக்கணமேனும் மறக்கலாகாது. அப்படிப்பட்டோர் 1 தெசலோனிக்கேயர் 5:12-13 ; எபிரெயர் 13:7; 13:17 12:13 – வசனங்களை ஆழ்ந்து தியானிப்பது நலம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பரிசேயரைக் "குருடரான வழிகாட்டிகளே"என்றழைத்ததை நினைவில் கொள்க! (மத்தேயு 23:16).

. ஆசாரியர்கள் லேவியின் உடன்படிக்கையை கெடுத்துப் போட்டார்கள். கர்த்தர் "லேவியோடே பண்ணின என் உடன்படிக்கை " (வசனம் 5-7) எனக் கூறுகிறார். லேவியைக் குறித்து ஐந்து நல்ல காரியங்களை அவர் எடுத்துரைக்கிறார். ஆனால் இந்த ஐந்தை விட்டும் அவர்கள் வழிவிலகிப் போனார்கள். "கெடுத்துப் போட்டீர்கள்" என்றால் "நாசமாக்கிவிட்டீர்கள் " என்று பொருள். அவர்களைக் குறித்து கர்த்தருக்கு இருந்த நோக்கத்தையே அவர்கள் அசட்டை பண்ணினார்கள். தங்களுக்குத் தேவன் தந்த உன்னதமான பதவியையும், சிலாக்கியங்களையும் சுய லாபத்திற்காகப் பயன்படுத்தினார்கள். இதன் விளைவாக அவர்கள் பதவியிழந்தனர்.

9-ஆம் வசனம் அவர்களுடைய பாவங்களுக்காக தேவன் எடுத்த நீதியுள்ள நடவடிக்கையைக் கூறுகிறது. அவர்கள் நியாயப் பிரமாணத்தை விட்டு விலகி, உடன்படிக்கையைத் தள்ளி விட்டபடியால, இஸ்ரவேலர் பலவீனப்பட்டு, வீழ்ச்சியடைந்தனர். அந்த வீழ்ச்சியிலிருந்து இன்று வரை அவர்கள் மீளவில்லை.

அந் நிய வழிகளுக்கெதிராக அசாதாரணமான வார்த்தைகள (வசனம் 10-12)

அக்காலத்திற்கு மட்டுமல்ல, இக்காலத்திற்கும் ஏற்ற வசனங்கள் இவை. இந்த வசனங்களை "அந்நிய வழிகளுக் கெதிரான அசாதாரணமான வார்த்தைகள் " என்று அழைக்கலாம். முதல் 9 வசனங்கள் ஆசாரியர்களோடு தொடர்புடையவை. மீந்திருக்கும் வசனங்கள் அனைவருக்கும் உரியவை. இரு பகுதிகளாக அவற்றைப் பிரிக்கலாம்.

10-12 வசனங்கள் சகோதாரர்களுக்கு விரோதமாகச் செயல்படுவதைக் குறித்தும், 13-16 வசனங்கள் மனைவிகளுக்கு இழைக்கப்படும் துரோகத்தைக் குறித்தும் எச்சரிக்கின்றன. இஸ்ரவேலரின் சமூக வாழ்வும், மண வாழ்வும் மாசுபட்டிருந்தன. விசுவாசிகளின் சபை வாழ்வும், குடும்ப வாழ்வும் குமிழிட்டோடும் நீரூற்றாகவா இன்று இருக்கின்றன!.

துரோகம் துரத்துகிறது

ஒரு வார்த்தை இடியோசை போல் முழங்குகிறது. "துரோகம்"! இப்பதம் இப்பகுதியில் ஐந்து முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. உடன்படிக்கையைப் பரிசுத்தக் குலைச்சலாக்குவதும், கர்த்தர் சிநேகிக்கிற பரிசுத்தத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்குவதும் அவர்களுக்குக் கைவந்த கலை. துரோகம் என்பதற்கு சகோதாரனுக்கு விசுவாசம் இல்லாமல் நடப்பது, உண்மையற்ற தன்மை, வஞ்சனையோடு நடந்து கொள்ளுதல், நம்பிக்கையைப் பாழாக்குதல். ஒன்றை மனதில் வைத்துக் கொண்டு வேறொன்றைப் பேசுதல், செய்தல் இதுபோலப் பல அர்த்தங்கள் உண்டு. இரண்டாம் உலகப் போரின்போது எதிரிகளுடன் ஒத்துழைக்கும் ஐந்தாம் படையினர் இருந்தனர். தங்கள் தாய்நாட்டிற்கே துரோகம் செய்யும் அவர்களைப் போன்றோரே அன்றைய இஸ்ரவேலர்.தேவனோடும், சகோதரரோடும், மனைவிகளோடும் நடந்து கொண்ட விதம்தான் " துரோகம் " என்றழைக்கப்படுகிறது.

முந்தைய வசனங்களில் அவர்கள் தேவனுக்கு இழைத்த துரோகம் வெளியரங்கமாயிற்று. பீடத்தின் மேல் அசுத்தமான அப்பத்தைப் படைத்து, நசல் பிடித்ததை, ஊனமானவைகளைப் பலியிட்டு, நியாயப் பிரமாணத்தைச் சுயலாபத்திற்காகப் பயன்படுத்தி தேவனுக்குத் துரோகம் பண்ணினார்கள். இது போதாதென்று அவர்கள் ஒருவருக்கொருவர் துரோகம் பண்ணிக் கொண்டார்கள். அதிவிரைவாக அவர்களுடைய தேசம் பலவீனப்பட்டு, ஒழுங்கீனமானதாக மாறும் என்பதை இவ்வசனங்கள் எடுத்துரைக்கின்றன.

நம்முடைய சபை வாழ்வையும், குடும்ப வாழ்வையும் குறித்து மனச்சாட்சிக்கு விரோதமின்றி எண்ணிப் பார்ப்போமேயானால், அநேகருடைய நிலைமை இஸ்ரவேலருடைய நிலைமையைக் காட்டிலும் மேலானதல்ல என்பதை உணர்ந்து கொள்ளலாம். இந்நிலைமைக்குக் காரணமென்ன? சத்திய வசனத்தை விட்டு விலகி, தேவன் அருளிய தார்மீக நியமங்களைப் புறக்கணித்ததால்தான்!

உண்மை கசக்கத்தான் செய்யும். அதை விட்டு ஓடி ஒளிய முடியாது. அன்று இஸ்ரவேல் எப்படியோ, இன்று சபையும் அப்படியே!

இந்த அதிகாரத்தோடு நெகேமியாவின் புத்தகத்தையும் சேர்த்துப் படிப்பது நல்லது. நெகேமியா 9:38-ல் இஸ்ரவேலர் தேவனோடு உடன்படிக்கை பண்ணிக் கொள்கிறார்கள். 10:29-31-ல் ஆணையிட்டுப் பிரமாணம் பண்ணுகிறார்கள். கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவோம் என்று உறுதிமொழி எடுத்துக் கொள்கிறார்கள். ஆனால் சீக்கிரமாகவே அவை அனைத்தையும் அவர்கள் மறந்தாயிற்று. ஆதலால் அவர்கள் தேவனுக்குத் துரோகம் இழைத்தார்களென்று மல்கியா கூறுகிறார்.

நெகேமியாவின் காலத்திலேயே வீழ்ச்சிக்கான அறிகுறிகள் தென்பட்டன. நெகேமியா 13:11-ல் தேவனுடைய ஆலயம் கைவிடப்பட்டிருந்தது. 15-ஆம் வசனத்தில் அவர்கள் ஓய்வு நாளைப் பரிசுத்தக் குலைச்சலாக்கி "ஆலைகளை மிதித்து" தானியப் பொதிகளைக் கொண்டு வந்து விற்கிறதையும், வாங்குகிறதையும் காண்கிறோம். 16-ஆம் வசனத்தில், ஓய்வுநாளில் மீன் வியாபாரம் பண்ணுகிறார்கள். அஸ்தோத், அம்மோன், மோவாப் ஜாதிகளான ஸ்திரீகளைச் சேர்த்துக் கொண்ட சில யூதர்களும் அன்று இருந்தார்கள் (13:23)

சில நாட்களுக்கு முன்னர்தான் தேவனோடு உடன்படிக்கை பண்ணி, உறுதிமொழி எடுத்துக் கொண்டிருந்தார்கள். நாட்கள் கடக்கவில்லை, கர்த்தருக்குக் கீழப்படியாமல், தங்கள் கலக சுபாவத்தை வெளிப்படுத்தினார்கள். உண்மையற்ற, நம்பிக்கைத் துரோகம் செய்யும் ஜனங்களாகி விட்டார்கள்.ஆனால் துரோகத்தை மூடி மறைப்பதில் வல்லுனர்களாகி விட்டார்கள்.

ஒன்றே குலம்

அவர்களுடைய பாவத்தை மல்கியா சுட்டிக்காட்டும் விதம் நமக்குப் படிப்பினையாக அமைகிறது. தேவனுக்கு முன்பாக அவர்கள் ஒரே குலத்தார், தேசத்தார் என்பதை அவர்களுக்கு மல்கியா சுட்டிக்காட்டுகிறார் "நம்மெல்லாருக்கும் ஒரே பிதா இல்லையா? ஒரே தேவன் நம்மைச் சிருஷ்டித்ததில்லையோ? நாம் நம்முடைய பிதாக்களின் உடன்படிக்கையைப் பரிசுத்தக் குலைச்சலாக்கி, அவனவன் தன்தன் சகோதரனுக்குத் துரோகம் பண்ணுவானேன்"? (வசனம்10) இது இயற்கையான விளைவுதான். தேவனுக்குத் துரோகம் பண்ணுகிறவன், சகோதரனுக்குத் துரோகம் பண்ணுவான்.

சகோதரனுக்குத் துரோகம் பண்ணுகிறவன் மனைவிக்குத் துரோகம் பண்ணுவான். இத்தனை துரோகங்களுக்கும் ஆணிவேர் தேவனையும், அவருடைய கட்டளைகளையும் புறக்கணிப்பதுதான். இஸ்ரவேலைத் தேவன் தமக்குச் சொந்த ஜனமாகவும், பரிசுத்த ஜனமாகவும் தெரிந்து கொண்டார். (யாத்திராகமம் 19:5-6: உபாகமம் 7:6-7). அவரோடு இருந்த உறவு அவர்களைச் சிறப்புறச் செய்திருக்கும். ஆனால் அவர்களோ அவ்வுறவை மதிக்கவில்லை. அவர்கள் ஒரே தகப்பனு டைய பிள்ளைகள் எனும் உண்மையும், உறவும் அவர்களை ஒற்றுமையோடும், கவனத்தோடும், நீதியோடும், நன்மையோடும் வாழச் செய்திருக்கும் ஆனால் அவ்வுறவையும் அவர்கள் மதிக்கவில்லை.

பவுல் ரோமருக்கு எழுதின நிருபத்தில் இதே போன்ற உண்மைகளை எழுதுகிறார் "அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாய் இருக்கிறோம்"(ரோமர்12:5). இச்சத்தியத்தை எவ்வாறு நடைமுறைப் படுத்துவது என்று அவர் விவரிக்கிறார். கிறிஸ்துவிடமிருந்து கிருபையாகப் பெற்றுக் கொண்ட வரங்களை ஒவ்வொருவரும் எவ்வாறு மற்றவர்களுக்குப் பயன்படும்படி உபயோகிக்க வேண்டும் என்பதையும் எடுத்துரைக்கிறார். தனிப்பட்ட உறவுகள், தொழில் ரீதியான உறவுகள், சமுதாய உறவுகள், தேசிய உறவுகள் எப்படி இருக்க வேண்டும் எனும் விளக்கம் அதைத் தொடருகிறது. நாமனைவரும் கிறிஸ்துவுக்குள் ஒரே குலத்தார்,ஒரே தகப்பனுடைய பிள்ளைகள் எனும் உறவின் அடிப்படையிலேயே, பரிசுத்த ஆவியானவரின் வழிகாட்டுதலின்படி இதர உறவுகள் எப்படி இருக்க வேண்டும் எனும் விளக்கம் தரப்படுகிறது.

ஒரே சரீரத்தின் அவயவங்களாக, வேத வசனத்தின்படி சபை கூடி, அப்பம் பிட்கிறதோடு அவ்வுறவு முடிவடைவதில்லை. (அநேகர் அப்படித்தான் நினைக்கிறார்கள்). அது அதற்கும் மேலாகப் படர்ந்து பந்தலிடுகிறது. ரோமர் 12-ல் காண்பது போல வாழ்வின் அனைத்துப் பகுதிகளிலும் அது ஆதிக்கம் செலுத்துகிறது. இதன் உட்கருத்து என்னவெனில், நம் ஒவ்வொரு வருடைய செயலும் இதர விசுவாசிகளைப் பாதிக்கிறது. ஒரு விசுவாசியின் செயல் சபையின் ஆசீர்வாதத்திற்கோ, ஆசீர்வாதமற்ற நிலைக்கோ காரணமாகிறது. இதை நம்புகிறீர்களா? நம்புவீர்களா? சகோதரனுக்குத் துரோகம் செய்வதை நிறுத்தி, சட்டென்று உறவைச் சரி செய்யுங்கள்.

வசனம் 12-14 கணவன், மனைவிக்கிடையே உருவான உறவின் விரிசல்களைக் குறித்துப் பேசுகிறது. கணவன், மனைவி உறவு எப்படி இருக்க வேண்டும் எனக் கூறும் வேறு பல வேத பகுதிகள் உண்டு.ஆனால் இப்பகுதியையும், 1கொரிந்தியர் 7-ஆம் அதிகாரத்தையும் மணமுடித்தோர் மறுபடியும் திரும்பத், திரும்ப வாசிக்க வேண்டும். 1 கொரிந்தியர் 7-ஆம் அதிகாரம் திருமண உறவு எப்படி இருக்க வேண்டுமென்று கூறும்போது, இப்பகுதி அது எப்படி இருக்கக் கூடாது என்று அறிவுரை கூறுகிறது.

இப்பகுதியில் கணவன்மார்களுக்கு எதிராக இரு குற்றச் சாட்டுகள் வருகின்றன. தேவனுக்கும், அவருடைய பிரமாணங் களுக்கும் எதிராக அவர்கள் செயல்பட்டு, மனைவிகளை விவாகரத்து செய்துவிட்டுப் புறஜாதிகளிலிருந்து பெண்களைத் தெரிந்து கொண்டார்கள்.

வசனம் 11-ல் அவர்கள் துரோகம் செய்து, எருசலேமிலும், இஸ்ரவேலிலும் அருவருப்பானதை நடப்பித்ததைக் குறித்துக் கூறப்பட்டுள்ளது. " யூதா ஜனங்கள் துரோகம் பண்ணினார்கள் ". விக்கிரக ஆராதனை செய்பவர்களை விவாகம் பண்ணுவது தேவனுடைய கட்டளைகளுக்கு விரோதமானது (உபாகமம் 7:3). இஸ்ரவேல் கர்த்தருக்குப் பரிசுத்தமும்,அவருடைய விளைவின் முதற்பலனுமாய் இருந்தது (எரேமியா 2:3). அவர்கள் அவருடைய பரிசுத்தத்தைக் குலைத்துப் போட்டார்கள். அந்நிய ஜாதிப் பெண்களோடு அவர்களுக்கிருந்த தொடர்பு தேசத்தைத் தீட்டுப் படுத்திற்று. தேவன் அவர்களைப் "பரிசுத்த ஜாதியாகத்" தெரிந்து கொண்டார். அவர்களை நேசித்தார். அவர்கள் மத்தியில் பரிசுத்தராக அவர் வாசம் பண்ணினார். அவரையன்றி அவர்களுக்கு வேறு தேவர்கள் இருக்கலாகாது. விக்கிரக ஆராதனையும் விபசாரமும் நிறைந்த அந்நிய தேசத்துப் பெண்களை, இஸ்ரவேலர் விவாகம் பண்ணுவது நியாயப்பிரமாணத்திற்கு எதிராக தேவனை அவமானப்படுத்தும் செயல். அந்நிய தேசத்துப் பெண்கள் விக்கிரக ஆராதனை செய்து, தார்மீக வாழ்வில் தரம் தாழ்ந்தவர்கள். அவர்களை இவர்கள் விவாகம் பண்ணுவது தேவனுடைய நாமத்திற்கு இழுக்காகையால், அவர் தமது கோபத்தை வெளிப்படுத்துகிறார்.

இச்செயலுக்கு அவரளிக்கும் தீர்ப்பு," இப்படிச் செய்கிறவன் காவல் காக்கிறவனாயினும், உத்தரவு கொடுக்கிறவனாயினும், கர்த்தருக்குக் காணிக்கை செலுத்துகிறவனாயினும், அவனை யாக்கோபின் கூடாரங்களில் இராதபடிக்குக் கர்த்தர் சங்கரிப்பார்" (வசனம் 12). ஆங்கில வேதாகமத்தில் (KJV), "ஆசிரியராயினும், மாணவனாயினும் இப்படிச் செய்கிறவன் கர்த்தரால் சங்கரிக் கப்படுவான்" என்றுள்ளது. சுருங்கக் கூறின் இப்படிச் செய்கிறவர்கள் எத்திறத்தார் ஆயினும் அவர்கள் சங்கரிக்கப்படுவார்கள்.

அநேக ஊழியக்காரர்களும், விசுவாசிகளும் ஆண்களா யினும், பெண்களாயினும், தவறான திருமணத்தாலும், தகாத உறவுகளாலும் கர்த்தருடைய கடுமையான சிட்சிக்கும் கரத்தின் கீழ் அகப்பட்டிருக்கிறார்கள். தவறான துணையைத் தேர்ந்தெடுத் ததன் விளைவாக தூய்மையான ஊழியப் பாதையிலிருந்து விலகிப் பொய்யான மாயையை நோக்கி ஓடும் ஊழியர்களின் எண்ணிக்கைக்கும் இன்று குறைவில்லை.

அந்நிய நுகத்திலே அவிசுவாசியோடு பிணைக்கப்படும் விசுவாசி, தன் வாழ்க்கைத் துணையால் நினைவிலும், சொல்லிலும், செயலிலும் கெடுக்கப்படுகிறான். ஆணாகிலும் சரி, பெண்ணாகிலும் சரி அவர்களுடைய திருமண வாழ்வு நரகத்திற்கு ஒப்பாவதற்குக் காரணம், தவறான துணையைத் தெரிந்துகொண்ட படியால்தான்! சபைகள் இன்று பலங்குன்றிப் போனதற்கு இதுவும் ஒரு காரணம். சபைக்குரிய சத்தியங்களை நேசித்துக் கைக்கொள்ளும் ஒருவரோ, ஒருத்தியோ மாறுபாடான உபதேசங்க ளையும், ஆராதனை முறைகளையும் பின்பற்றும் துணையைத் தெரிந்து கொண்டால் இவ்வுலகிலேயே இருமடங்கு நரக வேதனையை அனுபவிக்க வேண்டியிருக்கிறது. எனவேதான், நீதி மொழிகள் 4:26-ஐ ஒவ்வொருவரும் எந்நேரமும் மறக்காமலிப்பது நல்லது. "உன் கால் நடையைச் சீர் தூக்கிப்பார்"

மனமுடைந்து போன மனைவிகள்

கர்த்தருடைய பீடத்தைக் கண்ணீரினாலும், அழுகை யினாலும், பெருமூச்சினாலும் நிரப்புகிறீர்கள் (வசனம் 13). இது யாருடைய கண்ணீர்? திருட்டு உறவின் திருவிளையாடல்களால் பாதிக்கப்பட்ட திருமதிகளின் கண்ணீர்! இஸ்ரவேலரின் செய்கைகளைக் கண்டு கர்த்தரே மனம் வெறுத்துப் போய் அவர்களுடைய காணிக்கைகளை மதிக்க மாட்டேன் என்கிறார். குடும்ப வாழ்வில் குழப்பம் உண்டானால்,

கர்த்தராகிய ஆண்டவர் நமது துதிகளையும், காணிக்கைகளையும் ஏற்றுக் கொள்வதில்லை.

கைப்பிடித்தவர்கள் கைவிட்டபடியால், கைம்பெண்கள் போல் வாழும் கொடுமை இழைக்கப்பட்ட மனைவிகளின் கண்ணீரால் கர்த்தருடைய பாதம் நனைகிறது. அநேக மனைவி களின் இணைபிரியாத தோழிகள் வருத்தமும், வேதனையும், மனமுறிவும், தனிமையும், கசப்பும், எதிர்காலத்தைக் குறித்த எதிர்பார்ப்பின்மையுமே! அன்னாளுடைய சக்களத்தி அவள் துக்கப்படும்படி விசனப்படுத்தினபடியால், அவள் மனமடிவடைந்து, மனங்கசந்து சாப்பிடாமல் அழுது கொண்டிருந்தாள் (1 சாமுவேல் 1:6-10). எசேக்கியேல்8:14-ல் தம்மூஸுக்காக அழுது கொண்டிருக்கும் தவறான பெண்களைக் காண்கிறோம். இங்கே கணவன்மார்களின் துரோகத்தினால் கண்ணீர் சிந்தும் காரிகையரைக் காண்கிறோம்.

எபேசியர் 5:25-ல் மனைவிகளின் துக்கத்திற்கான மாற்று மருந்து கொடுக்கப்படுகிறது. "புருஷர்களே உங்கள் மனைவிகளில் அன்பு கூருங்கள்". மேலும் 1 பேதுரு 3:7-ல், "புருஷர்களே, மனைவியானவள் பெலவீன பாண்டமாயிருக்கிறபடியினால், உங்கள் ஜெபங்களுக்குத் தடை வராதபடிக்கு, நீங்கள் விவேகத்தோடு அவர்களுடனே வாழ்ந்து, உங்களுடனே கூட அவர்களும் நித்திய ஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்கள் ஆனபடியால், அவர்களுக்குச் செய்ய வேண்டிய கனத்தைச் செய்யுங்கள்" என்று கணவன்மார்களுக்கு அறிவுரை கூறப்பட்டுள்ளது. மனைவிகளோடு அன்பாயிருந்து, அவர்களைக் கனம் பண்ண வேண்டுமென்பது தேவகட்டளை! ஆண் ஆதிக்கம் எனும் பெயரில் நடக்கும் அக்கிரமங்களையும், பெண்ணுரிமை, பெண்டிர் விடுதலை எனும் பெயரில் அரங்கேறும் அசிங்கங்களையும் அறவே தேவன் வெறுக்கிறார்.

வாழ்வின் எப்பகுதியிலும் ஆணுக்கென்று அதிக முன்னுரிமை, அளவுக்கு மீறித் தரப்படவில்லை. அனைத்து காரியங்களையும் அவன் தன் மனைவியோடு சமமாகப் பங்கிட்டுக் கொள்ள வேண்டும். "உங்களுடனே கூட அவர்களும்" எனும் சொற்றொடரே ஆனந்தத்தின் திறவுகோல்!

மூன்று முடிச்சுகள்

14-ஆம் வசனத்தில் மூன்று முடிச்சுகளைக் காணலாம். முதல் முடிச்சு ***"உன் இளவயதின் மனைவி"***! இப்பொழுது நீதிமொழிகள் 5:18 ; பிரசங்கி 9:9 – வசனங்களை நினைவு கூறுவது நல்லது.

“உன் இளவயதின் மனைவியோடே மகிழ்ந்திரு”. “நீ நேசிக்கிற மனைவியோடே நிலையில்லாத இந்த ஜீவ வாழ்வை அனுபவி”. மனைவி இளமையாய் இருந்த போது, அவள் அழகில் மயங்கி மகிழ்ந்தவன், அந்த இளமையும், அழகும் மறையத் தொடங்கும் போதும், அவள் மேல் அன்பாயிருப்பதை விட்டு விடலாகாது. சரீர வனப்பு சடுதியில் மறைந்து போவதால் அதற்கு அதிக முக்கியத்துவம் தரலாகாது.

இரண்டாம் முடிச்சு சற்று இறுக்கமானது. ***“அவள் உன் தோழி”*** (வசனம் 14). அடிமையல்ல! அழகான வார்த்தைகள்! வாழ்விலும், தாழ்விலும் “உடன்” இருந்து, இணைந்து செயலாற்றி, இன்பத்தையும், துன்பத்தையும் பங்கிட்டுக் கொள்ளும் கூட்டாளிதான் மனைவி! சங்கீதம் 45:7; எபிரெயர் 1:9-ல் பயன்படுத்தப்பட்டிருக்கும் “தோழர்” என மொழி பெயர்க்கப் பட்டுள்ள அதே எபிரேய,கிரேக்கச் சொல்லே இங்கு பயன்படுத்தப் பட்டுள்ளது. கிறிஸ்துவுக்குத் தோழரைப் போலவே, கணவனுக்கு மனைவி !! மனைவியைத் தோழியாக, நண்பனாகக் காணும் கணவர்கள் நம்மிடையே எத்தனை பேர் உண்டு?

மூன்றாம் முடிச்சின் முக்கியத்துவம் முறுமுறுப்புகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கிறது. ***“உன் உடன்படிக்கையின் மனைவி”*** (வசனம் 14) உடன்படிக்கை பண்ணின பின் முறுமுறுப்பானேன்? விவாக உறுதிமொழி ஒரு உடன்படிக்கையாகும். அதற்குச் *‘சபதம்’* என்றும் பொருள் உண்டு. இருவரையும் வாழ்க்கை முழுவதும் ஒன்றாகக் கட்டிப் போடும் தன்மையை உடையது அது. இரு தரப்பிலும் கனம் பண்ணப்பட வேண்டிய, உறுதியான உறவுதான் கணவன் மனைவி எனும் உறவு. அவர்கள் ஒருவருக்கு ஒருவர் உண்மையோடும், விசுவாசத்தோடும் வாழ்நாள் முழுவதும் இருக்க வேண்டியவர்கள்.

அவ்வுறவு வேசித்தனத்தின் நிமித்தமேயன்றி, வேறொன்றினாலும் வேறுபடக் கூடாது. (மத்தேயு 19:9) கணவன் மனைவி இருவருக்குள் யாராவது ஒருவர் மற்றொருவருக்குத் துரோகம் செய்யும் போது, இந்தக் கட்டிலிருந்து குற்றமற்றவர் விடுவிக்கப்படுகிறார். மரணம் அவர்களைப் பிரிக்கும்வரை கணவனும், மனைவியும் விவாக உறுதிமொழியைக் கனம் பண்ணி வாழ வேண்டும்.

இந்த மூன்று முடிச்சுகளுக்கும் சாட்சியாக இருப்பவர் கர்த்தரே! " கர்த்தர் உனக்கும், உன் இளவயதின் மனைவிக்கும் சாட்சியாக இருக்கிறார்"(வசனம் 14). திருமணத்திற்கு மனிதரல்ல, தேவனே சாட்சி! கர்த்தர் அனைத்தையும் காண்கிறார். அனைத்தும் அறிவார்.இருதயங்களின் நினைவுகளையும் அறிகிறார். அவருடைய கண்கள் காணாதபடி ஒன்றையும், ஒருவரும் செய்ய முடியாது. தகுதியான உறவுகளைக் காத்துக் கொள்ளவும். தகாத உறவுகளைத் தடை செய்யவும், கர்த்தர் நம் செயல்களையெல்லாம் கண்டு கொண்டிருக்கிறார் எனும் எண்ணமே போதுமானது.

வாழ்நாள் முழுவதும் வாழ வேண்டியது விவாகம் (வசனம் 15-16),

இதற்கு முன் நாம் தியானித்த வேதபகுதி கணவன் மார்களுக்கு எதிராகக் கர்த்தர் சுமத்திய குற்றச் சாட்டுகளைக் குறித்தது. இத்தியானத்தின் வாயிலாகத் திருமணமான சகோதர, சகோதரிகள் திருமண உறவு சற்றும் அசட்டை செய்யக் கூடாத ஒன்று எனப் புரிந்து கொண்டிருப்பார்களென நம்புகிறேன். விசுவாசிகள் அனைவரும் இக்காரியத்தில் தங்கள் பொறுப்பை உணர்ந்து நடந்து கொள்ள வேண்டுமென்று நான் தேவனை நோக்கி விண்ணப்பிக்கிறேன்.

14-ஆம் வசனம் ***"உன் இளவயதின் மனைவி", "உன் தோழி", "உன் உடன்படிக்கையின் மனைவி"*** எனும் மூன்று முடிச்சுகளைக் குறித்துக் கூறுகிறது. "அவளுக்கு நீ துரோகம் பண்ணினாயே" எனும் வார்த்தைகள் அனைவருடைய காதுகளிலும் எதிரொலிக்கிறது.

15-16வசனங்களில் அசாதாரணமான சொற்கள் பயன் படுத்தப்பட்டுள்ளன. "அவர் ஒருவனையல்லவா படைத்தார்"? மூலமொழியிலும், ஆங்கிலத்திலும் இந்த வாக்கியம், " அவர் அவர்களை ஒன்றாக அல்லவா ஆக்கினார் " என்றுள்ளது. (Did He not make them one" ? – K.J.V) " ஆகையால் ஒருவனும் தன் இளவயதின் மனைவிக்குத் துரோகம் பண்ணாதபடிக்கு உங்கள் ஆவியைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். தள்ளி விடுதலை நான் வெறுக்கிறேன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் ". யாரும் தட்டவோ, தவிர்க்கவோ முடியாத கண்டிப்பான கட்டளை இது!

“இதெல்லாம் பழைய பஞ்சாங்கம் ” என்று பலரும் பகடி பேசும் காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். விவாக உறுதிமொழியை வியர்த்தமாக (வீணானதாக) எண்ணும் காலம் இது! கைப்பிடித்த கணவனும், கட்டிய மனைவியும் ஒருவருக்கொருவர் உண்மை உள்ளவர்களாயிருப்பதை, காலத்திற்கு ஒவ்வாத நாகரீகமாகக் கருவோர் பலர். கர்த்தரையும், அவரது கட்டளைகளையும் அறியாதவர்கள் தான் இப்படி என்றல்ல, இத்தீய எண்ணம் கிறிஸ்தவர்களையும் தீண்டத் தொடங்கியிருக்கிறது. இவ்வசனங்கள் விவாகரத்தைக் குறித்து விவரமாகத் தெரிந்து கொள்ள நம்மைத் தூண்டுகின்றன.

தேவன் அவர்களை ஒன்றாக்கினார் (வசனம் 15)

“தேவன் அவர்களை ஒன்றாக ஆக்கவில்லையா?” (K.J.V) மத்தேயு 19:4-16-ல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இதே கருத்தை எடுத்துரைக்கிறார். “அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாய் இருக்கிறார்கள்”. இந்த வார்த்தைகள் அன்றும், இன்றும் மாறாதவைகள்! மாற்றக் கூடாதவைகள்! ஆதியாகமம் 2:23-24 வசனங்களை கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எடுத்துக்காட்டுகிறார். அவர் தொடர்ந்து கூறியதாவது, “ஆகையால் தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக் கடவன் ”. குமாரனாகிய தேவன் திருமணத்தைக் குறித்தும், விவாகரத்தைக் குறித்தும் உள்ள தமது எண்ணத்தை உறுதிபட இவ்வசனங்களில் வெளிப்படுத்துகிறார். இத்தலைப்பைக் குறித்து அதிகமாக அறிந்துகொள்ள, உபாகமம் 24:1-4; மத்தேயு 5:31-32; 19:3-9; மாற்கு 10:2-12; லூக்கா 16:18 – வசனங்களை வாசித்து தியானிக்கவும்.

மத்தேயு 19:9-ல் எழுதப்பட்டுள்ளபடி, வேசித்தனத்தின் நிமித்தமேயன்றி, வேறு எந்த ஒரு காரணத்திற்காகவும் விவாகரத்து செய்தால்,அது வேதவசனத்திற்கு விரோதமாகச் செயல்படுவதாகும். எந்த நாட்டின் சட்டமும், எந்தப் பாராளுமன்றத்தின் தீர்மானமும் தேவனருளிய பிரமாணங்களை ரத்து செய்ய இயலாது. வாழ்நாள் முழுவதும் தொடர வேண்டிய உறவே விவாக உறவு! இதை விசுவாசிகள் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். இவ்வுறவைப் பிரிக்க யாருக்கும், எதற்கும் அதிகாரம் கிடையாது. வேசித்தனத்தைக்கூட ஒரு காரணமாக ஏற்றுக் கொள்ள முடியாது.

விபச்சாரம் நடந்தவுடன் விவாக உறவு தானாகவே வேறுபட்டு விடுகிறது. ஏனெனில் வேசித்தனத்தினால் புதிய ஓர் உறவும், ஒன்றுபடுதலும் உண்டாகிறது. " வேசியோடு இசைந்திருக்கிறவன் அவளுடனே ஒரே சரீரமாய் இருக்கிறான் என்று அறியீர்களா? இருவரும் ஒரே மாம்சமாய் இருப்பார்கள் என்று சொல்லியிருக்கிறதே " (1 கொரிந்தியர் 6:16). மல்கியா2:15-ன்படி விவாகத்தின் உயரிய நோக்கமே, "தேவ பக்தியுள்ள சந்ததியைப் பெறும்படிதான்"! பெற்றோருக்குப் பெறும் பொறுப்புண்டு என்பதை இது காட்டுகிறது. "கர்த்தரால் வரும் சுதந்தரமாக" அவர் தந்த பிள்ளைகளை தேவபக்தியில் வளர்ப்பது பெற்றோரது பொறுப்பு.

மோசேயின் தாயிடம் பார்வோனின் குமாரத்தி கூறிய வார்த்தைகள் கவனத்திற்குரியவை. " நீ இந்தப் பிள்ளையை எடுத்துக் கொண்டு போய், அதை எனக்கு வளர்த்திடு. நான் உனக்குச் சம்பளம் கொடுக்கிறேன் " (யாத்திராகமம் 2:9). சில வேளைகளில் பெற்றோருக்குக் கிடைக்கும் "சம்பளம்" சற்றும் இடைவிடாத துன்பங்களும் துயரங்களுமாயிருப்பதைக் கண்டு, பல பெற்றோர் நாம் சரிவரப் பிள்ளையை வேத வசனத்தின்படி தான் வளர்த்தோமா என வியப்படைவதுண்டு. கர்த்தரை விட்டு விலகி, தன் வழியே போகும் பிள்ளையால் பெற்றோர் அடையும் துயரத்தைக் குறித்துக் கூறுவதற்கு வார்த்தைகளில்லை.

இளவயதின் மனைவிக்குத் துரோகம் பண்ணுவது என்பது விவாகரத்தையும் குறிக்கிறது. இதைக் குறித்துப் பரிசேயர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடம், "புருஷனானவன் தன் மனைவியை எந்த முகாந்தரத்தினாலும் தள்ளிவிடுவது நியாயமா என்று கேட்டார்கள்". அந்நாட்களில் மனைவி சரியாகச் சமைக்கவில்லை என்பதற்காகக் கூட விவாகரத்து செய்து விடுவார்கள். தேவனுடைய குமாரன் அது நியாயமல்ல எனும் விதத்தில் பதிலளித்தது அவர்களுக்கு அதிர்ச்சியளித்தது. " ஆதி முதலாய் அப்படி இருக்கவில்லை. ஆதலால் எவனாகிலும் தன் மனைவி வேசித்தனம் செய்ததின் நிமித்தமே அன்றி, அவளைத் தள்ளிவிட்டு, வேறொருத்தியை விவாகம் பண்ணினால் அவன் விபச்சாரம் செய்கிறவனாய் இருப்பான் " என்று அவர் கூறினார் (மத்தேயு 19:3-9). நியாயப் பிரமாணத்தின்படி விபச்சாரம், வேசித்தனத்திற்குரிய தண்டனை மரணமே!

தேவனுடைய பிள்ளைகள் விவாகரத்தைக் குறித்து நினைத்துக் கூடப் பார்க்கலாகாது. தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல, பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார். கற்போடும், பரிசுத்தத்தோடும் நாம் வாழ வேண்டும். 1 கொரிந்தியர் 7-ஆம் அதிகாரத்தை அடிக்கடி வாசித்து அதை நம் வாழ்வின் வழிகாட்டியாக்கிக் கொள்ளவேண்டும்.

வார்த்தைகள் - வார்த்தைகள் - வார்த்தைகள் (வசனம் 17)

"உங்கள் வார்த்தைகளினாலே கர்த்தரை வருத்தப் படுத்துகிறீர்கள். ஆனாலும் எதினாலே அவரை வருத்தப்படுத்து கிறோம் என்கிறீர்கள். பொல்லாப்பைச் செய்கிறவன் எவனும் கர்த்தரின் பார்வைக்கு நல்லவன் என்றும், அப்படிப்பட்டவர்கள் பேரில் அவர் பிரியமாய் இருக்கிறார் என்றும், *நியாயந்தீர்க்கிற தேவன்* எங்கே என்றும் நீங்கள் சொல்லுகிறதினாலேயே". அவர்களுடைய வார்த்தைகள் கர்த்தரை அவமானப்படுத்தும், அகந்தையான வார்த்தைகள். நூறு வருடங்களுக்கு முன் இவர்களுடைய பிதாக்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படியாமல் விக்கிரக ஆராதனை செய்தபடியால், சிறையிருப்புக்குள்ளாயினர். ஆனால் சிறையிருப்பிலிருந்து கர்த்தரால் விடுவிக்கப்பட்ட இப்புதிய தலைமுறையினர் அவருக்குக் கீழ்ப்படியாமல், விரோதமாகப் பேசுகின்றனர்.

அவர்களுடைய வார்த்தைகள் தன்னை வருத்தப் படுத்துகின்றன என்று கர்த்தர் சொல்கிறார். கர்த்தர் அவர்களிடம் எதிர்பார்க்கும் செயல்களைச் செய்வதைக் குறித்து, " இதோ, இது எவ்வளவு வருத்தமானது " என்றார்கள் (1:13) இப்போது அவர்கள் கூறும் வார்த்தைகளின் கருத்தென்ன? "நாங்கள் என்ன செய்தாலும் பரவாயில்லை.

ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பனாய் இருந்தபடியால், நாங்கள் தேவனுடைய ஜனங்கள். தேவனருளும் ஆசீர்வாதங்கள் எல்லாம் எங்கள் மூலமாகவே வருகின்றன. தேவன் எங்களை நியாயந் தீர்க்கமாட்டார்". ஏதோ சில பலிகளைச் செலுத்துவதால், அவர்கள் சுயதிருப்தியாலும், சுயநீதியாலும் நிறைந்து, தங்களுடைய செயல்களைத் தாங்களே மன்னித்துக் கொண்டு குருட்டாட்டம் பிடித்து நடந்தார்கள்.கர்த்தர் எதிர்பார்க்கும் பரிசுத்தத்தையும்,அவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்று நியாயப்பிரமாணம் கற்பித்ததையும் காண்பதற்குக் கூட மனமற்றவர்களாகி விட்டார்கள்.

தீமை செய்யத் துணிந்து விட்டபடியால், தாங்கள் கூறுவதே சரி என நம்பினார்கள். தேவனுடைய பார்வையில் தாங்கள் நல்லவர்கள் என்றும், அவர்கள் சொல்வதையெல்லாம் கண்டு அவர் மகிழ்கிறார் என்றும் எண்ணினார்கள். தங்களுடைய எண்ணத்திற்கேற்றவாறு தேவன் இருப்பார் என்பது அவர்களுடைய கணக்கு! தங்களுடைய தரந் தாழ்ந்த நிலைமையில் தேவனை வைத்துப் பார்த்தார்கள். எவ்வளவு பயங்கரமான காரியம் இது!.

* கிறிஸ்தவ உலகிலும் இவர்களைப் போல நினைப்பவர்கள் உண்டு. அவர்கள் எப்படிப்பட்டவர்கள்?

* தங்களுடைய விருப்பத்திற்கு ஏற்றவாறு வேத வசனங்களுக்கு, விளக்கமளித்து, வியாக்கியானம் செய்கிறார்கள்.

* உபதேசங்களும், நீதி போதனைகளும் தமக்கல்ல பிறருக்கே என்றெண்ணுகிறார்கள். செயல்படுகிறார்கள்

* "அவர்கள் நினைப்பதையும், சொல்வதையும் செய்வதையும் தேவன் அங்கீகரிக்கிறார் எனும் எண்ணத்தை மற்றவர்களுக்குள் திணிக்கிறார்கள்.

"எவ்வழியில் போனாலென்ன? உதட்டளவில் ஊழியம் செய்தால் போதும். எப்படிப் பிரசங்கித்தாலும், எதை உபதேசித்தாலும் தேவன் அதில் அக்கறை கொள்ளமாட்டார். ஏனெனில் இது கிருபையின் காலம்" என்று கூறுகிறார்கள்.

இது மட்டுமன்றி இன்று சபையில் காணப்படும் கனவீனமான காரியங்கள் பல: உலகத்தோடு ஒட்டுறவு, மதரீதியான சடங்குகளுடன் சகித்துப் போகுதல், இசை எனும் பெயரில், கிறிஸ்தவக் களியாட்டுகள், முக்காடிட்டுக் கொள்வோரை முட்டாள்கள் என்று கூறும் பெண்கள், பிரசங்க பீடங்களில் பெண்களின் ஆக்கிரமிப்பு, நடை, உடை, பாவனையில் நாகரீகம் எனும் பெயரில் அரங்கேறும் அநாகரீகங்கள், கலாச்சார மயமாக்குதல் எனும் முகமூடி தரித்த பேய் வணக்க முறைமைகள், கர்த்தருக்குக் கொடுக்கப்பட வேண்டிய கனம், காணிக்கை போன்றவைகளில் அசட்டை, சகோதரர்கள் இருக்கும் போதே ஜெபிக்கும், துதிக்கும், பிரசங்கிக்கும் பெண்கள் என்று பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. இவைகளையெல்லாம் "கர்த்தர் கண்டு கொள்ள மாட்டார்" எனும் எண்ணம் அதிகரித்து வருகிற நாட்கள் இவை!

இஸ்ரவேலிடம் கர்த்தர் கண்ட பாவங்களையும் குறைகளையும் விட அதிபயங்கரமான குறைகளும், துணிகரமான மீறுதல்களும் இன்று சபையில் மலிந்து விட்டன. இஸ்ரவேலருக்கு நேர்ந்ததை விசுவாசிகள் சற்று நினைத்துப் பார்ப்பது நல்லது!

"வார்த்தைகள்" கர்த்தரை வருத்தப்படுத்துகின்றன.தேவன் நாம் பேசும் ஒவ்வொரு வார்த்தையையும் கவனித்துக் கேட்கிறார். ஆராதனையில்,ஜெபத்தில், துதிக்கையில், சாட்சி சொல்லுகையில், பிரசங்கிக்கையில் நாம் பயன்படுத்தும் வார்த்தைகள் எப்படிப்பட்டவை? சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லி, புதிதாக தேவனுக்கு முன்பாக ஒன்றையும் செலுத்த முடியாத துதிகள், ஜெபங்கள்! சர்வாங்க தகனபலியை ஒரே ஒருமுறைதான் தகனிக்கமுடியும். அடுத்த பலி செலுத்த வேண்டுமாயின் வேறு புதிய ஆட்டுக்குட்டி தேவை! சாம்பலைத் தகன பலியாகச் செலுத்துவதற்கு ஒப்பானது திரும்பத் திரும்ப ஒரே மாதிரி துதிப்பது. கடந்த வாரம் தேவனைத் துதிக்கப் பயன்படுத்திய அதே வார்த்தைகளே இவ்வாரமும்! அவையே அடுத்த வாரமும்!

புதுப்பாட்டு, புதிய துதி, புதிதாக நன்றி கூறுதல் என ஆவிக்குரிய காரியங்களில் அனைத்தும் புத்தம் புதிதாக இருக்க வேண்டும். அவைதான் கர்த்தரால் ஏற்றுக் கொள்ளப்படும். ஆவியானவர் மட்டுமே, இப்புத்தம்புதுத் தன்மையைத் தர இயலும். ஆவியானவர் இருக்குமிடத்தில் ஆவிக்குரிய கனிகள் ஒவ்வொரு நாளும் புத்தம் புதிதாக வெளிப்படும் (கலாத்தியர் 5:22). அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம். விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம், இவை அனைத்தும் ஒவ்வொரு நாளும் புத்தம் புதிதாகக் காணப்படுவது எப்போது? ஆவியானவரின் ஆளுகைக்கு முழுமையாய் நம்மை ஒப்புக் கொடுக்கும் போது! ஆவியானவர் இல்லாத உள்ளத்திலும், இல்லத்திலும் இதற்கு எதிரிடையான தீயகுணங்கள்தான் காணப்படும்.

ஆவியின் கனிகள் நிறைந்த ஒரு வாழ்வைக் கற்பனை செய்து பாருங்கள். இது சாத்தியமே! நீங்கள் இப்போது பேசும் பேச்சு, நினைக்கும் நினைவு, செய்யும் செயல் அப்போது காணப்படுமா? ஆவியானவருக்கு இடமளியுங்கள். அப்போது வாழ்வு வளமாகும்.

இஸ்ரவேலர் ஆவிக்குரிய விதத்தில் பலி செலுத்தினாலும், அப்பலியின் பொருளை அவர்கள் உணரவில்லை. உதட்டளவில் ஆவிக்குரியவர்களாய் இருந்து, செயலளவில் இல்லாமல் போய் விட்டார்கள். இக்காரியத்தில் நாம் மிகவும் எச்சரிக்கை உள்ளவர்களாய் இருக்க வேண்டும். நியாயப் பிரமாணத்தின்படி செய்ய வேண்டிய பலி செலுத்துதல், காணிக்கை, தசமபாகம் செலுத்துதல், பண்டிகைகளை ஆசரித்தல் போன்றவைகளை இஸ்ரவேலர் செய்தனர். ஆனால் கர்த்தர் செய்யக்கூடாது என்று சொன்னவைகளைச் செய்யாமல் இருப்பது அவர்களுக்கு "வருத்தமாயிருந்தது". தேவனுக்கு விரோதமாகக் கலகம் செய்து, அவரது வார்த்தைகளை விட்டு விலகிப் போனார்கள்.

சாலையோரங்களில் எச்சரிக்கை அடையாளங்கள் இருப்பது போல, ஆவிக்குரிய பயணத்திற்கும் சில எச்சரிக்கை அடையாளங்களை தேவன் வைத்துள்ளார்."உலகத்திலும் உலகத்தில் உள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள்" (1யோவான் 2:15). "நீங்கள் இப்பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரியாமல் ", (ரோமர் 12:2) "நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி, உங்களைக் காத்துக் கொள்ளுங்கள்" (1 யோவான் 5:21) (உள்ளத்தில் கிறிஸ்துவை அகற்றி விட்டு, இடம் பெறும் எதுவும் விக்கிரகமே!) "கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல்" (எபேசியர் 5:11) அவர்களைவிட்டு வெளியே வாருங்கள் "மேலானவைகளைத் தேடுங்கள்" (கொலோசெயர் 3:1) "நீங்கள் எதைச் செய்தாலும், அதைக் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரியுங்கள் (கொலேசெயர் 3:17)

"அனைத்தையும் கர்த்தருடைய மகிமைக்காகச் செய்யுங்கள்" இந்த எச்சரிக்கைகளைப் படிப்பதும், கைக்கொள்வதும் அநேகருக்கு "வருத்தமாயிருக்கிறது".

அத்தியாயம் - 3

நியாயந் தீர்க்கிற தேவன் எங்கே?

மூன்றாம் அதிகாரம் யோவான் ஸ்நானகனைப் பற்றிய குறிப்புடன் தொடங்குகிறது. அவன் கர்த்தருக்கு முன்னோடியாக இருப்பான் என்றும் கூறப்படுகிறது. அடுத்து அவர்களுடைய இழுக்கான செயலாகிய தசமபாகம் செலுத்துதலை அசட்டை செய்த செயல் வெளிச்சத்திற்கு வருகிறது. இறுதியில் வேதாகமத்தின் மிக அழகிய பகுதியாகிய "மீந்திருக்கிறவர்களின்" தன்மை வெளிப்படுத்தப்படுகிறது, இத்தகைய கர்த்தருக்குப் பயந்து, "மீந்திருக்கிறவர்கள்" அன்றும் இருந்தார்கள். இன்றும் இருக்கிறார்கள். இனிமேல் கர்த்தருடைய இரண்டாம் வருகை வரையிலும் அத்தகையோர் இருப்பார்கள்.

2-ஆம் அதிகாரத்தின் இறுதி வார்க்கியம், "நியாயந்தீர்க்கிற தேவன் எங்கே? " தேவனுடைய பரிசுத்தத்தைக் குறைவாக மதிப்பிட்ட அவர்களுடைய அகந்தையையே இது காட்டுகிறது. இக்கேள்வி 2பேதுரு 3:4-ஐ நம் நினைவிற்குக் கொண்டு வருகிறது. "அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே"? "எலியாவின் தேவன் எங்கே?" என்று 2 ராஜாக்கள் 2:14-ல் எழுதப்பட்டுள்ளதும் நினைவிற்கு வருகிறது.

மல்கியாவிலும், பேதுருவின் நிருபத்திலும் உள்ள பரியாசக் காரர்களின் கேள்விகளுக்கும், எலிசாவின் கேள்விக்கும் இடையே பெரிய வேறுபாடு உண்டு. பரியாசக்காரர்களுக்கான பதில் அந்தந்த நூல்களிலேயே தரப்பட்டுள்ளன. எலிசாவிற்குப் பதில் உடனே கிடைத்தது. எலிசாவின் வாழ்விலும், ஊழியத்திலும் வல்லமை வெளிப்பட்டது. எலிசாவின் கேள்வி எலியாவின் தேவன் மீது அவன் வைத்திருந்த அசைக்க முடியாத விசுவாசத்தின் அடிப்படையிலானது. அதில் பரியாசமோ, பரிசுத்தக் குறைவோ கிடையாது. கர்த்தர் அவனுக்குப் பதிலளித்தார். அவனைக் கைவிடவில்லை.

யோவான் ஸ்நானகனின் வருகை:

மல்கியாவின் நாட்களில் வாழ்ந்தவர்கள் கேட்ட கேள்விக்கான பதில் தேவன் எக்காலத்திலும் அங்கிருக்கிறார் என்பதே. அவர்கள் அவரை ஒரு பொருட்டாக எண்ணாமல், வெறுத்துத் தவறாகப்

பேசினாலும் அவர் "மாறாதவராக" இருந்தார். அவர் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் முதலாம் வருகையை அறிவிக்கிறார். 400 வருடங்களுக்குப் பிறகு, பெத்லகேமில் அது நடைபெறப் போகிறது.

"இதோ நான் என் தூதனை அனுப்புகிறேன். அவன் எனக்கு முன்பாகப் போய் வழியை ஆயத்தம் பண்ணுவான்; அப்பொழுது நீங்கள் தேடுகிற ஆண்டவரும், நீங்கள் விரும்புகிற உடன்படிக்கையின் தூதனுமானவர் தம்முடைய ஆலயத்துக்குத் தீவிரமாய் 'வருவார். இதோ வருகிறார் என்று சேனைகளின் கர்த்தர் சொல்கிறார்" (3:1)

முதல் தூதன் யோவான் ஸ்நானகன்தான்! இந்த வசனமும், ஏசாயா 40:3-ல் "கர்த்தருக்கு வழியை ஆயத்தப் படுத்துங்கள்" எனும் வசனமும் சுவிசேஷங்களில் அவனைப் பற்றி எடுத்துரைக்கும் வசனங்களுடன் ஒத்துப் போகின்றன. இவ்விரு தீர்க்கதரிசனங்களைக் குறிப்பிட்ட பின் மாற்கு அவனுடைய பெயர் "யோவான்" என்றெழுதுகிறார் (மாற்கு 1:3-4). லூக்கா 1:67-ல் சகரியாவும், "நீயோ பாலகனே, உன்னதமானவருடைய தீர்க்கதரிசி எனப்படுவாய். நீ கர்த்தருக்கு வழிகளை ஆயத்தம் பண்ணவும்..... அவருக்கு முன்பாக நடந்து போவாய்" என்று தீர்க்கதரிசனம் உரைக்கிறார் (லூக்கா1:67-77). தீர்க்கதரிசிகள் உரைத்த வார்த்தைகள் யோவான் ஸ்நானகனின் ஊழியத்தில் நிறைவேறின படியால், அவன் தான் கர்த்தருக்கு முன்னோடி என்பதில் அணுவளவேனும் ஐயமில்லை.

எலியாவைக் குறித்து சுவிசேஷங்களில் கூறப்படும் காரியங்களையும், கடைசிக்காலச் சம்பவங்களையும் கூட்டிச் சேர்த்து யோவான் ஸ்நானகனைக் குறித்துக் குழப்பமடையலாகாது. பின்நாட்களில் நிறைவேற வேண்டிய தீர்க்கதரிசனங்களும் உண்டு. "கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்கு முன்னே நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன்" (மல்கியா 4:5) என்பது முதலாம் வருகையோடு தொடர்புடையதல்ல. எலியாவையும், மோசேயையும் போன்ற இரண்டு சாட்சிகள் வெளிப்படுத்தின விசேஷத்தில் வருகின்றனர். அவர்களும் கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துபவர்களே. ஆனால் மல்கியா 3:1-க்கும் 4:5க்கும் இடையே 2000-க்கும் அதிகமான வருட இடைவெளி உண்டு. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் தோற்றத்திற்கும் (முதலாம் வருகை), "பிரசன்னமாகுதலுக்கும்" (இரண்டாம் வருகை) இடையே உள்ள இடைவெளி அது!

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகை

அவ்வாறு முதல் வசனத்தில் முதலாவதாக யோவான் ஸ்நானகனையும், பிறகு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும் காண்கிறோம். நியாயந்தீர்க்கிற தேவன் எங்கே, எனும் கேள்விக்கான பதிலே, "நீங்கள் தேடுகிற ஆண்டவர்..... தம்முடைய ஆலயத்துக்குத் தீவிரமாய் வருவார்" என்பது. இரு காரியங்கள் இங்கு தெளிவாகின்றன. ஒன்று, வரப்போகிற நபர், இரண்டு அவர் வருகிற விதம்! "இதோ நான் என் தூதனை அனுப்புகிறேன்". தூதனை அனுப்புகிறவரே வரப்போகிறவர்! அவர் ஆண்டவர், எஜமான் (Adonai)! "நீங்கள் தேடுகிற ஆண்டவர்- *இதில் வரும் ஆண்டவர் யெகோவா அல்ல; எஜமான* அதர்வது தேவ குமாரனாகிய கிறிஸ்து! சங்கீதம் 110:1-ஐ – J.N.D வேதாகமத்திலிருந்து வாசிக்கவும். "கர்த்தர் (யெகோவா), என் ஆண்டவரை (எஜமானை Adonai) நோக்கி, நான் உம்முடைய சத்துருக்களைப் பாதபடியாக்கிப் போடும்வரைக்கும் நீர் என்னுடைய வலது பாரிசத்தில் உட்காரும் என்றார்". "நியாந்தீர்க்கிற தேவன் எங்கே" என்று கேட்டார்கள். "நியாயந்தீர்க்க குமாரன் வருவார்" என்கிறார் கர்த்தர். யோவான் 5:2-ஐ கவனமாக வாசிக்கவும். வேதாகமத்தில் புதைந்திருக்கும் இத்தகைய சத்தியங்களைக் கண்டுபிடித்துத் தியானிக்கும் அனுபவத்திற்கு ஈடும், இணையும் இல்லை.

இதைத் தொடர்ந்து கூறப்படும் "உடன்படிக்கையின் தூதனானவர்" என்பது முதல் தூதனைக் குறிக்காது. யாத்திராகமம் 23:20-ல் கர்த்தருக்கு 'தூதன்' எனும் பெயர் தரப்பட்டுள்ளது. "வழியில் உன்னைக் காக்கிறதற்கும், நான் ஆயத்தம் பண்ணின ஸ்தானத்துக்கு உன்னைக் கொண்டு போய்ச் சேர்க்கிறதற்கும், இதோ நான் ஒரு தூதனை உனக்கு முன்னே அனுப்புகிறேன். அவர் சமூகத்தில் எச்சரிக்கையாயிரு...". உடன்படிக்கையின் தூதனானவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே! மாம்சத்தில் வெளிப்பட்ட, சர்வ வல்லமையுள்ள தேவன் அவர்!

சகிப்பவன் யார்? (வசனம் 2-6)

"ஆனாலும், அவர் வ்ரும் நாளைச் சகிப்பவன் யார்?" எனும் வினாவுடன் இவ்வசனம் தொடங்குகிறது. இஸ்ரவேலர் தங்களை ஆராய்ந்து பார்த்துக் கொள்ளக் கேட்கப்படும் கேள்வி இது. கொரிந்தியரைப் போல, இவர்களும் தாங்கள் தேவனுடைய ஜனங்கள் எனும் பதவியில் தங்களைத் தாங்களே மகிமைப் படுத்திக்கொண்டிருந்தார்கள்.

கர்த்தர் வரும்போது, அவர்கள் பட்சத்தில்தான் இருப்பார், தங்களைப் புகழுவார் என்றெண்ணினார்கள். நியாந்தீர்க்கிற கர்த்தரின் பிரசன்னத்தை விரும்புகிறவர்கள் அவர்கள்தான் என்று சொல்லி நடந்தார்கள். ஆனால் தாங்கள் பயன்படுத்தும் வார்த்தை களின் விளைவைக் குறித்து அவர்கள் அறிந்திருக்கவில்லை. "நீங்கள் தேடுகிற ஆண்டவர்..... விரும்புகிற உடன்படிக்கையின் தூதர் தம்முடைய ஆலயத்துக்கு தீவிரமாய் (சீக்கிரமாய்) வருவார்". ஆனால் அவர் வரும் நாளைச் சகிப்பவன் யார்? அந்த வருகை அவர்களது எதிர்பார்ப்புகளுக்கு மாறாக இருக்கப் போகிறது. அவர் வருவதன் நோக்கமே நியாந்தீர்க்க! அவ்வாறு சீக்கிரமாய் வந்து, அவர்கள் தங்களைச் சீர்படுத்திக் கொள்வதற்கு நேரமில்லாதபடி, கையும் களவுமாய் அவர்களைப் பிடிப்பார்.

கர்த்தருடைய வருகையைப் பற்றிய நமது மனோபாவம்

இவ்வசனத்தை நம் வாழ்வோடும் பொருத்திப் பார்ப்பது அவசியம்.அவர் வருகையின் போது நாம் வெட்கப்படாதவர்களாய் இருக்கத்தக்கதாக நமது வழிகளும், செயல்களும் அமைந்துள்ள னவா? அவர் வரும் நாளைச் சகிப்பவன் யார், எனும் வினா நமக்கும் பொருந்துமே! அது அலட்சியப்படுத்தப்பட முடியாத கேள்வி என்பதை அதற்குப் பின்வரும் சொற்கள் உறுதி செய்கின்றன. "அவர் புடமிடுகிறவனுடைய அக்கினியைப் போலவும், வண்ணானுடைய சவுக்காரத்தைப் போலவும் இருப்பார்".

அக்கினி உலோகத்திலுள்ள அழுக்கை அகற்றும். சவுக்காரமும் (சோப்பு) அழுக்கு நீங்கக் கழுவும். பரிசுத்தராகிய கர்த்தர் இஸ்ரவேலரிடமிருந்து அகற்ற வேண்டிய அநேக காரியங்கள் உண்டு. நம் வாழ்விலும் அப்படித்தான்! "அவர் உட்கார்ந்து, வெள்ளியைப் புடமிட்டுச் சுத்திகரித்து, அவர்கள் கர்த்தருடையவர்களாய் இருக்கும்படிக்கும், நீதியாய்க் காணிக்கை செலுத்தும்படிக்கும், அவர்களைப் பொன்னைப் போலவும், வெள்ளியைப் போலவும் புடமிடுவார்" (வசனம் 3).

இஸ்ரவேலர் ஆவிக்குரிய வாழ்வில் வீழ்ச்சி அடைந்ததற்கு காரணமே லேவியின் புத்திரராகிய ஆசாரியர்கள்தான். சபை பலவீனப்படுவதற்கு காரணம் ஆசாரியர்களாகிய விசுவாசிகளின் தவறான நடத்தையே. புடமிடுகிறவனுடைய முகம் உருகிவரும் உலோகத்தில் தெரியும் வரை, அவன் அதைப் புடமிடுவான்.

கிறிஸ்துவின் சாயல் நம்மில் காணப்படும் வரை நாமும் புடமிடப்படுவோம். "அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும். அதைப் பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாய் இருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்து வெளிப்படும் போது உங்களுக்கு புகழ்ச்சியும், கனமும், மகிமையும் உண்டாகக் காணப்படும் "(1 பேதுரு 1:7). நாமனைவரும் அவருடைய "குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருக்க" வேண்டுமென்பதே தேவனுடைய நோக்கம் (ரோமர் 8:29).

ஒரு தேவ மனிதர் இப்படி எழுதுகிறார். "தமது நோக்கம் நம்மில் நிறைவேறும் வரை தேவன் ஓய்வதில்லை. அவர் அதை எப்படியேனும், எந்த முற்றயிலேனும், நிறைவேற்றுவார்". அவரது கூற்று எபேசியர் 1:4-ஐ நினைவுபடுத்துகிறது.

"நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும், குற்றமில்லாதவர் களுமாய் இருப்பதற்கு, அவர் உலகத் தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டார்".இந்த நினைவோடு இடைவிடாமல் நாம் வாழ்ந்தால், அது எப்படிப்பட்ட ஆசீர்வாதமான வாழ்க்கையாய் இருக்கும்! அவருடைய குமாரனுடைய வாழ்வின் சாயலில் நாம் என்றோ ஆகப்போவதல்ல, இன்றே ஆக வேண்டும்!

கர்த்தர் பிரியப்படுவாரா?

3,4-ஆம் வசனங்களின் இறுதியில் காணப்படும் வார்த்தைகளைப் பாருங்கள். "அப்பொழுது பூர்வ நாட்க்ளிலும் முந்தின வருஷங்களிலும் இருந்தது போல, யூதாவின் காணிக்கையும், எருசலேமின் காணிக்கையும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்கும்". இந்த வார்த்தைகளில் உள்ள துயர தொனியை கவனிக்கவும். இதற்கு முன் நாம் தியானித்த அதிகாரங்களில் கர்த்தருக்கு இழைக்கப்பட்ட அவமானத்தையும், அவமரியாதையையும் கண்டோம். நசல் கொண்டதையும், ஊனமுற்றதையும், பீறுண்டு போனதையும் அவர்கள் கர்த்தருக்குச் செலுத்தினார்கள். விலையின்றி பலி செலுத்த அவர்கள் விழைந்தார்கள். "நான் இலவசமாய் வாங்கி என் தேவனாகிய கர்த்தருக்கு சர்வாங்க தகன பலிகளைச் செலுத்தாமல் அதை உன் கையிலே விலைக் கிரயமாய் வாங்குவேன்" எனும் தாவீதின் கூற்றுக்கு முரணாக அவர்களுடைய நடவடிக்கை இருந்தது (2சாமுவேல் 24:24). தமக்குச் செலுத்தப்படும் காணிக்கைகள் பிரியமானவைகளாக இருக்க வேண்டும் எனும் கர்த்தருடைய ஏக்கம் இங்கே வெளிப்படுகிறது.

நம் உள்ளத்தை உலுக்கும் சத்தியம் இது. நம்முடைய துதிகளும், காணிக்கைகளும் பிரியமானவைகளாக, விலைக்கிரயம் செலுத்தப்பட்டதாக, புத்தம் புதியவைகளாக இருக்கின்றனவா? நிசப்தத்தை நிரப்ப வாய்ப்பந்தல் போடாதிருப்போமாக! கர்த்தர் நம்முடைய துதிகளையும், ஆராதனைகளையும் ஏற்றுக் கொள்ளுகிறாரா இல்லையா என்று போலும் அறியாது ஆராதிப்பதைப் போல ஆபத்தானது ஒன்றுமில்லை. இந்நாட்களில் மாற்றங்கள் உண்டாகிக் கொண்டடே இருக்கின்றன. ஆனால் சில காரியங்களில் மாற்றங்கள் ஏற்படலாகாது. ***"பூர்வ நாட்களிலும் முந்தின வருஷங்களிலும் இருந்தது போல"*** எனும் பதங்களைக் கவனிக்கவும்.

அந்நாட்களில் வாழ்ந்த இஸ்ரவேலரில் பலர் பாபிலோனில் பிறந்தவர்கள். அவர்கள் தங்களுக்குத் தெரிந்ததை செய்தார்கள். ஆனால் அவை கர்த்தருடைய பார்வையில் தரம் தாழ்ந்தவைகளாக இருந்தன. எனவே பூர்வ நாட்களிலும், முந்தின வருஷங்களிலும் இருந்தது போல காணிக்கைகளும் ஆராதனைகளும் இருக்க வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். புதிய தலைமுறையினர் செலுத்திய பலிகளும் காணிக்கைகளும் பக்தியுள்ள பழைய தலைமுறையினருக்கு அருவருப்பாகத் தோன்றியதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

தேவனுடைய காரியங்களில் என்றென்றைக்கும் நிலை நிற்கும் ஓர் உறுதியான கொள்கை உண்டு. அது ***"மெய்வழிக்கு மாற்றங்கள் தேவையில்லை"*** என்பதுதான். மாற்றங்கள் அவருக்குப் பிரியமானவைகள் அல்ல. காலங்கள் மாறலாம். காட்சிகள் மாறலாம் ஆனால் கர்த்தரும் அவருடைய காரியங்களும் மாறுவதில்லை. நின்று நிதானமாக சிந்தித்துப் பாருங்கள்.

கர்த்தர் மாறாதவர்

5,6-ம் வசனங்கள் நியாயந்தீர்க்க அவர் வரும்போது உண்டாகும் விளைவுகளைக் குறித்தவை. முரண்பாடான அனைத்தும் முற்றிலும் அகற்றப்படும். அநியாயம் செய்கிற அனைவருக்கும் "விரோதமாய்த் தீவிரமான சாட்சியாக" அவர் இருப்பார். இறுதியாக "நான் கர்த்தர், நான் மாறாதவர்" எனும் உண்மை நினைவூட்டப்படுகிறது. ஆகையால் யாக்கோபின் புத்திரராகிய அவர்கள் நிர்மூலமாகவில்லை. உடன்படிக்கையைக் காக்கிற தேவன் கூற விழைவதென்ன? அவர்கள் மாறியிருக்கலாம், ஆனால் அவர் மாறாதவர். மாறவும் மாட்டார். அவர்கள் அவருடைய நீதி நியாயங்களை மறந்திருக்கலாம். ஆனால் அவர் மறப்பதில்லை. அவர் என்றும் மாறாதவர்.

என்னிடத்திற்குத் திரும்புங்கள

7-ஆம் வசனம் "அவரிடத்திற்குத் திரும்பும்படி" அழைப்பு விடுக்கிறது. அவர்கள் ஏன் அவரை விட்டு விலகினார்கள், அவருடைய வழிகளை விட்டு விலகி, அவருடைய வார்த்தைகளை ஏன் மறந்தார்கள் என்று நாம் வியப்படைகிறோம். ஆனால் அவர்கள் அப்படித்தான் இருந்தார்கள். இன்றைய தலைமுறை எப்படி? இந்த அழைப்பு நமக்கும் உரியதாக இருக்கிறதே!

இந்த அழைப்பு தேவன் இஸ்ரவேலரைக் குறித்து எண்ணும் எண்ணங்களை வெளிப்படுத்துகிறது. இந்த வசனம் ஒரு குற்றச்சாட்டுடன் தொடங்குகிறது. "நீங்கள் உங்கள் பிதாக்களின் நாட்கள் தொடங்கி, என் கட்டளைகளைக் கைக்கொள்ளாமல், அவைகளை விட்டு விலகிப் போனீர்கள்". ஆரம்பம் முதலே அவர்களுடைய சரித்திரம் பாவத்தால் நிறைந்ததும், வழிவிலகிப் போவதுமாக இருந்தது. நியாயப் பிரமாணத்தின் கீழிருந்த இஸ்ரவேலரின் சரித்திரத்தை எடுத்துரைக்க இந்த ஒரு வாக்கியம் போதுமானது. அவர்களுடைய பூர்வ பிதாக்கள் "கர்த்தர் சொன்னவைகளையெல்லாம் செய்வோம்" என்று கூறியிருந்தார்கள். (யாத்திராகமம் 19:8) நியாயப்பிரமாணம் எழுதப்பட்ட கற்பலகைகள் அவர்களிடம் வந்து சேரும் முன்பே, பொன் கன்றுக்குட்டியை ஆராதித்து முதற் கற்பனையை மீறினார்கள்.

நாட்கள் நகர, நகர தேவன் அவர்களை வனாந்தரத்தில் நியாந்தீர்க்க வேண்டியதாயிற்று. ஆனாலும் அவர்கள் அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளவில்லை. உபாகமம் 4:7-8ல் அவர்களுடைய சிறப்பான பதவி மோசேயின் மூலம் கூறப்படுகிறது. ".... தேவனை இவ்வளவு சமீபமாய்ப் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதி எது, ... இவ்வளவு நீதியுள்ள கட்டளைகளையும், நியாயங்களையும் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதி எது?". இப்புகழுரைக்குத் தகுதியுள்ளவையாக அவர்களுடைய செயல்கள் அமையவில்லை.

நியாயாதிபதிகளின் காலத்திலும், இராஜாக்களின் காலத்திலும் அவர்களுடைய பாவச் செயல்கள் மாறவுமில்லை. மாயவுமில்லை. துன்பத்தின் மேல் துன்பம் வந்தும் அவர்கள் ஒரு பாடத்தையும் கற்றுக் கொள்ளவில்லை. ஆனால் தேவனோ மாறாதவராயிருந்தார். அவரது பண்பு யாத்திராகமம் 34:6-7ல் கூறப்பட்டுள்ளது. "கர்த்தர், இரக்கமும், கிருபையும், நீடியசாந்தமும், மகா தயையும், சத்தியமுமுள்ள தேவன். ஆயிரம் தலை முறைகளுக்கு இரக்கத்தைக் காக்கிறவர். அக்கிரமத்தையும், மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர். குற்றவாளியைக் குற்றமற்றவனாக விடாமல்..... விசாரிக்கிறவர்".

ஓய்வின்றி அவர்கள் பாவஞ்செய்தபடியால், தேவன் அவர்களை விட்டு விலக வேண்டியதாயிற்று. பாபிலோனில் 70 வருடங்கள் அவர்கள் சிறையிருப்பில் கிடந்தது அவர்களுடைய பாவத்தின் விளைவே. சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்து, எஸ்றா, நெகேமியாவின் தலைமையின் கீழ் எழுப்புதலைக் கண்ட புதிய தலைமுறையினரும் தங்களுடைய பிதாக்களைப் போலவே ஆவிக்குரிய வீழ்ச்சியை அதிகப்படுத்தினார்கள். அவ்வீழ்ச்சியோடு தற்பெருமையையும், அகம்பாவமும் இணைந்து கொண்டன.

ஆயினும் தேவன் மாறாதவராயிருந்தார். பாவத்தின் நிமித்தம் அவர்கள் இழந்தவை பல. அவர்களுடைய தேசமும், ஆலயமும் அழிந்து போயின. வறுமை அவர்களை வாட்டிக் கொண்டிருந்தது. இவ்வளவு நடந்தும் தேவன் அவர்களை நோக்கி, "என்னிடத்திற்குத் திரும்புங்கள். அப்பொழுது உங்களிடத்திற்குத் திரும்புவேன்" என்கிறார். இது எவ்வளவு அற்புதமானது! இதற்கு முன் வாசித்த வசனங்கள் இதை உறுதிப்படுத்துகின்றன. "நீங்கள் என் கட்டளைகளைக் கைக்கொள்ளாமல், அவைகளை விட்டு விலகிப் போனீர்கள்" எனக் கூறும் தேவன் அவர்கள் மனந்திரும்ப வேண்டியது மிகவும் அவசியம் என்று உணர்த்துகிறார். அவர்களுடைய நிலைமை மிகவும் பரிதாபகரமானது. நியாயப் பிரமாணத்தைக் கைக் கொண்டால்,"நீ உன்வழியை வாய்க்கப் பண்ணுவாய். அப்பொழுது புத்திமானாயும் நடந்து கொள்ளுவாய்" என்று கர்த்தர் யோசுவா விடம் கூறியிருந்தார் (யோசுவா1:8). தாவீதும், "அவைகளைக் (கர்த்தருடைய நியாயங்களை) கைக்கொள்ளுகிறதினால் மிகுந்த பலன் உண்டு" எனக் கூறுகிறார்(சங்கீதம் 19:11). ஆனால் இஸ்ரவேலருக்கு இந்த வசனங்கள் அர்த்தமற்றவைகளாய்த் தோன்றின.

வசனத்தை விட்டு விலகினதன் மூலம், அவர்கள் தேவனை விட்டு விலகினார்கள். "நாங்கள் எந்த விஷயத்தில் திரும்ப வேண்டும்"? அவர்கள் கேட்ட கேள்வி இது. வசனத்தைப் புறக்கணித்தபடியால், அவர்களை அறியாமை மேற்கொண்டது. தேவனுடைய நியாயங்கள் எவை என்று அறியாதபடியால் அவர்கள் இக்கேள்வியைக் கேட்டார்கள். இது 2 நாளாகமம் 34க்கு ஒத்திருக்கிறது.யோசியா நன்றாக ஆட்சி செய்து கொண்டிருந்தான். உள்ளுணர்வின் மூலம் அப்படிச் செய்தோனேயன்றி அவன் தேவனுடைய சட்ட திட்டங்களை வாசித்து அவ்வாறு செய்யவில்லை. அந்த நேரத்தில்தான் ஆசாரியனாகிய இல்கியா சம்பிரதியாகிய சாப்பானிடம் வந்து, "கர்த்தருடைய ஆலயத்திலே நியாயப்பிரமாண புத்தகத்தை கண்டெடுத்தேன்" என்று கூறினான். நல்ல ராஜாவாகிய யோசியா அதை வாசிக்கக் கேட்டபோது தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு, "கர்த்தருடைய

வார்த்தையை நம்முடைய பிதாக்கள் கைக்கொள்ளாதே போனபடியினால், நம்மேல் மூண்ட கர்த்தருடைய உக்கிரம் பெரியது" என்றான்(2 நாளாகமம் 34:19-21).

கர்த்தருடைய வசனத்தை விட்டு விலகுவது அவரை விட்டே விலகுவதாகும். இது ஒரு மகா பயங்கரமான செயல். எனவே நாம் ஒவ்வொருவரும் அவருடைய வசனத்தை விட்டு விலகாமல் இருக்க உறுதி மொழி எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்நாட்களில் ஆவிக்குரிய வறுமையும், ஆலயத்தில் குறைவான நபர்களும்,ஆசீர்வாதம் இல்லாமையும் அதிகரிப்பதற்குக் காரணம் விசுவாசிகள் கர்த்தருடைய வழிகளை விட்டு விலகினபடியால்தான். கர்த்தருடைய வசனத்திற்குக் கீழ்ப்படியாத படியாலும், அவருடைய வசனம் நம்மிடம் எதிர் பார்க்கிற செயல்களைச் செய்யாதபடியாலும் இந்நிலை உண்டாகிறது. இஸ்ரவேலர் சிறையிருப்பில் இருந்து திரும்பினார்களே அன்றி கர்த்தரிடத்திற்குத் திரும்பவில்லை. அவர்கள் தங்கள் செல்வத்தையும், செல்வாக்கையும் அதிகரித்துக் கொள்ளவே விரும்பினார்கள்.ஆனால் அத்தனை ஆசீர்வாதங்களுக்கும் ஊற்றாய் இருக்கும் கர்த்தருக்குப் பயப்படும் பயத்தை விட்டு விட்டார்கள். நிற்பதற்குக் கால்கள் வேண்டும். ஆனால் கால்களைத் தந்த கர்த்தர் அவர்களுக்குத் தேவையில்லை. இப்படிப்பட்ட நிலையிலும் தேவன் அவர்களை தம்மிடத்திற்குத் திரும்பும்படி அழைக்கிறார். அவர்களுடைய நிலைமை என்ன, எதைத் தொலைத்து விட்டார்கள் என்பதை அவர் அறிவார். தம்முடைய கற்பனைகளைக் கைக் கொண்டால் அவர்கள் எப்படிப்பட்ட நிலைமையில் இருப்பார்கள் என்பதையும் அவர் அறிவார்.

மீண்டும் அழைத்திடும் தேவா, உம் ஜனத்தை
முன் நாட்களில் எமை அழைத்தீரன்றோ
அன்றனலாய், புதிதாய், பாயொளியாய்
நன்றாய் இருந்ததே உம்மீது எமதன்பு
குன்றா உம்கிருபை யாமறிந்த போது
அன்றகன்றதே எம் இருளனைத்தும்
இன்று மீண்டும் அழைத்திடும் தேவா
எமதன்பு கொழுந்து விட்டெரிந்திட

மீண்டும் அழைத்திடும் தேவா, உம் ஜனத்தை
உலகம் பகைத்திடினும் உமது ஊழியரின்
அலங்காரம் அன்று எளிமை மட்டும்தானே
நலம் வாழ வாஞ்சிக்கும் எமதிதயங்கள்
வல்லவா, உம்மால் மட்டும் நிறைவு பெற
மீண்டும் எமை அழைத்திடும் தேவா

நான் உங்களிடத்திற்குத் திரும்புவேன் (வசனம் 7)

இஸ்ரவேலரின் நன்மைக்காகவே, அவர்கள் தம்மிடத்திற்குத் திரும்பும்படி கர்த்தர் அழைக்கிறார். என்னிடத்திற்குத் திரும்புங்கள், அப்பொழுது உங்களிடத்திற்கு திரும்புவேன் என்கிறார். வாஞ்சையும், அன்பும் அவ்வார்த்தைகளில் இழையோடுகின்றன. தங்களுடைய இழப்பையும். வறுமையையும், அவர்கள் உணருவார்களேயானால் இந்த அழைப்பின் முக்கியத்துவத்தை அசட்டை பண்ணமாட்டார்கள்.

தேவன் இஸ்ரவேலைவிட்டு நீங்குதல

எசேக்கியேலின் நாட்களில் கர்த்தர் இஸ்ரவேலை விட்டு நீங்கினதைத் காணலாம். மிகவும் வருந்தத்தக்க நிகழ்ச்சி அது. "இஸ்ரவேலின் தேவனுடைய மகிமை அங்கே விளங்கினது" (எசேக்கியேல் 8:4). "இஸ்ரவேலின் தேவனுடைய மகிமை கேருபின் மேலிருந்து எழும்பி, ஆலயத்தின் வாசற்படியிலே வந்தது" (9:3). பிறகு "கர்த்தருடைய மகிமை கேருபினின் மேலிருந்து எழும்பி, ஆலயத்தின் வாசற்படியிலே வந்தது" (10:18). அதன் பின்னர் "கர்த்தருடைய ஆலயத்தின் கிழக்கு வாசலிலே போய் நிற்க இஸ்ரவேலின் தேவனுடைய மகிமை அவைகளின் மேல் உயர இருந்தது" (10:19). இறுதியாக " கர்த்தருடைய மகிமை நகரத்தின் நடுவிலிருந்து எழும்பி நகரத்துக்குக் கிழக்கே இருக்கிற மலையின் மேல் போய் நின்றது" (11:23). விலக மனமின்றி படிப்படியாகக் கர்த்தருடைய மகிமை இஸ்ரவேலை விட்டு நீங்கினதை இங்கு காண்கிறோம்.மல்கியாவின் நாட்களில் வாழ்ந்த தலைமுறையின ருடைய பிதாக்களின் பாவமும், வழிவிலகிய செயலும் கர்த்தருடைய மகிமை இஸ்ரவேலை விட்டு நீங்கும்படி செய்தன. கர்த்தருடைய மகிமை போனவுடன், அவர்களுடைய செழிப்பும், செல்வமும், ஆசீர்வாதங்கள் அனைத்தும் போயின. தேவனுடைய பிரசன்னத்தின் ஒரு அடையாளம் கூட அங்கே காணப்படவில்லை.

இஸ்ரவேலின் அன்றைய நிலைமையை இரு பெயர்கள் தெரிவிக்கின்றன. கர்த்தருடைய பெட்டி பிடிபட்ட போது, ஏலியின் மருமகள் தான் பிரசவித்த பிள்ளைக்கு ***"இக்கபோத"*** (மகிமை இஸ்ரவேலை விட்டுப் போயிற்று) என்று பேரிடுகிறாள்(1 சாமுவேல் 4:21). சில காலம் கழிந்து ஓசியா தன் மகனுக்கு ***"லோ-அம்மி"*** (என் ஜனமல்ல)" என்று பேரிடுகிறான் (ஓசியா 1:9).

இஸ்ரவேல் மக்கள் அதை அறியவில்லை

இதே நிலைமையில்தான் மல்கியாவின் நாட்களில் வாழ்ந்த இஸ்ரவேலரும் இருந்தார்கள். வருத்தத்திற்குரிய காரியம் இது. கர்த்தர் அதிகமாகப் பிரியப்பட்ட ஜனங்கள் அவர்கள். எனினும் அவர்கள் கர்த்தரை விட்டு விலகிப் போனார்கள். கர்த்தருடைய வார்த்தையை அசட்டை பண்ணினபடியால், அவர் அவர்களை விட்டு விலகினார். கர்த்தரை விட்டு விலகிப் போயிருப்பதை, அவர்கள் உணராதிருந்தார்கள். பிதாக்களின் பாவத்தினிமித்தம் சிறையிருப்புக்குப் போனவர்கள் திரும்ப வந்து வீடுகளையும், நிலங்களையும், ஆலயத்தையும் திருப்பிக் கொண்டார்கள். ஆனால் அவர்கள் திரும்ப வருவதற்குக் காரணமாயிருந்த கர்த்தரிடத்திற்கு அவர்கள் திரும்பவில்லை. கர்த்தரையும், அவருடைய வசனத்தையும் விட்டு விட்டார்கள்.

அவர்கள் சிறையிருப்பில் இருந்த போதும் கர்த்தருடைய வசனத்தை அசட்டை செய்திருந்தார்கள். மல்கியா 3:5, நம்மை நடுங்க வைக்கும் சித்திரத்தைத் தீட்டுகிறது. அவர்கள் சூனியக்காரராகவும், விபசாரராகவும், கர்த்தருக்குப் பயப்படாமல் விதவைகளும், திக்கற்ற பிள்ளைகளுமாகிய கூலிக்காரரின் கூலியை அபகரித்துக் கொள்கிறவர்களாகவும், பரதேசிக்கு அநியாயம் செய்கிறவர்களுமாய் இருந்தார்கள். இச்செயல்கள் அனைத்தும் கர்த்தருடைய வசனத்திற்கு முரணானவை. இதற்கு முன்புள்ள அதிகாரங்களில் தேவன் அவர்களை எவ்வாறு தண்டித்தார் என்று எழுதப்பட்டுள்ளது. எத்தனை தண்டனைகளை அடைந்தாலும் அவர்கள் கர்த்தருடைய நாமத்தையும், பந்தியையும் அசட்டை செய்து, மிகக் கேவலமான முறையில் பலி செலுத்தி வந்தார்கள். "இதோ இது எவ்வளவு வருத்தமானது" என்று சலித்துக் கொண்டு பீறுண்டதையும், ஊனமானதையும் பலியாகச் செலுத்தினார்கள்.

கர்த்தருடைய பிரமாணங்களை விட்டு விலகினபடியால், கர்த்தரிடமிருந்து விலகிப் போனார்கள்.

"இதோ, இது எவ்வளவு வருத்தமானது" எனும் வார்த்தைகள் இந்நாட்களில் வாழும் விசுவாசிகளுக்கும் பொருந்துகிறது. ஆராதனையும், ஊழியமும், அப்பம் பிட்குதலும், காணிக்கை செலுத்துவதும் வருத்தமான செயல்களாகப் பல விசுவாசிகளுக்குத் தோன்றுகின்றன. கர்த்தருடைய நாமத்திற்கும், அவர் பெயர் விளங்கும் இடமாகிய சபைக்கும் செலுத்த வேண்டிய கனத்தைச் செலுத்தாமல், கவலையின்றி நடக்கும் தேவனுடைய பிள்ளைகள் நம்மிடையில் உண்டல்லவா?

கவனமற்ற நடை, உடை, பாவனைகள், ஆராதனைகளில் வாரந்தோறும் பங்கு கொள்ளாதிருத்தல், நினைத்த போது சபைக்கு வருவதும், போவதும், ஆராதனைகளின் போது கண்ணியமில்லாமல் சரிந்து, சாய்ந்து உட்காருதல், தாமதமாக வருதல், தேவசெய்தியை சலிப்புடன் கேட்பது, செய்தியையும், செய்தி கொடுப்பவரையும் கேவலமாக விமர்சிப்பது, வசனத்தையும் ஜெபத்தையும் ஒதுக்கித் தள்ளுவது போன்ற செய்கைகள் நம்மிடையில் இல்லையோ? சிலருடைய உடைகளும், முகப்பூச்சுகளும் (Make up) அருவருப்பாக இருக்கின்றனவே. தேவனால் கிரயத்திற்குக் கொள்ளப்பட்ட அவருடைய பிள்ளைகளின் இத்தகைய செயல்கள், அவர்களுடைய இருதயம் தேவனை விட்டு வெகு தூரம் சென்றாயிற்று என்பதற்குச் சான்றுகளல்லவா? நம்மை மீட்டுக் கொண்ட மீட்பருக்குத் துரோகம் செய்யலாமா? களியாட்டு களுக்காகவும், கண்டவர்களைப் பிரியப்படுத்தவும் நினைத்து, கர்த்தருடைய பந்தியில் பங்கு கொள்ளாமல், வாரத்தின் முதல் நாளிலே சபைக்கு வராமல், சிரித்தும், பரிகசித்தும் நடக்கும் தேவனுடைய பிள்ளைகளுக்கும், இஸ்ரவேலருக்கும் இடையே என்ன வேறுபாடு உண்டு?

கர்த்தருக்குப் பலி செலுத்துவது இஸ்ரவேலருக்கு வருத்தமாக இருந்தது. "இதோ இது எவ்வளவு வருத்தமானது" என்றார்கள். கர்த்தருடைய பந்தியில் பங்கேற்பதும், அவருடைய காரியங்களைச் செய்வதும் இன்றைய விசுவாசிகளுக்கு வருத்தமான செயல்களாகத் தோன்றுகின்றன.

உண்மையை விரும்பும் தேவன

கிறிஸ்தவ வாழ்வில் உண்மை விளங்கும்படி தேவன், அனைவரும் தம்மிடத்திற்கும், தம்முடைய வசனத்திற்கும் திரும்ப வேண்டுமென விரும்புகிறார். பொய்யும், மாய்மாலமும் மலிந்து போன திரும்புவதே, மெய்யான கிறிஸ்தவ வாழ்விற்குச் சான்றாகும். வசனத்தை விட்டு விலகுவது, தேவனை விட்டு விலகுவதாகும். "என்னைப் பொறுத்தமட்டில் எல்லாம் சரியாகத்தான் தெரிகிறது" என்பீர்களானால் அது தவறான போக்குதான். "என் ஆத்துமாவைப் பொறுத்தமட்டில் எல்லாம் நன்றாகத்தான் உள்ளது" என்பது நம்மை நாமே வஞ்சித்துக் கொள்வதாகும். வாசகரே உமது நிலை எப்படி உள்ளது?

தேவனுக்குக் கீழ்ப்படியாததால் இஸ்ரவேலில் பாவம் பெருகிற்று. உங்கள் பாவங்களுக்கு "அறியாமை" எனும் பெயர் இடவேண்டாம். "அறியாமை" தப்பிப்பதற்கான வழி அல்ல. மற்றவர்கள் போதிக்கும் வரை காத்திராமல், ஒவ்வொரு விசுவாசியும் வேதத்தை வாசித்து, அறிந்து உணர்ந்து கொள்ள வேண்டும். தேவனுக்குக் கீழ்ப்படிகிற காரியத்தில் நாம் ஒவ்வொருவரும் தனித்தனியாக அவருக்குக் கணக்கொப்புவிக்க வேண்டும். பிறர் மீது பழி போட அங்கு இயலாது. இத்தருணத்தில் நீங்கள் வாசிக்க வேண்டிய வசனங்கள் பின்வருமாறு: 2 கொரிந்தியர் 6:14 ;1யோவான் 2:15;எபேசியர் 5:11; ரோமர் 12:1-2; கொலோசெயர் 3:2;எபிரெயர் 10:25; 1 பேதுரு 2:12. வாழ்க்கைக்குரிய தகுதிகளான கண்ணியம், நீதிநெறி, பரிசுத்தம், நேர்மை, மனச்சாட்சியுடன் நடந்து கொள்ளுதல் போன்றவைகளை அறவே புறக்கணித்துவிட்ட இவ்வுலகில் தேவனுடைய பிள்ளையாக வாழ இவ்வசனங்கள் இன்றியமையாதவை. உலகத் தாரைப் போலல்லாது, வித்தியாசமான ஓர் வாழ்க்கை வாழவே நீங்கள் அழைக்கப்பட்டுள்ளீர்கள். நாம் வாழ்ந்து காட்டுவோம்! வேத வசனமாகிய தராசில் நம் வாழ்வை நிறுத்துப் பார்ப்போமா? தேவன் உங்கள் காரியத்தில் "தெக்கேல்" (தானியேல் 5:27) என்றெழுதி விட்டால், அது எவ்வளவு பயங்கரமாயிருக்கும். ஆசீர்வாதம் தேவையா? உங்களை ஆராய்ந்து பாருங்கள்! தேவன் இன்றும், இப்பொழுதும் அழைக்கிறார். "என்னிடத்திற்குத் திரும்புங்கள். அப்பொழுது உங்களிடத்திற்குத் திரும்புவேன்" (3:7)

ஆயினும் தேவன் இன்னும் அழைக்கிறார்

இத்தனை நடந்தும் இன்னும் அழைக்கிறாரே
எத்தன் நான் செவி சாய்ப்பேனா? – என்னைப்
பித்தனாக்கும் சிற்றின்ப வழி செல்வேனா?
எத்தனை சீக்கிரமாய் பறந்திடுதே நாட்கள்
ஆத்தும உறக்கம் மாறிடும் நாள் என்றோ?
இன்னமும் அழைக்கிறார் என் இனிய தேவன்
என்னாளும், எழாதிருப்பேனோ நான்?
பின்தள்ள வியலுமா அவர்தம் அன்பை
என்மீது உயரும் அவர்தம் கவலை எள்ளிடலாகுமோ?
இன்னமும் அழைக்கிறாரே! தாமதிக்கலாகுமோ நான்?

அந்நாட்களில் தேவன் விடுத்த அழைப்பை இஸ்ரவேலர் வீணாக்கினர். மேற்கண்ட கீர்த்தனையின் வரிகள் நம் இதயத்தைத் தொட வேண்டும். நம் ஒவ்வொருவரையும் தேவன் ஒருமுறை கூட அழைக்கிறார். தேவன் அழைத்த அழைப்பிற்கு அவர்கள் தந்த பதில் அவர்களுடைய அறிவில்லாமையை வெளிப்படுத்துகிறது. "நாங்கள் எந்த விஷயத்தில் திரும்ப வேண்டும்"? இது ஒரு பதிலா? நூறு வருடங்களுக்கு முன் பாபிலோனில் சிறையிருப்புக்குப் போனவர்களின் பிள்ளைகள் இவர்கள்தான்! (2 ராஜாக்கள் 25 ; எரேமியா 25:11)

சிறையிருப்பிலிருந்து திரும்ப வந்தவர்களுக்குள்ளே நடந்த எழுப்புதலைப் பற்றி எஸ்றா, நெகேமியா, ஆகாய் புத்தகங்கள் கூறுகின்றன. அதைத் தொடர்ந்து ஏற்பட்ட வீழ்ச்சியையும் அந்நூல்கள் எடுத்துரைக்கத் தவறவில்லை. பாபிலோனில் பிறந்த இஸ்ரவேல் ஜனங்கள் எருசலேமின் மதில்களும், தேவாலயமும் கட்டப்பட்டதைக் கண்ணாறக் கண்டார்கள். அவர்களுடைய ஆராதனை உதட்டளவிலானது. இருதயமோ தேவனை விட்டு வெகு தூரம் விலகி இருந்தது. எனவே தேவன் அவர்களை தம்மிடத்திற்குத் திரும்பும்படி அழைக்கிறார். அவர்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களாகையால், அவருடைய வழிகளில் நடக்க வேண்டிய கடமை அவர்களுக்குண்டு. ஆனால் அவர்கள் உலகத்தின் வழியில் நடந்து, கர்த்தருடைய வழிகளைக் கைவிட்டு சுயசித்தத்தின்படி வாழ்ந்து வந்தார்கள்.

நாமும் மறந்து விட்டோமா?

இதே நிலைமைதான் "பெயர்க் கிறிஸ்தவ" உலகிலும் நிலவி வருகிறது. அது அப்படி என்றால், விசுவாசிகளின் கூடுகை எப்படியுள்ளது? பரிசுத்த ஆவியானவர் அருளிய வெளிச்சத்தில் தேவனுடைய மனிதர்கள் வேதாகமத்தில் புதைந்து கிடக்கும் சத்தியங்களைக் கண்டு பிடித்து அவற்றை மற்றவர்களுக்கும் அறிவித்தார்கள். அவர்களுடைய உதடுகளிலிருந்தும், எழுது கோல்களிலிருந்தும் விலையேறிய சத்தியங்கள் வெளிப்பட்டன. வேத வசனத்திற்கு விரோதமாகப் பெயர்க் கிறிஸ்தவ சபைகள் இருப்பதைக் கண்டு அவைகளை விட்டு வெளியே வந்தார்கள். தனியே கர்த்தருடைய நாமத்தில் கூடி ஆராதிக்கத் தொடங்கினார்கள். எழுப்புதல் உண்டாகி ஆசீர்வாதமான மழை பெய்தது. சபைக்குரிய காரியங்களில் கிறிஸ்துவின் தலைமையை மதித்து, பரிசுத்த ஆவியானவரின் ஆளுகைக்குத் தலை வணங்கினார்கள். ஆவியானவருக்கு அந்நாட்களில் முழு சுதந்திரம் இருந்தது. வேத அறிவு அதிகரிக்கும் போது கீழ்ப்படிதலும், தேவனுடைய வழிகளில் நடப்பதும் அதிகரிக்க வேண்டும். அன்று அது நடந்தது. தங்களது தகுதிக்கும், சிறப்புரிமைகளுக்கும் இணங்க அவர்கள் பரிசுத்தத்தின் மேல் பரிசுத்தமடைந்து முன்னேறினார்கள். ஆனால் அவர்களுக்கப் பின் வந்த பின்தலைமுறையினர் இவைகளை மறந்து விட்டார்கள். பலர் மறுதலித்து விட்டார்கள். இன்று விசுவாசிகளுக்கு வேத அறிவு அதிகமாக உண்டு. ஆனால் வேதத்திற்கேற்றபடி நடக்கும் நடை இல்லை.

பொறுப்புண்டாக்கும் பொன்னொளி

மல்கியாவின் காலத்தில் தேவன் விடுத்த அழைப்பு அனைவருக்கும் உரியதல்ல. வேத வசனத்தின் மூலமாக தேவனுடைய சித்தத்தைக் குறித்த அறிவை அடைந்தவர்களுக்கு மட்டுமே அந்த அழைப்பு விடுக்கப்பட்டது. இன்றைய கிறிஸ்தவ உலகிலும் அநேக காரியங்களைக் குறித்து வேதம் போதிப்பது என்ன என்று அறியாதோர் பலருண்டு. பல சந்தர்ப்பங்களில் அவர்கள் தேவனுடைய வழிகளில் நடப்பதுமில்லை. அவர்களுக்குக் கிடைத்த ஒளியின் அளவுக்கேற்றவாறு நடந்து கொள்கிறார்கள்.எனவே அவர்களுக்கு அதிகமான பொறுப்புமில்லை. ஆழமான சத்தியங்களை அறிந்து கொள்ளவும். அடைந்தவர்களுக்கு அதிகப் பொறுப்பும், கடமையும் உண்டு.

அதிகமான ஒளியைப் பெறுகிறவர்கள் தங்களுடைய நிலைமையை நிலைநிறுத்திக் கொள்வது எளிதான காரியமல்ல.அதிகமான பொறுப்பும், கடமையும் அவர்களுக்குண்டு. தேவனுக்குக் அதிகமாக அவர்கள் கணக்கொப்புவிக்க வேண்டும்.

தேவன் அழைத்திருக்கும் இப்பொறுப்புமிக்க நிலைமையில் நிற்பதில் பல சிக்கல்கள் உருவாகும். ஆனால் எபிரெயர் 13:13 மிக எளிமையான ஓர் ஆலோசனையை தருகிறது. “ஆகையால் நாம் அவருடைய நிந்தையைச் சுமந்து, பாளயத்துக்குப் புறம்பே அவரிடத்திற்குப் புறப்பட்டுப் போகக் கடவோம்”. முன் நாட்களில் வாழ்ந்த சகோதரர்களுக்கு உண்டான நிந்தை அவர்கள் இருந்த சபைகளிலிருந்து வெளியேறி தனிமையையும், பிரிவையும் அனுபவித்ததுதான். வேதவசனத்திற்கும்,அவருடைய சித்தத்திற்கும் முரணாக இருந்த அனைத்தையும் வெறுத்து ஒதுக்கி அவர்கள் நிந்தையைச் சுமந்தார்கள்.

உலகத்திற்கொத்த வேஷம் தரியாமல், நெறி வழுவாது, மிகக் கண்டிப்பான எளிமையுடன் வாழ அவர்களுக்கு வேதவசனம் உறுதுணையாயிருந்தது. அவர்களுடைய ஊழியங்கள் வல்லமை உள்ளவைகளாய் இருந்தன. முன்னாட்களில் இருந்த இத்தகைய பண்புகளை வாஞ்சித்து, நிலை நிறுத்த முயலும் சகோதரர்கள் இன்றும் சிலருண்டு. ஆனால் அத்தகையோர் அதிகமாக நிந்தையைச் சுமக்க வேண்டியுள்ளது. பெயர்க் கிறிஸ்தவ சபையோடு ஒத்து வாழ்கிறவர்களுக்கு எந்தவிதமான நிந்தையும் இல்லை. இப்படிப்பட்டவர்களோடு இணங்கி வாழும் விசுவாசிகளுக்கு நிந்தை உண்டாவதில்லை. வசனத்தின் வழியில் நடப்போருக்கு நிந்தை நிச்சயமாக உண்டு.

உலகத்தின் வழிகளையும், முறைகளையும் வெறுத்து “கிறஸ்தவ மதத்தின்” அரசியல் தந்திரங்களையும், ஆவிக்குரிய சாயம்பூசப்பட்ட களியாட்டுகளையும் ஒதுக்கிவிட்டு, பாளயத்திற்குப் புறம்பே செல்ல வேண்டும். தேவனுடைய நியாயத்தீர்ப்பின் கீழ் உள்ள இவ்வுலகின் வழிமுறைகளும்,மனிதனுடைய கற்பனைகளின் மேல் உயர்த்தப்படும் கிறிஸ்தவ மதச் சடங்குகளும், அங்கி அணிந்த குருமார்களின் அக்கிரமும் மலிந்து கிடக்கும் இடமே பாளயம்!

தேவனால் அங்கீகரிக்கப்படாமல், மனிதனால் அங்கீகரிக்கப்பட்ட, சடங்குகளின் தொகுப்புதான் இஸ்ரவேலரின் பாளயம். இன்று வேதவசனத்திற்கு ஒவ்வாத அநேக காரியங்கள் கிறிஸ்தவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

பாளயத்திற்குள் கர்த்தர் இரார். உலகத்தோடு ஒத்த வேஷந்தரிக்கிறவர்களுக்கு நிந்தையுமில்லை, கிரீடமுமில்லை. நாம் இன்றும் தம்முடைய வழிகளில் மட்டுமே நடக்க வேண்டுமென தேவன் விரும்புகிறார். நம் மனநிம்மதிக்காகவும், குற்ற உணர்வு மாறுவதற்காகவும் வசனத்தின்படி நடக்க எண்ணுவது சுயநலத்தின் அடிப்படை யிலானது. கர்த்தருடைய சரீரமாகிய சபை தேவ மகிமையையும், அவருடைய அனந்த ஞானத்தையும் அனைவருக்கும் வெளிப்படுத்த வேண்டும் என்றெண்ணி வசனத்தின்படி வாழ்வதும், ஆராதிப்பதுமே உத்தமமான செயல்.

சர்ச்சைக்குள்ளாகும் முச்செயல்கள

கிறிஸ்தவர்களுக்குள் விவாதிக்கப்படும் மூன்று காரியங்கள் விவாகரத்து, பெண்கள் முக்காடிடுதல், ஆடை அணிகலன்கள் என்பவையே. விவாகரத்தைப் பொறுத்தவரை மனிதனால் உருவாக்கப்படும் சட்ட திட்டங்கள், தேவன் இட்ட கட்டளைகளை ரத்து செய்ய முடியாது. மத்தேயு 5:31-32 ;19:6-9-ல் காணப்படும் கட்டளைகள் எக்காலத்திற்கும் உரியவை. ஜெபிக்கும் போதும், வேத வசனத்தை வாசிக்கும் போதும், தேவ செய்திகளைக் கேட்கும் போதும் பெண்கள் முக்காடிட்டுக் கொள்ள வேண்டுமென வேத வசனம் தெளிவாகக் கூறுகிறது(1 கொரிந்தியர் 11:1-16). முக்காடிட்டுக் கொள்ளும் எந்தப் புருஷனும், தன் தலையைக் கன வீனப்படுத்துகிறான் (வசனம் 4). விசுவாசிகள் எவ்வாறு ஆடை அணிய வேண்டுமென்று உபாகமம் 22:5 ; 1தீமோத்தேயு 2:9-10; 1பேதுரு 3:4-5 வசனங்களில் சர்ச்சைக்கிடமின்றி எழுதப்பட்டுள்ளன. பெண்ணை ஆண் போலத் தோற்றுவிக்கும் ஆடைகளையும், ஆணைப் பெண்ணுருவாகக் காட்சியளிக்க வைக்கும் ஆடைகளையும் விசுவாசிகள் அணியலாகாது.

மனிதனுடைய கற்பனைகளையும், உபதேசங்களையும் வெறுத்து, கர்த்தருடைய நாமத்தில் ஆராதிக்கக் கூடிவருவோர் இம்மூன்று காரியங்களிலும் வேதவசனத்தை மீறவோ, குறைவாக மதிப்பிடவோ கூடாது.

மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா?

மனிதன் தேவனிடம் திருடலாமா, என்று ஆங்கில வேதாகமம் கூறுகிறது. மல்கியா 3:8-ல் உள்ளத்தை உருவத் துளைக்கும் ஓர் வினா உள்ளது. இதற்கும் இஸ்ரவேலர் எதிர் வினா எழுப்புகிறார்கள். "எதிலே உம்மை வஞ்சித்தோம்"? அதற்கு கர்த்தருடைய பதில், "தசம பாகத்திலும், காணிக்கையிலும் தானே". இஸ்ரவேல் தேசத்தார் அனைவரும் கர்த்தரை வஞ்சித்ததாக (அவரிடம் திருடியதாக) 9-ஆம் வசனம் கூறுகிறது. எப்படிப்பட்ட கடுமையான குற்றச்சாட்டு இது!

தசம பாகம்

யூதர்கள் தசம பாகம் செலுத்த வேண்டுமென்று வேதாகமத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டில் இதைக் குறித்து அநேக வசனங்கள் உள்ளபடியால், இக்காரியத்தில் அவர்கள் சாக்குப் போக்குச் சொல்ல இடமில்லை. கர்த்தர் செய்யும்படி சொன்ன எதையும் அவர்கள் செய்யவில்லை. தேவாலயத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய அவர்களுடைய பங்கு மிகவும் குறைந்து போயிற்று. அருவியாக விழ வேண்டிய காணிக்கை சொட்டுச் சொட்டாக விழுந்து கொண்டிருந்தது. பூர்வ நாட்களில் இருந்த நிலைமை இதற்கு முற்றிலும் மாறானது.

யாத்திராகமம் 35-ல் ஞான இதயமுள்ளவர்களும், மனதுள்ளவர்களும், தேவ அன்புள்ளவர்களும் கர்த்தருக்குத் தேவைக்கு அதிகமாகவே காணிக்கை செலுத்தினார்கள். யாத்திராகமம் 36:6-ல் "மோசே, இனி புருஷர்களாவது ஸ்திரீகளாவது பரிசுத்த ஸ்தலத்துக்கென்று காணிக்கையாக ஒரு வேலையும் செய்ய வேண்டாம் என்று பாளயமெங்கும் கூறும்படி கட்டளையிட்டான்" என்று வாசிக்கிறோம். "செய்ய வேண்டிய எல்லா வேலைகளுக்கும் போதுமான பொருள்கள் இருந்ததும் அல்லாமல் அதிகமாயும் இருந்தது" (36:7)

ஆலயம் கட்டுவதற்கான பொருட்களை சேகரித்த தாவீது, "இவை எல்லாம் நான் உத்தம இருதயத்தோடே மனப்பூர்வமாகக் கொடுத்தேன். இப்பொழுது இங்கே இருக்கிற உம்முடைய ஜனமும் உமக்கு மனப்பூர்வமாய்க் கொடுக்கிறதைக் கண்டு சந்தோஷித்தேன்" என்று சொன்னதும் நம் நினைவிற்கு வருகிறது. (1 நாளாகமம் 29:17)

"பொல்லாத ஸ்திரீயாகிய அத்தாலியாளுடைய மக்கள் தேவனுடைய ஆலயத்தைப் பலவந்தமாய்த் திறந்து, கர்த்தருடைய ஆலயத்திலுள்ள பிரதிஷ்டை பண்ணப்பட்டவைகளை எல்லாம் பாகால்களுக்காகச் செலவு பண்ணிப் போட்டார்கள்". யோவாஸ் ராஜாவான போது ஒரு பெட்டியை உண்டாக்கி கர்த்தருடைய ஆலயத்து வாசலுக்குப் புறம்பே வைத்து, ஜனங்கள தங்களுடைய காணிக்கையைச் செலுத்தும்படி பறை சாற்றப்பட்டது. எல்லாப் பிரபுக்களும், ஜனங்களும் சந்தோஷமாய்க் கொண்டு வந்து பெட்டி நிறைய அதிலே போட்டார்கள். அந்தப் பணத்தை ஆலயத்தைச் செப்பனிடச் செலவு செய்தார்கள் (2 நாளாகமம் 24:1-14).

"எசேக்கியாவின் நாட்களில் இஸ்ரவேல் புத்திரர் ..... முதற்பலன்களைத் திரளாகக் கொண்டுவந்து, சகலத்திலும் தசம பாகத்தைப் பரிபூரணமாய்க் கொடுத்தார்கள்......தங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்தம் பண்ணப்பட்டவைகளில் தசமபாகத்தையும் கொண்டு வந்து குவியல், குவியலாக வைத்தார்கள். எசேக்கியாவும், பிரபுக்களும் வந்து அந்தக் குவியல்களைக் காணும் போது, கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்தி, அவருடைய ஜனமாகிய இஸ்ரவேலைப் புகழ்ந்தார்கள்". (2 நாளாகமம் 31:2-11).

மல்கியா தீர்க்கதரிசனம் உரைப்பதற்கு 25 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த நெகேமியாவின் நாட்களிலும் இஸ்ரவேலர் தசம பாகத்தையும், தேசத்தின் முதற்பலனையும் சகல வித விருட்சங்களின் எல்லா முதற் கனிகளையும் காணிக்கையாகச் செலுத்தினார்கள் (நெகேமியா 10:35-38). எஸ்றாவின் காலத்தில் உண்டான எழுப்புதலுக்கும், மல்கியாவின் காலத்துக்கும் இடையே தீர்க்கதரிசனம் உரைத்த ஆகாயின் நாட்களில் அவர்கள் மறுபடியும் காணிக்கைகளைச் செலுத்துவதில் கவனம்செலுத்தாமல் போனார்கள். இதை ஆகாய்1:2-6 வசனங்கள் உறுதிப் படுத்துகின்றன. "இந்த ஜனங்கள் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிறதற்கு ஏற்ற காலம் இன்னும் வரவில்லை என்கிறார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். இந்த வீடு பாழாய்க் கிடக்கும் போது, நீங்கள் மச்சுப் பாவப்பட்ட உங்கள் வீடுகளில் குடியிருக்கும் படியான காலம் இதுவோ? இப்போதும் சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

உங்கள் வழிகளைச் சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் திரளாய் விதைத்தும் கொஞ்சமாய் அறுத்துக் கொண்டு வருகிறீர்கள். நீங்கள் புசித்தும் திருப்தியாகவில்லை..... கூலியைச் சம்பாதிக்கிறவன் பொத்தலான பையிலே போடுகிறவனாய் அதைச் சம்பாதிக்கிறான்".

காணிக்கை செலுத்தத் தவறுதல

ஆகையால்தான் கர்த்தர் அந்தக் கேள்வியைக் கேட்டார். "மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா?" காணிக்கையிலும், தசம பாகத்திலும் அவர்கள் கர்த்தரை வஞ்சித்தார்கள். சிறையிருப் பிலிருந்த போது சொத்துக்களை வாங்குவதற்கு சுதந்திரமில்லா திருந்தது. சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்கள் தங்களுக்குச் சொத்துக்களை சேர்த்துக் கொள்வதிலேயே கண்ணாயிருந்தனர். கர்த்தருடைய காரியத்தைக் கவனிக்க மனமற்றவர்களானார்கள். திடீரென்று உண்டான செழிப்பு கர்த்தரை வஞ்சித்து, காணிக்கை செலுத்துவதில் கஞ்சத்தனம் காட்ட வைத்தது. கர்த்தருக்குச் சேர வேண்டிய பங்கைத் தராததால், ஆலயத்தில் ஊழியம் செய்யும் லேவியர்களின் தேவைகள் சந்திக்கப்படவில்லை. லேவியர்கள் இஸ்ரவேலர் செலுத்தும் தசம பாகத்தையே முற்றிலும் சார்ந்திருந்தனர். தேவ கட்டளையும் அதுதான். தேவனுடைய ஆலயத்தில் கிரமமாகக் காரியங்கள் நடக்க வேண்டுமானால், காணிக்கைகள் சரியாகச் செலுத்தப்பட வேண்டும். காணிக்கை குறைந்தபடியால், தேவாலயத்தில் நடக்க வேண்டிய செயல்களும் தடைபட்டன.

இன்றைய நிலையும் இதுதான். விசுவாசிகள் சரியாகக் காணிக்கை செலுத்தாதபடியால், ஊழியங்கள் தடைபடுகின்றன. விசுவாசிகள் அனைவரும் தாராளமாகக் கொடுத்தால், எத்தனையோ ஊழியங்கள் சிறப்பாக நடைபெறும்.

தசம பாகத்தைக் குறித்த விவரங்கள்

தசம பாகம் செலுத்துவதைக் குறித்த உபதேசத்தின் வேரைப் பஞ்சாகமத்தில் காணலாம். இன்று நாம் நியாயப் பிரமாணத்திற்கு உட்பட்டவர்களல்ல. தசம பாகம் செலுத்த வேண்டிய கட்டாயம் நமக்கு இல்லை. ஆனால் நாம் கிருபைக்குக் கீழ்ப்பட்டவர்கள்.

நியாயப்பிரமாணம் தந்ததை விட அதிகமான ஆசீர்வாதங்களை கிருபை நமக்குத் தந்துள்ளது. கர்த்தர் இலவசமாக அனைத்தையும் தாராளமாக நமக்குத் தந்திருக்கிறார். எனவே நாம் கர்த்தருக்குத் தாராளமாகக் கொடுக்குமளவிற்கு நன்றி உள்ளவர்களாயிருக்க வேண்டும். கர்த்தர் நமக்குத் தந்த இவ்வுலகிற்குரிய ஆசீர்வாதங்கள் அனைத்திலிருந்தும் சீராகச் சிறிதும் வருத்தமின்றி அள்ளி வழங்க வேண்டும்.

தசமபாகம் என்பது வருமானத்தில் பத்தில் ஒரு பங்கைக் கர்த்தருக்குத் தருவதாகும். இந்த அடிப்படையில்தான் இஸ்ரவேலர் கர்த்தருக்குக் காணிக்கை செலுத்த வேண்டும். ஆதியாகமம்14:20-ல் ஆபிரகாம் மெல்கிசேதேக்கிற்கு எல்லாவற்றிலும் தசம பாகம் கொடுத்தான் என்று வாசிக்கிறோம். ஆபிரகாம் கொள்ளையிடப்பட்ட பொருள்களில் இவனுக்குத் தசமபாகம் கொடுத்தான்.(எபிரெயர் 7:4)

ஆதியாகமம் 28:22-ல் யாக்கோபு, "தேவரீர் எனக்குத் தரும் எல்லாவற்றிலும் உமக்குத் தசமபாகம் செலுத்துவேன்" என்று சொல்லிப் பொருத்தனை பண்ணிக் கொள்கிறான். நியாயப் பிரமாணத்தின் ஒரு பகுதியாக லேவியராகமம் 27:30-32-ல் "தேசத்திலே நிலத்தின் வித்திலும். விருட்சங்களின் கனியிலும் தசமபாகம் எல்லாம் கர்த்தருக்கு உரியது..... பத்தில் ஒரு பங்காகிறதெல்லாம் கர்த்தருக்குப் பரிசுத்தமானது" என்று எழுதப்பட்டுள்ளது. எண்ணாகமம் 18:21-ல் தேவன், "இதோ லேவியின் புத்திரர் ஆசரிப்புக் கூடாரத்தின் பணிவிடையைச் செய்கிற அவர்களுடைய வேலைக்காக, இஸ்ரவேலருக்குள்ள எல்லாவற்றிலும் தசமபாகத்தை அவர்களுக்குச் சுதந்தரமாகக் கொடுத்தேன்" என்கிறார். 24 – ஆம் வசனத்தில் "இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு ஏறெடுத்துப் படைக்கும் படைப்பாகிய தசம பாகத்தை லேவியருக்கு சுதந்தரமாகக் கொடுத்தேன்" என்று தேவன் கூறுகிறார். லேவியர் நாள்முழுவதும் ஓய்வின்றி தேவாலயத்தில் கர்த்தருடைய வேலையைச் செய்தபடியால், அவர்கள் வெளியே போய் வேலை செய்து சம்பாதிக்க முடியாது.எனவே தசமபாகம் அவர்களுடைய தேவைகளைச் சந்திக்கும்படி ஏற்படுத்தப்பட்டது. அவ்வாறு கிடைக்கும் தசமபாகத்தின், தசமபாகத்தை லேவியர்களும் கர்த்தருக்கு ஏறெடுத்துப் படைக்கும் படைப்பாகச் செலுத்த வேண்டும் (எண்ணாகமம் 18:26)

லேவியர் செலுத்தும் தசம பாகம் தேவனுடைய ஆலயத்திலுள்ள பொக்கிஷ அறைக்குப் போகும் (நெகேமியா10:38). ஆபிரகாம் மெல்கிசேதேக்குக்கு தசமபாகம் செலுத்தின போது லேவியும் அவனுடைய அரையிலிருந்தான் (எபிரெயர்7: 9-10).

கர்த்தருக்கு நான் எவ்வளவு கொடுக்க வேண்டும்?

8-ஆம் வசனத்தைத் தொடர்ந்து தியானித்தால் , தசம பாகம் செலுத்தாமல் கர்த்தரை வஞ்சித்ததைக் குறித்து அவர்கள் எவ்வளவேனும் வெட்கப்படவில்லை என்பது புரியும். தீர்க்கதரிசியின் மூலம் கர்த்தர் அவர்களைக் கடுமையாகக் கடிந்து கொண்ட போதிலும் , அவர்கள் நாணமடையவில்லை. தேவன் தேசத்தைப் பங்கிட்டுக் கொடுத்த போது லேவியருக்கு ஒரு சுதந்தர வீதத்தையும் தரவில்லை. தசம பாகம் மட்டுமே அவர்கள் பங்காயிருந்தது. சரியாகக் கூறினால், தசம பாகம் செலுத்தாததன் மூலம் இஸ்ரவேலர் லேவியருக்குரிய தேசத்தின் பங்கு வீதத்தைத் தராமல் அவர்களை வஞ்சித்தார்கள். சகோதர வஞ்சனை இது!

லேவியர்கள

எண்ணாகமம் 18-ஆம் அதிகாரத்தை ஒவ்வொருவரும் கவனமாக வாசிக்க வேண்டும். லேவியர்கள் ஆரோனுக்கும், அவனுடைய குமாரர்களுக்கும் ஊழியம் செய்பவர்கள். இந்நாட்களில் உள்ள "முழுநேர ஊழியர்களுக்கும்" கர்த்தருடைய வேலையைச் செய்யும் ஊழியக்காரர்களுக்கும் அவர்கள் நிழலாய் இருக்கிறார்கள். ஆடம்பரமும், செழிப்பும் நிறைந்த இக்காலத்தில், எண்ணாகமம் 18-ல் காணப்படும் சில அறிவுரைகள் அநேகருக்கு அந்நிய காரியமாகத் தோன்றுகிறன.

தேசத்தில் முதற்பழுத்த பலனெல்லாம் கர்த்தருக்கு உரியது (வசனம் 13). முதற்பலன்களாகிய உச்சிதமான எண்ணெயும், உச்சிதமான திராட்சை இரசமும், தானியமும் கர்த்தருக்கு உரியது. (வசனம் 12) அவை ஆரோனைச் சேரும். இது இஸ்ரவேலருக்கு வருத்தத்தை அளித்தது. பாடுபட்டுப் பயிரிட்டு அதின் முதற்பலனையும், மொத்த விளைச்சலில் பத்தில் ஒரு பங்கையும் லேவியருக்குப் போய்ச் சேரும்படி கர்த்தருக்குக் கொடுப்பதா? என்ன இது? இஸ்ரவேலரின் மனதில் தோன்றிய நினைவுகள் இவை.

கர்த்தர் இப்படிச் செய்ததற்குக் காரணமே, லேவியர் எல்லாவற்றையும் விட்டுவிட்டு கர்த்தருக்கு மட்டும் ஊழியம் செய்யும்படி தெரிந்து கொள்ளப்பட்டதால்தான். கானானை வென்று தேசத்தை அனைத்துக் கோத்திரங்களுக்கும் கர்த்தர் பங்கிட்டு கொடுத்த போது லேவியருக்கு அவர் ஒரு பங்கையும் தரவில்லை. "இஸ்ரவேல் புத்திரர் நடுவில் நானே உன் பங்கும்; உன் சுதந்தரமுமாய் இருக்கிறேன்" என்று தேவன் ஆரோனிடம் கூறியிருந்தார் (வசனம் 20)

கர்த்தருக்கு இஸ்ரவேலர் காணிக்கையாகச் செலுத்தும் முதற்பலன்களையும், உச்சிதமான (மிகச்சிறந்த) பொருட்களையும், தசமபாகத்தையும், அவர் லேவியருக்கு அவர்களுக்குரிய தேசத்தின் பங்காகக் கொடுத்திருந்தார். (எண்ணாகமம் 18:26-31)

முதற்பலன்கள்

"உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற் பலனாலும், கர்த்தரைக் கனம் பண்ணு" (நீதிமொழிகள் 3:9) இக்கொள்கையை அநேக மூத்த சகோதரர்கள் பின்பற்றி வருகின்றனர். வேலை செய்வதன் மூலமாகவோ, வியாபாரத்தின் மூலமாகவோ எவ்விதத்தில் வருமானம் வந்தாலும் தசமபாகத்தை விடக் குறைந்து போகாத அளவில் அவர்கள் கர்த்தருக்கென்று கொடுக்கிறார்கள். வருமானம் அதிகரிக்கும் போது, காணிக்கையின் அளவும் அதிகரிக்கிறது.

"நியாயப்பிரமாணத்தின் கீழ் வாழ்ந்தவர்கள் தேவனுக்குத் தசம பாகம் செலுத்த வேண்டியிருந்தால், கிருபையின் கீழ் வாழும் நாம் தசமபாகத்திற்கும் குறைவாகக் காணிக்கை செலுத்துவது தேவனை அவமதிப்பதாகும்". ஒரு மூத்த விசுவாசியின் வார்த்தைகள் இவை! கிருபையின் காலத்தில் வாழும் நாம், தசம பாகத்தை விட அதிகமாகத் தேவனுக்குக் கொடுக்க வேண்டுமேயன்றி, அதைவிடக் குறைவாகக் கொடுக்கக்கூடாது.

அப்போஸ்தலனாகிய பவுல், "உங்களில் அவனவன், வாரத்தின் முதல் நாள் தோறும், தன் தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக் கடவன்" என்று கொரிந்தியருக்கு எழுதும்போது, காணிக்கை செலுத்துதலை வாரத்தின் முதல் நாளிலே அப்பம் பிட்கக் கூடி வருவதுடன் இணைத்துப் பேசுகிறார்.

ஆராதனைக்காகக் கூடி வந்திருக்கும் போது தங்களை மீட்பதற்காகத் தம் ஜீவனையே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கொடுத்தார் எனும் சத்தியம் அவர்கள் நினைவுக்கு வரும். அவ்வுண்மை அவர்களும் கர்த்தருக்குத் தங்கள் வருமானத்தின் ஒரு பகுதியையாவது தரவேண்டும் எனும் உந்துதலை உள்ளத்தில் ஏற்படுத்தும் என்றெண்ணிப் பவுல் அவ்வாறு எழுதுகிறார். தேவையில் இருக்கும் கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கும், பரிசுத்தவான்களுக்கும் அக்காணிக்கை பயன்படும். நமக்காகத் தம்மையே முழுமையாக ஒப்புக்கொடுத்த கர்த்தருடைய செயல், நாமும் அவருக்குத் தாராளமாகக் கொடுக்கும் உந்துதலை நமக்குள் உருவாக்க வேண்டும்.

உபாகமம் 26-ஆம் அதிகாரத்தில் இதற்கு ஒப்பான ஒரு கட்டளை உண்டு. "கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்து கொண்டிருக்கும் ஸ்தானத்திற்குப் போய்" தசம பாகத்தையும், நிலத்தினுடைய கனிகளின் முதற்பலனையும் செலுத்த வேண்டும். அப்படிச் செலுத்துபவன் அதை லேவியனுக்கும், பரதேசிக்கும், திக்கற்ற பிள்ளைக்கும், விதவைக்கும் அவற்றைக் கொடுக்க வேண்டும் (உபாகமம் 26:2,10-15). ஒரு தேவனுடைய மனிதர் பின் வருமாறு கூறினார். "தேவனுடைய ஆசீர்வாதம், கிருபையின் அலைகள் அளவுக்கு அதிகமாக அவர்கள் மீது பாய்ந்தோடின. இனி அவை அவர்கள் மூலமாகக் கர்த்தருடைய ஊழியக்காரர் களுக்கும், தேவையில் இருப்பவர்களுக்கும் பாய்ந்தோட வேண்டும்". நமது இருதயங்களில் கிரியை செய்யும் கிருபையின் விளைவு இவ்வாறுதான் இருக்க வேண்டும். கர்த்தர் கட்டளை யிட்டபடி கொடுப்பது, செல்வத்தின் செழிப்பிற்கும், ஆவிக்குரிய ஐசுவரியத்திற்கும் சான்றாக உள்ளது. ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்தவன் அதிகமாகக் கொடுப்பான். பொருட்செல்வமும், ஆவிக்குரிய ஐசுவரியமும் ஒருங்கிணைந்து தேவனுக்கு நற் சாட்சியாய் அமைதல் அவசியம். இப்படிப்பட்டவனைக் குறித்து தேவனே நற்சாட்சி கொடுப்பார்.

1 சாமுவேல் 25-ல் தாவீது உணவையும், உதவியையும் நாடிச் செல்வந்தனாகிய நாபாலிடம் செல்கிறான். ஆனால் "முரடனும், துராகிருதனுமாயிருந்த" அவன் எதையும் தர முன்வரவில்லை. ராஜ விருந்துக்கு ஒப்பான விருந்து அவன் வீட்டிலே நடந்தது, வெளியே பசியோடிருக்கும் தாவீதைக் குறித்து அவனுக்கு கவலையில்லை. நாபால் தன்னுடையதைத் தனக்கென்று மட்டும் வைத்துக் கொண்டான்.அதை அனுபவித்தான். ஆனால் கர்த்தர் அதை விரும்பவில்லை. அவனை வாதித்தார். அவன் இறந்தான்.

ஆகையால் "உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்" என்று பவுல் எழுதுகிறார்."சிறுக விதைக்கிற வன் சிறுக அறுப்பான். பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான் (2கொரிந்தியர் 9:6-7).தேவன் நம்மை ஆசீர்வதித்ததின் அளவுக்குத் தக்கதாக நாம் கொடுக்க வேண்டும். நாம் நமக்கென்று சேமிப்பதைக் குறித்தும், செலவழிப்பதைக் குறித்தும், கவனமாயிருக்க வேண்டும். நாம் ராஜ வாழ்க்கை வாழும் போது கர்த்தருடைய ஊழியக்காரர்கள் பட்டினியிலும், தேவையிலும் இருப்பதைத் தேவன் விரும்பார். கர்த்தருடைய ஆசீர்வாதம் நமக்குக் கிடைக்கும் போது, அது நம் மூலமாக மற்றவர்களைச் சென்றடைய வேண்டும்.

கர்த்தருடைய உக்கிராணக்காரர்கள் (வசனம் 9)

கர்த்தருக்கென்று கொடுப்பது, உயிர் போல் முக்கியமான தாகும். அதன் மூலமாகவே ஊழியங்கள் நடைபெறுகின்றன, விரிவாக்கப்படுகின்றன. அதுதான் ஊழியக்காரர்கள், விதவைகள், திக்கற்றவர்களின் தேவையைச் சந்திக்கிறது. இக்காரியத்தில் கர்த்தரை வஞ்சிப்பவன் சபிக்கப்படுவான். (மல்கியா 3:9) எங்கெல்லாம் தேவனுக்கென்று கொடுப்பது குறைகிறதோ, அங்கெல்லாம் ஊழியங்களும் குறைந்து போகின்றன.

யோசுவா13:14 இக்கருத்தை வற்புறுத்துகிறது. "லேவியரின் கோத்திரத்துக்கு மாத்திரம் அவன் சுதந்தரம் கொடுக்கவில்லை. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அவர்களுக்குச் சொன்னபடியே, அவருடைய தகன பலிகளே அவர்களுடைய சுதந்தரம்". லேவியருக்கு சுதந்தர வீதம் தரப்படாததால், தமச பாகமும், முதற்பலன்களும், உச்சிதமான (மிகச்சிறந்த) விளைச்சல்களுமே அவர்களுடைய பங்காயின. இதர பதினொன்று கோத்திரங்களின் மூலமாக தேவன் அவர்களுடைய தேவையைச் சந்தித்தார்.

தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார

70 வருட சிறையிருப்புக்குப்பின் உயர்ந்து வந்து கொண்டிருந்த இஸ்ரவேலின் புதிய தலைமுறையினர் நியாயமாய் தேவனுக்குப் போய்ச் சேரவேண்டிய பங்கைத் தராமல், அதைத் தங்களுக்கென்றே வைத்துக் கொண்டனர். எனவேதான் தேவன், "மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா"? என்று கேட்கிறார். சரியாகக் கூறினால் அவர்கள் தேவனிடம் திருடினார்கள்ஆறு வருடங்கள் பயிர் செய்த பிறகு, ஏழாம் வருடம் நிலத்திற்கு ஓய்வு தரவேண்டும் என்பது தேவ கட்டளை. (லேவியராகமம் 25:1-24)

ஆனால் அதிகம் சம்பாதிக்க முன் தலைமுறையினர் "ஓய்வு வருடத்திலும்" பயிரிட்டனர். இக்கட்டளையை மீறினால் என்ன நடக்கும் என்று தேவன் ஏற்கெனவே கூறியிருந்தார். "நான் தேசத்தைப் பாழாக்குவேன்..... ஜாதிகளுக்குள்ளே உங்களைச் சிதறடித்து உங்கள் பின்னாகப் பட்டயத்தை உருவுவேன். உங்கள் தேசம் பாழும், உங்கள் பட்டணங்கள் வனாந்தரமுமாகும். நீங்கள் உங்கள் சத்துருக்களின் தேசத்தில் இருக்கும் போது,..... தேசமானது.... ஓய்வு வருஷங்களில் ஓய்வடையாத படியினாலே, அது பாழாய்க் கிடக்கும் நாளெல்லாம் ஓய்வடைந்திருக்கும்" (லேவியராகமம் 26:32-36). அவர்கள் சிறையிருப்புக்குப் போனதன் காரணமே இதுதான்! தேசம் 70 வருடங்கள் ஓய்வாயிருந்தது.

சுயநலத்தின் காரணமாக உருவான அவர்களுடைய கீழ்ப்படியாமையை தேவன் காணாதவர் போல் இருக்கவில்லை. தங்களுக்காக அதிகம் சம்பாதித்துக் கொள்ள அவர்கள் எண்ணினார்கள். இந்த விதமாக நாமும் தேவனிடம் களவாடி இருக்கிறோமா? நியாயமாக தேவனுக்கும், தேவனுடைய ஊழியக்காரர்களுக்கும் கொடுக்க வேண்டிய பங்கை நாம் சரியாகத் தருகிறோமா? 2 கொரிந்தியர் 9:1-ல் பவுல், "பரிசுத்த வான்களுக்குச் செய்ய வேண்டிய தர்ம சகாயத்தைக் குறித்து" எனக் குறிப்பிடுவது வறியோருக்குச் செய்யும் உதவியைக் காட்டுவதாகும். இது தேவனுக்கும், தேவ ஊழியர்களுக்கும் கொடுக்கும் காணிக்கைக்கு உட்பட்டதல்ல. இது வேறு! அது வேறு! " சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான். பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்" (2 கொரிந்தியர் 9:6). உற்சாகமாய்க் கொடுகிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார் (வசனம் 7). கிருபையாக தேவன் நமக்களித்திருக்கும் கடமை களையும், சிலாக்கியங்களையும் அறிந்து கொள்ள இந்த அதிகாரத்தைக் கவனத்துடனும், ஜெபத்துடனும் வாசிக்க வேண்டும்.

ஆவிக்குரிய பொருளாதாரம

தசமபாகம் என்பது பத்தில் ஒரு பங்காகும். ஒரு சிறிய கணக்கு ஆவிக்குரிய பொருளாதாரத்தில் பெரிய பாடத்தைக் கற்றுத் தரும். ஒரு சபையில் மாதம் 10,000 ரூபாய் வருமானமுள்ள இருபது குடும்பத்தினர் இருப்பார்களாயின், ஒவ்வொரு மாதமும் குறைந்த அளவில், தசம பாகமாக 20,000 ரூபாய் காணிக்கையாகத் தரலாம். புதிய ஏற்பாடு தசமபாகத்தை அல்ல, அதற்கும் மேலாகக் கொடுக்க வேண்டுமென்கிறது.

நியாயப் பிரமாணத்தின் கீழ் வாழ்ந்தவர்களே தசம பாகம் செலுத்த வேண்டும் என்றால், கிருபையின் கீழ் வாழும் நாம் எவ்வளவு அதிகமாகக் கொடுக்க வேண்டும்?

நீங்கள் தேவனுக்குக் குறைவாகக் கொடுப்பதால் உங்கள் பகுதியில் ஊழியங்கள் தடைபடுகின்றனவா? அந்நாட்களில் தசமபாகமானது மிகச் சாதாரணமான காணிக்கையாகக் கருதப்பட்டது. தேவனுக்கு முதற்பலன்களையும், உச்சிதமான பொருட்களையும் (The First and the Best) அவர்கள் கொடுத்தார்கள் (எண்ணாகமம் 18:12-13). இவை பலிகளுக்கும், காணிக்கைகளுக்கும், மேலாகச் செலுத்தப்பட வேண்டியவை. அநேக விசுவாசிகள் தாங்கள் விரும்பும் ஊழியக்காரர்களுக்கு மட்டும் பணம் அனுப்புவதன் மூலமும் உள்ளூர் சபையின் ஊழியம் பாதிக்கப்படுகிறது.

வேத வசனத்திற்கிணங்க ஆராதிக்கக் கூடி வராத ஊழியர்களுக்கும், நிறுவனங்களுக்கும் பொருளுதவி செய்ய வேறு பல கிறிஸ்தவர்களுண்டு. ஆனால் சபைக்குரிய சத்தியத்தைக் கடைப்பிடித்து, ஊழியம் செய்யும் ஊழியர்களைத் தாங்க, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் கூடிவரும் விசுவாசிகளைத் தவிர வேறு யாருண்டு? எனவே விசுவாசிகள், இப்படிப்பட்ட ஊழியர்களைத் தாங்க முன்னுரிமை அளிக்க வேண்டும்.

பவுல் 1 கொரிந்தியர் 16:2-ல் "உங்களில் அவனவன் வாரத்தின் முதல் நாள் தோறும், தன் தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக் கடவன்" என்றெழுதுகிறார். இந்த ஆலோசனையைக் கடைப்பிடித்தால், சில குறிப்பிட்ட தேவைகளுக்காகச் "சிறப்பான காணிக்கைகளைக்" கேட்டுப் பெற வேண்டிய தேவை இராது. அனைவரும் சரியாகக் கிரமமாகக் கொடுத்தால் தேவனுடைய ஊழியம் வளர்ந்து பெருகும். அப்படிக் கொடுப்போருக்கு தேவன் அருளும் ஆசீர்வாதம் மல்கியா3:10-ல் கூறப்பட்டுள்ளது. கர்த்தருக்குச் சரியாகக் கொடுக்காததின் நிமித்தமும் நம் வாழ்வில் "ஆவிக்குரிய வறுமை" உண்டாகலாம். ஒன்றை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். ஒவ்வொருவருக்கும் கர்த்தர் ஒரு வேலையைத் தந்து வருமானத்தைக் கொடுக்கிறார். அந்தப் பணம் அவருடையது. அதை நம் மூலமாக அவரது ஊழியங்களுக்கும்,நம்முடைய தேவைகளுக்கும் அவர் தருகிறார். பூமியும், அதின் நிறைவும், பொன்னும், வெள்ளியும் கர்த்தருடையவை அல்லவா?

என்னைச் சோதித்துப் பாருங்கள் (வசனம் 10)

10-ஆம் வசனத்தில், " என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படிக்குத் தசம பாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டு வாருங்கள். அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற் போகுமட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோ என்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்கிறார்." இந்த வார்த்தைகள் காலம் காலமாக கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கு ஆவேசத்தையும், உற்சாகத்தையும் அளித்துள்ளன.இன்றும் அப்படித்தான். கர்த்தருக்குக் கொடுப்பதில் கவனக் குறைவாயிருந்ததால், இஸ்ரவேலருக்கு வறுமை உண்டாயிற்று. அக்குறைவை நிறைவு செய்வதற்கான சிகிச்சை முறைதான் தசமபாகம் செலுத்துதல்! தேவன் யாருக்கும் கடனாளியாக இருக்க மாட்டார்.

கர்த்தருக்குக் கொடுப்பதும், நாம் அவரிடமிருந்து பெற்றுக் கொள்வதும் நேர் விகிதத்திலுள்ளன.

இவ்வுலகத்திற்குரிய பொருளை, பணத்தை கர்த்தருக்குத் தராத போது, ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை அவர் நமக்குத் தருவதில்லை. அதன் பொருள் ஆசீர்வாதங்களை விலை கொடுத்து வாங்கி விடலாம் என்பதல்ல. நாம் எவ்வளவு கொடுக்கிறோம் என்பதையல்ல, நமது வருமானத்தின் "எவ்வளவு பகுதியை"க் கொடுக்கிறோம் என்பதையே கர்த்தர் கவனிக்கிறார். ஒரு ஏழை விதவை நூறு சதவீதம் கர்த்தருக்குத் தந்தாளே!.

பண்டசாலை

தசமபாகத்தை வேறெங்குமல்ல, பண்டசாலைக்குக் கொண்டுவர வேண்டும். இது மிகவும் கவனத்திற்குரிய கற்பனையாகும். கர்த்தருடைய நாமம் விளங்கும் பண்டசாலைக்குத்தான் தசமபாகம் போய்ச் சேர வேண்டும். உபாகமம் 12:5-6ல், "உன் தேவனாகிய கர்த்தர் தம்முடைய நாமம் விளங்கும்படி, உங்கள் சகல கோத்திரங்களிலும் தெரிந்து கொள்ளும் ஸ்தானமாகிய அவருடைய வாசஸ்தலத்தையே நாடி, அங்கே போய் அங்கே உங்கள் சர்வாங்க தகனங்களையும் உங்கள் பலிகளையும், தசமபாகங்களையும்... கொண்டுவந்து... சந்தோஷப்படுவீர்களாக". என்றெழுதப்பட்டுள்ளது.

மேலும் 11-ஆம் வசனத்தில், "உங்கள் தேவனாகிய கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்து கொள்ளும் ஓர் இடம் உண்டாயிருக்கும். அங்கே நீங்கள்..... உங்கள் தசம பாகங்களையும்,...... கொண்டு வந்து............ சந்தோஷப்படுவீர்களாக," என்று கர்த்தர் கூறுகிறார். உபாகமம் 14:22-லும் இக்கருத்து வலியுறுத்தப் பட்டுள்ளது. எவ்விதத்தில் வருமானம் வந்தாலும், (நிலத்தின் பலனானாலும், கால்நடைகளானாலும்) அதற்குரிய தசமபாகத்தைச் செலுத்த வேண்டும் என்பது தேவகட்டளை. அத்தசமபாகம் அவருடைய நாமம் விளங்குமிடத்தில், பண்டசாலையில் செலுத்தப்பட வேண்டும்.

வேத வசன சத்தியங்களின்படி கூடி வரும் அன்புச் சகோதரர்களுக்கு இப்பகுதி சரியாக விளங்கும். கர்த்தருடைய நாமம் விளங்கும் இடம் அவர்கள் கூடிவரும் சபையே. அங்குதான் அவர்கள் தங்கள் காணிக்கைகளைச் செலுத்த வேண்டும். கர்த்தருடைய நாமத்தில் எங்கே இரண்டோ அல்லது மூன்றோ பேர் கூடுகிறார்களோ, அங்கே அவர் இருக்கிறார். (மத்தேயு 18:20). வெளிப்படுத்தின விசேஷம் 3-ஆம் அதிகாரத்தில் பிலதெல்பியா சபைக்குக் கொஞ்சம் பெலன் இருந்தும், அவருடைய நாமத்தை மறுதலியாமல் கைக்கொண்டது. அதைக் கர்த்தர் பாராட்டுகிறார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நாம் கூடி வரும் சபைதான் அவருடைய நாமம் விளங்கும் இடம். அதுவே அவருடைய பண்டசாலை!

பவுல் கொரிந்தியருக்கு எழுதுகையில், பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும் தர்மப் பணத்தைக் குறித்து.... நான் வரும் போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல்நாள் தோறும் தன் தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக் கடவன்" என்று கூறுகிறார்(1 கொரிந்தியர் 16:1-2). அப்போஸ்தலர் 20:7லிருந்து வாரத்தின் முதலாம் நாளிலே சீஷர்கள் அப்பம் பிட்கக் கூடி வந்தார்களென்று அறிந்து கொள்கிறோம். எனவே நாம் சேமித்து வைத்த பணத்தை வாரத்தின் முதலாம் நாளிலே, நாம் ஆராதிக்கக் கூடிவரும் போது செலுத்தலாம்.

இஸ்ரவேலர் தகனபலி செலுத்தி ஆராதிக்கக் கூடி வரும் இடத்தில்தான் தசம பாகங்களையும் செலுத்தினார்கள் (உபாகமம் 12:14-26). எனவே கர்த்தருக்கென்று கொடுப்பதும், அவரை ஆராதிப்பதும் இணைந்தே இருக்கின்றன.

எபிரெயர் 13-ஆம் அதிகாரம் இவ்விரண்டையும் ஒன்றாகக் கூறுகிறது. "உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக் கடவோம்" எனும் வசனத்தைத் தொடர்ந்து, "அன்றியும் நன்மை செய்யவும், தான தர்மம் பண்ணவும் மறவாதிருங்கள். இப்படிப்பட்ட பலிகளின் மேல் தேவன் பிரியமாயிருக்கிறார்" என்றெழுதப்பட்டுள்ளது (எபிரெயர் 13:15-16). முன்னர் வாழ்ந்த சகோதரர்கள் கர்த்தருக்குத் துதி செலுத்தி ஆராதிப்பதையும், கொடுப்பதையும் ஒரே இடத்தில், ஒரே நேரத்தில் செய்தனர்.

பூர்வகாலங்களில் இருந்த முறைகளுக்கும் கட்டளை களுக்கும் நேராக இஸ்ரவேலர் திரும்ப வேண்டுமென்பதே தேவனுடைய விருப்பமும், அழைப்புமாயிருந்தது. "முன்னரே கூறப் பட்டிருக்கும் கட்டளைகளைக் கைக்கொள்ளுங்கள்", என்கிறார் அவர். "என்னுடைய" நாமம் விளங்குமிடத்தில், "என" பண்ட சாலைக்கு "எனக்குரிய" தசமபாகத்தைக் கொண்டு வாருங்கள். எனக்குரியதை நீங்கள் கையாடல் செய்யாதிருங்கள்". தேவன் இஸ்ரவேலரிடம் கூறியது இதுதான். கர்த்தருக்குக் கொடுப்பதைக் குறித்து முழுமையாக அறிந்து கொள்ள 2 கொரிந்தியர் 8-ஆம் அதிகாரத்தைப் பலமுறை படிக்க வேண்டும். "கொடுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும். அமுக்கிக், குலுக்கி சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியிலே போடுவார்கள். நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ, அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்" (லூக்கா 6:38). தம்மிடம் இருந்த அனைத்தையும், தம்மையும் நமக்காகத் தந்தவரின் வார்த்தைகளல்லவா இவை! இதை விசுவாசிக்காமல் இருக்கலாமா? (2 கொரிந்தியர் 8:9; கலாத்தியர் 2:20)

ஆசீர்வாதத்திற்கான வாக்குத்தத்தம் (வசனம் 10)

வேதாகமத்தில் நம்மை உவகைப்படுத்தி, உற்சாகமூட்டும் வசனம் இது. அந்நாட்களில் அவருக்குச் சொந்தமானவர்கள் அவருக்குக் கீழ்ப்படிந்தால் கிடைக்கப் போகும் ஆசீர்வாதம் இங்கு சொல்லப்பட்டுள்ளது. ***"இடங்கொள்ளாமற் போகுமட்டும்"*** ஆசீர்வாதம்! இந்நாட்களில் காணப்படும் ஆவிக்குரிய வறுமை, ஊழியங்களில் கனியற்ற தன்மை, ஊழியத்தில் ஆர்வமின்மை, சபையில் வார்த்தையிலும், வாழ்விலும் வல்லமையற்ற தன்மை போன்றவை மாற வேண்டுமானால், நாமும் தேவன் வாக்குத்தத்தம் செய்திருக்கும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளும்படி விசுவாசத்தைக் கிரியைகளினாலே மெய்ப்பிக்க வேண்டும்

இவ்வசனத்தில் "வாக்குத்தத்தம்", "சோதித்துப் பார்த்தல்" "ஆசீர்வாதத்தை மழை போல ஊற்றுதல்","தேவைக்கும் அதிகமாக இடங்கொள்ளாமற் போகுமட்டும் நிரப்பப்படுதல்", என நான்கு காரியங்கள் இடம் பெறுகின்றன.

அவர்கள் செய்ய வேண்டியதெல்லாம் கடினமான காரியங்கள் அல்ல. "தசமபாகத்தை என் பண்டசாலைக்குக் கொண்டு வாருங்கள்". அவர்கள் அவ்வாறு செய்தால் அவர்களுடைய காரியங்களைக் கர்த்தர் பார்த்துக் கொள்வார். அவருடைய "ஆலயத்திலே ஆகாரம் உண்டாயிருக்கும்படி" அவர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். இந்த "ஆகாரம" அவருக்காக அல்ல. அவருக்கு ஊழியஞ்செய்யும் ஆசாரியர் களுக்காக, லேவியர்களுக்காக! தம்முடைய ஊழியக்காரர்களுக்கு தேவன் எப்படிக் கொடுப்பார்? நம் மூலமாகத்தான! நாமே தராவிடில் வேறு யார் தருவார்? அநேக சபைகள் இந்த ஒரு காரணத்திற்காக மூடப்பட்ட நிகழ்ச்சிகள் நாமறியாதவையா?

இந்த வசனத்தைக் குறித்து ஒருவர் இவ்வாறு எழுதியுள்ளார். "அனைத்து இடங்களிலும், கர்த்தருடைய ஊழியத் திற்குப் போதுமான பணம் இல்லை என்பதை விசுவாசிகளுக்கு நினைவுறுத்த வேண்டியுள்ளது. இது ஏனென்று புரியவில்லை. ஒவ்வொரு தேவைக்கும் தனியாகக் காணிக்கை எடுக்க வேண்டியுள்ளது. அனைவரும் சரியாகக் கொடுத்தால், ஒவ்வொரு தேவைக்கும் தனித் தனியாக காணிக்கை எடுக்க வேண்டி இராதே". அளவற்ற ஆசீர்வாதங்களை அள்ளித் தரும் தேவனுடைய கிருபைக்கு நமது உள்ளங்களில் எத்தகைய இடத்தைக் கொடுக்கிறோம் என்பது இதன் மூலம் விளங்குகிறது. அக்கிருபை நமது உள்ளங்களில் கிரியை செய்யுமானால், இவ்வாறு இருப்போமா? நமது ஆவிக்குரிய வறட்சி துதிக்கையிலும், தியானிக்கையிலும் சபையில் வெளிப்படுவதற்கு இதுதான் காரணம். நாம் சுயநலமுள்ளவர்களாய், இடுங்கிய இதயம் உள்ளவர்களாய், கர்த்தருக்குக் கொடுக்க வேண்டியவைகளை சிறிதானாலும், பெரிதானாலும் கொடாமல் இருப்பதுதான் இந்நிலைமைக்குக் காரணம். நமது உக்கிராணத் துவத்தில் நாம் உண்மையுள்ளவர்களாய் இருக்கிறோமா? (2கொரிந்தியர் 9:8-15). நாம் கொடுப்பதும், அவரிடமிருந்து பெற்றுக் கொள்வதும் நேர்விகிதத்திலுள்ளதைப் புரிந்து கொள்ளுங்கள்.

நாம் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாயிருந்தால், அவர் ஆசீர்வாதத்தை மழை போலப் பொழிவார். நாம் தராவிடில், அவரும் தர மாட்டார். நம்மை நாமே ஆராய்ந்து பார்க்க வேண்டிய நேரமிது. நமக்குத் தரக்கூடிய திராணி இருந்தும் தராமலிருந்தால் நாம் மட்டுமல்ல, நாம் இணைந்திருக்கும் உள்ளூர் சபையும் ஆசீர்வாதங்களை இழந்து போகும்.

காலேபும் யோசுவாவும

கானானை உளவு பார்க்கப் போன இவ்விருவரும் நற்செய்தியைக் கொண்டு வந்தனர். ஆனால் இதர பத்துப் பேரும் ராட்சதர்களைக் கண்டதாகக் கூறி துர்ச்செய்தியைப் பரப்பினர். ஜனங்கள் நற்செய்தியை நம்பாமல், துர்ச்செய்தியை நம்பி கர்த்தருக்கு விரோதமாகக் கலகம் பண்ணினார்கள். நியாயாதி பதியாகிய கர்த்தர் அவர்களுடைய அவிசுவாசத்தின் நிமித்தம் 40 வருடங்கள் அவர்களை வனாந்தரத்தில் அலைய விட்டார். உண்மையற்ற ஜனங்களோடு கர்த்தருக்கு உண்மையாயிருந்த யோசுவாவும், காலேபும் அலைய வேண்டி வந்தது. இன்றும் இதே நிலைதான். சில உண்மையுள்ள விசுவாசிகளும் உண்மையில்லாத பல விசுவாசிகளின் நிமித்தம், பரிபூரணமான ஆசீர்வாதத்தை அனுபவிக்க முடியவில்லை. கர்த்தருக்குத் தராத உண்மை யற்றவர்கள் காரணமாக சபையின் வறட்சியையும், மலட்டுத் தன்மையையும் அவர்கள் அனுபவிக்க வேண்டியுள்ளது.

கர்த்தரை சோதித்துப் பாருங்கள்

தேவனுடைய "ஆசீர்வாதங்களின் ஐசுவரியங்களால்" பரலோகம் நிறைந்துள்ளது. நாம் அவருடைய வார்த்தையைக் கைக்கொள்ளாததால், அவை அடைக்கப்பட்டுள்ளன. "கொண்டு வாருங்கள்... சோதித்துப் பாருங்கள்" என்று கர்த்தர் கூறுகிறார். நாம் உற்சாகமாக முறுமுறுப்பில்லாமல் கொடுக்கும்போது ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும். வானத்தின் பலகணிகளும் திறக்கப்படும். நாம் ஒவ்வொருவரும் இந்தக் கேள்வியைக் கேட்டுக் கொள்வோம். "என்னைச் சார்ந்திருக்கும். ஊழியங்களுக்கும், ஊழியர்களுக்கும் நான் தராவிடில் என்னவாகும்? " நம் நிமித்தம் ஊழியர்கள் வாடலாகாது. ஊழியங்களும் வாடலாகாது. கொடுப்பவர்களுக்குரிய வாக்குத்தத்தங்கள் நமக்கும் உரியவை. எனவே நாமனைவரும் "அவனவன் தன்தன் வரவுக்குத் தக்கதாகக்" கொடுக்க முன்வருவோம். (1 கொரிந்தியர் 16:1-2)

அடிப்படையான ஆசீர்வாதங்களுடன் இணையும் அதிக ஆசீர்வாதங்கள் (வசனம் 11)

கர்த்தருக்கு இஸ்ரவேலர் தசமபாகத்தைச் செலுத்தினால், அவர் வானத்தின் பலகணிகளைத் திறந்து இடங்கொள்ளாமல் போகுமட்டும் ஆசீர்வாதத்தை வருஷிப்பார். அத்துடன் அவர் அருளும் அதிகமான அசீர்வாதங்களை இவ்வசனம் கூறுகிறது.

"நாம் அனுபவிப்பதற்குச் சகலவித நன்மைகளையும் நமக்குச் சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன்", "யாவருக்கும் சம்பூரணமாய் கொடுக்கிறவர்" (1தீமோத்தேயு 6:17; யாக்கோபு 1:5). எனவேதான் அவர், "சிறுமைப்பட்டவனும், எளியவனுமாகிய உன் சகோதரனுக்கு உன் கையைத் தாராளமாய்த் திறக்க வேண்டும்" என்று கட்டளையிடுகிறார். (உபாகமம் 15:11). உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் கர்த்தர் பிரியமாயிருக்கிறர்(2கொரிந்தியர்9:7). அவருடைய பிள்ளைகளாகிய நாம் அவரைப் போலிருக்க வேண்டாமா?

இஸ்ரவேலருக்கு அருளப்படும் கூடுதல் (போனஸ்) ஆசீர்வாதம்தான் என்ன? "பூமியின் கனியைப் பட்சித்துப் போடுகிற வைகளை உங்கள் நிமித்தம் கண்டிப்பேன். அவைகள் உங்கள் நிலத்தின் பலனை அழிப்பதில்லை. வெளியிலுள்ள திராட்சை கொடி பழமில்லாமற் போவதுமில்லை என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது எல்லா ஜாதிகளும் உங்களைப் பாக்கியவான்கள் என்பார்கள்". பூமியின் கனியைப் பட்சித்துப் போடுகிறவைகள் எனும் பதங்கள் ஆபகூக் 3:17-ல் விளக்கப் பட்டுள்ளன. யோவேல் 2:25-லும் கூறப்பட்டுள்ளன. வெட்டுக் கிளிகளும், பச்சைக்கிளிகளும், முசுக்கொட்டைப் பூச்சிகளும்தான் அவை! அவை அத்திமரம் துளிர்விடாமலும், திராட்சை செடிகளில் பழம் உண்டாகாமலும், ஒலிவ மரத்தின் பலன் அற்றுப் போகவும், வயல்கள் தானியத்தை விளைவியாமலும் செய்கின்றன. ஆனால் இஸ்ரவேலர் கர்த்தருக்குத் தசமபாகத்தைச் சரியாகச் செலுத்தினால், அவர் விளைச்சலை அழிக்கும் இவைகளைக் கண்டித்து நிறுத்துவார். பயிர்கள் வாடல் நோயின்றி வளர்ந்து வளம் தரும்.

ஆவிக்குரிய பாடங்கள்:

மேற்கூறப்பட்ட காரியங்களிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய அநேக ஆவிக்குரிய பாடங்களுண்டு. 1தெசலோனிக்கேயர்3:5-6 வசனங்களிலிருந்து பவுலுக்கு விசுவாசிகளின் மேலிருந்த கரிசனையை அறிந்து கொள்ளலாம்.

"ஆகையால் நான் இனி பொறுத்திருக்கக் கூடாமல், எங்கள் வேலை வீணாய் போகத்தக்கதாக சோதனைக்காரன் உங்களை சோதனைக்குட்படுத்தினதுண்டோ என்று உங்கள் விசுவாசத்தை அறியும்படிக்கு அவனை அனுப்பினேன்" என்று எழுதுகிறார். தெசலோனிக்கேயாவிலுள்ள சபை பவுலின் ஊழியத்தால் உண்டானது. அங்கு அவரே நிலத்தைப் பண்படுத்தி, விதைத்து, நட்டு, நீர்பாய்ச்சி அறுவடையும் செய்தார். எனவே அவர் அவர்களுடைய "அன்பின் பிரயாசத்தையும்", "அவர்களிடமிருந்து கர்த்தருடைய வசனம் அவர்களைச் சுற்றிலுமுள்ள பகுதிகளில் தொனித்ததையும்", "ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கு ஊழியஞ் செய்ய அவர்கள் விக்கிரங்களை விட்டு தேவனிடத்திற்கு மனந்திரும்பினதையும்" அறிவார். இவை அனைத்தும் சோதனைக் காரனால் வீணாக்கப்பட்டு விட்டதோ என்றறிய விழைகிறார். அவர்கள் அனுபவித்துக் கொண்டிருந்த உபத்திரவம் அவர்களை விசுவாசத்தை விட்டு விலகச் செய்து விட்டதோ என்று கவலைப்படுகிறார்.(1தெசலோனிக்கேயர் 1:3; 8-10; 2:14-16). என்னே பவுலின் கரிசனை!

பவுல் ஊழியஞ்செய்த இடங்களில் அவருடைய ஊழியங்கள் சத்துருவினால் பாழாக்கப்படுவதை தன் வாழ்நாட்களி லேயே கண்டிருந்தார். தமது நிருபங்களில் சபையில் நிலவிய தவறுகள், கள்ளப் போதகர்கள், பட்சிக்கும் ஓநாய்கள், மாம்சத்தின் கிரியைகள், உலகத்தோடு ஒத்த வேஷங்கள் போன்றவை குறித்து விசுவாசிகளை எச்சரித்து அறிவுரை கூறுகிறார். பூமியின் கனியைப் பட்சிக்கும் புழுக்கள் போல சபையைப் பட்சிக்கும் தீமைகள் இவைதாம். அன்று இருந்தது போலவே இன்றும் இவை சபைக்குத் தீங்கிழைக்கின்றன. ஆவிக்குரிய வளர்ச்சியைக் கெடுத்து சபையில் கனியற்ற தன்மையையும், கண்களின் இச்சையையும், மாம்சத்தின் இச்சையையும், ஜீவனத்தின் பெருமையையும் அவை கொண்டு வந்துள்ளன (1யோவான்2:14-16).

அந்நியநுகத்திலே அவிசுவாசியோடு பிணைக்கப்படுதலும், விசுவாசி அவிசுவாசியை மணம் செய்வதும், உலகத்தின் செல்வாக்கும், வேதவசனத்திற்கு முரணான உறவுகளும், சமுதாயச் சிக்கல்களில் மாட்டிக் கொள்வதும், தேவையற்ற இலட்சிய வெறிகளும், ஐசுவரியத்தின் மேல் அதிகப் பிரியமும், கவலையற்ற, கண் போன போக்கில் வாழ்வதும், சுகசெளகரியங்களை மட்டுமே வாழ்வின் இலக்காய் கொள்வதும் விசுவாசிகளைக்